நவம்பர்---டிசம்பர்---1931.

# பாரதி




மாலை 3. மணி 11-12.

## ஓர் தேசிய
## மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,

ஆசிரியர்.

பிரசுராலயம்:

உத்தமபாளையம்,

மதுரை ஜில்லா.

12 JAN 1932



## போஷகர்கள்

10. ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள், ஜமீன்தார், முனிசிபல் சேர்மன் & M. L. C, போடிநாயக்கனூர்.

11. ,, உ. ம. சே. முகியித்தீன்பிள்ளை ராவுத்தர் அவர்கள், மானேஜர், T. C P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., கோம்பை.

12. ,, ந. ராமராஜ் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்.

13. ,, K. பண்டார் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பனி, Ltd, பிராஞ்சு, போடிநாயக்கனூர்.

14. ,, K. M. அகமது மீரா அவர்கள், மிராஸ்தார், உத்தமபாளையம்.

15. ,, ராவ்சாகிப் A. S. அழகணன் செட்டியார் அவர்கள், மிராஸ்தார், மெம்பர், ராமேஸ்வரம் தேவஸ்தானக் கமிட்டி & M. L. C., போடிநாயக்கனூர்.

16. ,, C. A. A. அப்துல் ரஹீம் ராவுத்தர் அவர்கள், மிராஸ்தார் & ஜில்லாபோர்டு மெம்பர், கம்பம்.

17. ,, K. முத்துச்சாமி ரெட்டியார் அவர்கள், மிராஸ்தார், லக்ஷிமிநாயக்கன்பட்டி, தேவாரம் P. O.

18. ,, ஆ. ஆத. இராமனுதத் தேவர் அவர்கள், மிராஸ்தார், ஆதியாகுடி, புளியால் P. O., தேவகோட்டை,

19. ,, நா. பூ. வேனுத் தேவர் அவர்கள், மிராஸ்தார், சிறுநல்லூர், திருவேகம்பத்து P. O., தேவகோட்டை.

20. ,, பி. மு. முத்துவேல் உடையார் அவர்கள், மிராஸ்தார், அதங்குடி, புளியால் P. O., தேவகோட்டை.

21. மெஸ்ஸர்ஸ். V. S. ராமலிங்கம் செட்டியார் & பிரதர்ஸ், கோம்பை.

22. ஸ்ரீமான் P. S. குமாரசாமி ராஜா அவர்கள், ராஜபாளையம்.

23. மெஸ்ஸர்ஸ். திர. ரா. அண்டு பிரதர் சன்ஸ், கோம்பை.

---

குறிப்பு:— போஷக சந்தா குறைந்தது ரூபாய் 100.

# "பாரதி" பொருள் அடக்கம்.

மாலை 3. நவம்பர்–டிசம்பர் 1931. மணி 11–12.


| தொடர் எண். | | பக்கம். |
|---|---|---|
| 1. | சக்தி— ... ... | 673 |
| 2. | அன்னையின் அடிமைத் தளை—திரு. பண்டித K. அப்துல் சுகூர் சாகிப் அவர்கள் ... | 674 |
| 3. | திருவாங்கூர் அரசரின் மகுடாபிஷேகம்—ஆசிரியர், 'பாரதி' | 675 |
| 4. | பத்திரிகையாலாய பயன்—திரு. பண்டித பா. பக்கிரிசுவாமி செட்டியார் அவர்கள் ... | 678 |
| 5. | ஸ்ரீ அரவிந்தரும் யோகாஸ்ரமும்—திரு. சுத்தானந்த பாரதியாரவர்கள் ... | 681 |
| 6. | தமிழருக்கு ஒரு வேண்டுகோள்—திரு. N. வேங்கடரமணன் அவர்கள் ... | 694 |
| 7. | லைலி மஜ்னூன்— ... ... | 699 |
| 8. | இனி நாம் செய்ய வேண்டுவ தென்?—திருச் செல்வி கண்ணம்மாள் இராசமாணிக்கம் அவர்கள் ... | 718 |
| 9. | மனந் தளரேல்—ஸ்ரீமான். பா. ஆதிமூர்த்தி அவர்கள் | 721 |
| 10. | ஜக்லுல் பாஷா—திரு. N. வேங்கடரமணன் அவர்கள் | 722 |
| 11. | பண்டிதை இராமா பாய்—திருமதி. அ. பொன்னம்மாள் அவர்கள், B. A., L. T. | 726 |
| 12. | முயற்சியும் உடற் பயிற்சியும்—திரு. லெ. சோமசுந்தரம் அவர்கள் ... | 730 |
| 13. | ஒரு வீரப் பெண்மணியின் தேச பக்தி—திரு. கே. வெங்கடராவ் அவர்கள் ... | 734 |
| 14. | ஹரித்துவார குருகுலம்—ஆசிரியர், 'பாரதி' ... | 739 |
| 15. | ஆசிரியக் குறிப்புகள் ... ... | 748 |
| 16. | ஆராய்ச்சி மேடை ... ... | 758 |


## படங்கள் 18.


1. H. H. திருவாங்கூர் மஹாராஜா, 2. H. H. திருவாங்கூர் மஹாராணி ரீஜெண்ட் அவர்கள், 3. சாண்டோ. லெ. சோமசுந்தரம், 4. ஸ்வாமி சிரத்தானந்தா அவர்கள், 5. ஸ்ரீ ஆச்சார்ய ராம் தேவாஜி (தலைமை ஆசிரியர்), 6. குருகுல கங்கேரி புத்தகசாலை, 7. வடமதுரையில் சுவாமி தயானந்தா, 8. குருகுல மாணவர்கள் ஹாக்கி என்னும் விளையாட்டுக் குருந்தடியால் புலியை அடித்துக் கொன்றுவிட்ட காக்ஷி, 9. குருகுல கங்கேரி சர்வகலாசாலையின் பட்டதாரிகளான பண்டித இந்திராவும் பண்டித ஹரிச்சந்திராவும், 10. புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பெற்ற மாணவர்கள், 11. குருகுலத்திலுள்ள சமையலறைக்கு முன்னால் நின்றுகொண்டிருப்பது மாஜி கவர்னர் லார்ட் மெஸ்டன் அவர்கள், 12. கைத்தொழில் அறையில் பிரமச்சரியர்களான மாணவர்கள் வேலை செய்தல், 13. பிரமச்சரிய மாணவர்கள் ஆசிரியர் இன்ஹா அவர்களுடன் குருகுலத்திலுள்ள தோட்டத்தில் வேலை செய்தல், 14. குருகுலத்திலுள்ள யக்ஞசாலை, 15. சில குருகுல பட்டதாரிகளுக்கு இடையில் ஸ்ரீ சுவாமி சிரத்தானந்தா அவர்கள் வீற்றிருத்தல், 16. குருகுலப் பேராசிரியர்கள், 17. தாமஸ் ஆல்வா எடிசன், 18. திருமலைச்சக்கு கௌடர்.

# பாரதி

## ஓர் தேசீய மாதப் பத்திரிகை.

"எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர்இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்."—பாரதி.

ஆசிரியர்: ரா. நாராயணசுவாமி

ஸ்ரீ

உத்தமபாளையம்.

Copy Right] [Registered.

மாலை 3 | பிரஜோற்பத்தி ஐப்பசி-கார்த்திகை 1931-௵ நவம்பர்௴ | மணி 11


## சக்தி.

1\. துன்ப மிலாத நிலையே சக்தி
    தூக்க மிலாக்கண் விழிப்பே சக்தி
அன்பு கனிந்த கனிவே சக்தி
    ஆண்மை நிறைந்த நிறைவே சக்தி
இன்ப முதிர்ந்த முதிர்வே சக்தி
    எண்ணத் திருக்கு மெரியே சக்தி
முன்புநிற் கின்ற தொழிலே சக்தி
    முக்தி நிலையின் முடிவே சக்தி.

2\. சோம்பர் கெடுக்கும் துணிவே சக்தி
    சொல்லில் விளங்கும் சுடரே சக்தி
தீம்பழந் தன்னில் சுவையே சக்தி
    தெய்வத்தை எண்ணு நினைவே சக்தி
பாம்பை யடிக்கும் படையே சக்தி
    பாட்டினில் வந்த களியே சக்தி
சாம்பரைப்பூசி மலைமிசை வாழும்
    சங்கர னன்புத் தழலே சக்தி.

3\. வாழ்வு பெருக்கு மதியே சக்தி
    மாநிலங் காக்கும் வலியே சக்தி

178541



தாழ்வு தடுக்குஞ் சதிரே — சக்தி
சஞ்சல நீக்குந் தவமே — சக்தி
வீழ்வு தடுக்கும் விறலே — சக்தி
விண்ணை யளக்கும் விரிவே — சக்தி
ஊழ்வினை நீக்கும் உயர்வே — சக்தி
உள்ளத் தொளிரும் விளக்கே — சக்தி.

—பாரதியார்.

---

# அன்னையின் அடிமைத் தளை

திரு பண்டித. K. அப்துல் சுகூர் சாகிப் அவர்கள்.

(தீண்டக் கூடாதா சாமி தொடக் கூடாதா என்ற மெட்டு)

அடிமைப் பட்டனளே பெரும்
அவதி யுற்றனளே—அன்னை (அடிமை)

1. பிறநாட்டுப் பொருள்களின்மேற் பேணியாசை வைத்ததனால்
உரநாட்டும் பாரதத்தாய் உலையின் மெழுகாயுருகி (அடிமை)
2. பெண்மக்கள் சுதந்திரத்தைப் பிரியமுடனே யளிக்க
மண்மக்கள் மறந்ததினால் மாண்புமிகும் பாரதத்தாய் (அடிமை)
3. தீண்டாமை யென்றுசொல்லி தேசமக்கள் தனையொதுக்கி
வேண்டாமை செய்ததினால் வீரமிகும் பாரதத்தாய் (அடிமை)
4. சாதிப்பகுப்பினிலே சார்ந்துபெரும் பூசல் செய்தே
வாதிட்டு நிற்பதனால் வண்மைமிகும் பாரதத்தாய் (அடிமை)
5. பாவைகளைக் கல்வியின்றி பாவைகளாய்ச் செய்தடிமைத்
தேவைகளுக் காய்ப்பணித்த செய்கையினால் பாரதத்தாய்(அடிமை)
6. தாய்மொழி தனை வெறுத்துத் தமிழின்சுவையை யொறுத்துப்
பேய்மொழி தனக்கடிமை பெற்றதனால் பாரதத்தாய் (அடிமை)
7. அன்னிய நாட்டுத் தாய்மார்கள் அரியாசனமிருக்க
பன்னுபுகழ் பாரதத்தாய் பாதத்தினிற் றளைபிணித்தே (அடிமை)
8. நஞ்சருந்துவார்களைப் போல் நாசந்தரு கள்ளருந்தி
வஞ்சகத்தொழில் புரிந்து வாழ்ந்ததினால் பாரதத்தாய் (அடிமை)
9. அஞ்சாநெஞ்சம் படைத்து ஆண்மைகளெலாம் விடுத்துப்
பிஞ்சில் பழுத்தேமக்கள் பேடிகளாய் வாழ்ந்ததினால் (அடிமை)
10. நல்லாடையாங் கத்தரின் நன்மையுணரா தன்னியர்
மல்லாடை மோகத்திலே மயங்கியதால் பாரதத்தாய் (அடிமை)
11. சாரமொடு கல்விநலஞ் சார்ந்து மக்களையுயர்த்தும்
"பாரதி"யை மறந்த பண்பதனால் பாரதத்தாய் (அடிமை)

---

# திருவாங்கூர் அரசரின் மகுடாபிஷேகம்

ரா. நாராயணசுவாமி, ஆசிரியர், "பாரதி."

நீர் வளம், நில வளம், மலை வளம் முதலிய வளங்களால் சிறந்து விளங்குவதும், எங்கும் காண்பதற்குப் பச்சைப் பசேலென்று மிளிறுவதும், கண்டவர் கண்களைக் கவரும் தன்மையான இயற்கை வனப்புகளோடு இலங்குவதும், மேற்குத் தொடர்ச்சி மலைகளால் அலங்கரிக்கப் பெற்றதுமான தரும பூமி, திருவிதாங்கோடு, சேர நாடு, வஞ்சி தேசம், திருவடி தேசம், பரசுராம க்ஷேத்திரம், கேரளம், மலையாளம் அல்லது ராமராஜ்யம் என்று சொல்லப்பட்ட திருவாங்கூர் சமஸ்தானம் பண்டைக் காலத்திலிருந்து புகழ் பெற்றது. இந்தியாவில் மகா புராதன ராஜ்யங்களில் திருவாங்கூரும் ஒன்றாகும். பிரக்யாதி பெற்ற அநேக மன்னர்களாலும் சக்திவாய்ந்த சில இராணிகளாலும் திறமையுடன் இந்த இராஜ்யம் பரிபாலிக்கப்பட்டு வந்தது. இப்பொழுதும் அப்படியே.

மேன்மை வாய்ந்த மூலம் திருநாள் மகா ராஜா அவர்கள் 40 வருஷ அரசாட்சி செய்து, 1924-ம் ௵ ஆகஸ்ட் ௴ ஆண்டவன் அடியை அடைந்து விடவே, இப்பொழுது மகுடாபிஷேகம் பெற்ற கனந் தங்கிய சித்திரைத் திருநாள் மகா ராஜா அவர்கள் பட்டம் அடைந்தார். மேன்மைவாய்ந்த சித்திரைத் திருநாள் ஸ்ரீ பத்மநாபதாச வஞ்சிபால ராமவர்ம குலசேகர கீரீடபதி மன்னே சுல்தான் மகாராஜ ராஜ ராமராஜ பகதூர் ஷாம் ஷர் ஜங் என்பதே இந்த இராஜாவின் முழுப் பட்டப் பெயர். 1912-ம் ௵ நவம்பர் ௴ 7௳ யன்று பிறந்து 1924-ம் ௵ செப்டெம்பர் ௴ 1௳ பட்டம் பெற்றார். அவர் சிறியவரா இருந்ததால், தனது பெரிய தாயாரான மூத்த இராணி மேன்மை தங்கிய சேதுலட்சுமி பாய் அரசப் பிரதிநிதி இராணியாக (மஹா ராணி ரீஜெண்ட்) நியமிக்கப் பெற்றார்.

காலஞ் சென்ற மே. வா. ஸ்ரீ மூலம் திருநாள் மகா ராஜா அவர்கள் தனக்கு வாரிஸ் இல்லாததால் 1900-ம் ௵ல் ஸ்ரீமதிகள் சேது லட்சுமி பாயையும், சேது பார்வதி பாயையும் ஸ்வீகாரம் செய்து கொண்டார். இப்பொழுதிருக்கும் திருவாங்கூர் அரசர் இளைய இராணியின் புத்திரராகும். மே. த. சேதுலட்சுமிபாய் ராணி அவர்கள் செவ்வையாய் 7 ஆண்டுகள் செங்கோல் நடத்திவந்தார்கள். இவர் இந்து ஆலயங்களில் நடக்கும் பலிகளைச் சட்டத்தால் தடுத்து நிறுத்தி விட்டார். கோவில்களில் வேலை செய்துகொண்டு வந்த தேவதாசிகளையும் நீக்கிவிட்டார். ஸ்ரீ மூலம் பிரஜா சபையிலும் சட்டசபையிலும் மாதர்களை அங்கத்தினர்களாக நியமித்தும், சிலருக்கு ராஜ்ய உத்தியோகங்கள் கொடுத்தும் மாதர் சுதந்திரத்திற்கு உதவியிருக்கிறார். அச் சமஸ்தானத்தின் வைத்திய இலாகாவின் தலைமைப் பதவியைக் கொஞ்ச காலத்திற்கு டாக்டர். பொன்னன் லூகோஸ் என்ற பெண் மணிக்குக் கொடுத்து மாதர் உரிமையைச் சிறிது பலப்படுத்தினர். வைக்கம் சத்தியாக்ர விஷயத்தில் அன்புடன் ராணியார் நடந்து கொண்டது பாராட்டத்தக்கது. கல்வி முதலிய குடிகளின் முன்னேற்ற விஷயங்களில் அதிக கவனம் செலுத்தி அதிக வேலை செய்திருக்கிறார். ஆண்டு 1-க்கு 42 லட்சம் ரூ. கல்விக்காக இங்கு செலவு செய்யப்படுகிறது. நமது தேசத்தில் திருவாங்கூர் சமஸ்தானமே கல்வியில் அதுவும் பெண் கல்வியில் முதன்மை பெற்று விளங்குகிறது. வட இந்தியாவில் போபால் சமஸ்தானத்து முஸ்லீம் பெண்ணரசி எவ்வளவு நன்கு அரசாட்சி செய்து வந்தாரோ அவ்வாரே திருவாங்கூரில் இம் மாதரசியாரும் ஆற்றலுடன் ஆண்டு வந்தார்கள். இவரது 7 வருட ஆட்சியில் அநேக நற் காரியங்களைச் செய்திருப்பது போற்றுதற்குரியதே யாகும். இந்த இராணியாரது ஆட்சி பொன்னரசாகவே பிரகாசித்தது.

திருவாங்கூரின் இப்பொழுதிய அரசர் ஸ்ரீ சித்திரைத் திருநாள் அவர்களின் நற் குணத்திற்கும் நல்ல பழக்க வழக்கங்களுக்கும் காரணம் அவரது மூத்த அன்னையாம் இராணி மாதா இவரைப் பற்றி எடுத்துக்கொண்ட பிரத்தியேகக் கவனிப்பே. சுதேச பாஷையான மலையாள பாஷையிலும் சமஸ்கிருத பாஷையிலும் இவருக்கு நல்ல ஆற்றல் உண்டு சித்திரக் கலைகளிலும் இவருக்கு வெகு பிரியம். இந்தியன் சிவில் உத்தியோக வர்க்கத்தைச் சேர்ந்தவரும் சென்னை



இலக்கிய சங்கத்தின் (Madras Literary Society) காரியதரிசியும் சில புஸ்தகங்களின் ஆசிரியருமான ஸ்ரீ டாட்வெல் அவர்களால் இளைய அரசருக்கு ஆங்கிலம் கற்பிக்கப்பெற்றது. இவர் இளவரசரின் எதிர்காலப் பொறுப்பை நன்குணர்ந்து, அவருக்கு வெகு கவனத்துடன் போதித்தார். ஸ்ரீமான் டாட்வெல் தனது உத்தியோகத்திற்குச் செல்லவே, காப்டன் ஹார்வி அவருக்கு ஆசிரியராக அமர்ந்தார். இவரும் வாலிப மன்னருக்கு நல்ல முறையில் தக்க பயிற்சி கொடுத்துப் போதித்தார். இந்த இரண்டு ஆசிரியர்களின் போதனைகளினால் அரசர் கல்வியிலும், பொது அறிவிலும், விஷயதாரதம்மியங்களிலும் சிறப்புற்று விளங்குகிறார்.

1929-ம் ௵ல் மகா ராஜா வட இந்தியா முழுவதிலும் பிரயாணம் செய்து, பல சுதேச மன்னர்களுடன் அறிமுகமானர், இவருக்குப் போதியபடி நிர்வாகப் பயிற்சி அளிக்க வேண்டுமென உத்தேசித்து, சென்னை கலெக்டர் ஸ்ரீமான் பி. ஸி. தத் அவர்களின் உதவி 1930-ம் ௵ல் வேண்டப்பட்டது. அவருடன் சென்ற 1½ வருஷ காலமாக இவர் இருந்து மைசூர் சமஸ்தானம் முற்றிலும் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டும், அங்கு ஒவ்வொரு இலாகாவிலுமுள்ள விஷயங்களை உற்சாகத்தோடு கவனித்துக் கொண்டும் அனுபவம் பெற்றார். மேலும், பிரிட்டிஷ் இந்தியாவில் சில ஜில்லாக்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்து காரியங்களைக் கவனித்தார். சென்ற 2 மாத காலமாகத் தனது சமஸ்தானத்தின் சிறிய பெரிய விஷயங்களையும் ஆழ்ந்து பார்த்து ஒவ்வொரு இலாகாவையும் நன்கு கவனித்திருக்கிறார். இவ்வாறு பல விடங்களில் பயிற்சியும் அனுபவமும் பெற்றிருக்கிறபடியால், ஒவ்வொரு காரியத்தையும் தானகவே செய்யவோ தீர்மானிக்கவோ இவருக்கு ஏற்ற சக்தி ஏற்பட்டிருக்கிறது.

## மகுடாபிஷேகம்

சகல வைபவங்களுடனும், பெரும் முழக்கத்துடனும், மங்களத்துடனும் 18 வயதுள்ள மகா ராஜாவிற்கு 6—11—1931-ம் ௵ல் மகுடாபிஷேகம் நடந்தேறியது. அத் தருணத்தில் மகா ராஜா அவர்கள் பிரசங்கம் செய்ததின் ஒருபாகமாகவது:– "கல்வி முதலிய பல துறைகளிலும் திருவாங்கூர் முன்னேற்றம் அடைய வேண்டுமென்பதே எனது அவா. ஈஸ்வர கிருபையால் எனது பிரஜை

# பத்திரிகையாலாய பயன்.

திரு. பண்டித பா. பக்கிரிசுவாமி செட்டியார் அவர்கள்.

ஒரு நாடு கல்வி அறிவில் மிக வேண்டுமானால், செல்வ நிலையில் சிறக்க வேண்டுமானால், ஏன் எவ்வகையிலும் சீர்பெற வேண்டுமானால், அந்நாட்டினர் தேசாபிமான முடையவரா யிருத்தல் வேண்டும். தேசாபிமானிகளாய்த் திகழப் பத்திரிகாபிமானம் மிகவும் இன்றியமையாதது. நாட்டு மக்களைத் தட்டி எழுப்பி, தேசிய வீரராக்கி, நாட்டின் முன்னேற்றத்திற்கான நானா வழிகளிலும் அறிவைப் போக்கி நன்மையுற்று வாழுமாறு செய்வதற்குப் பத்திரிகைகளே உரிய கருவிகளாம். முன்னேற்ற முற்ற எந்த நாடும் பத்திரிகைகளாலன்றி அந் நிலையை அடைந்திருக்க முடியாது. ஐரோப்பிய நாடுகளில் செல்வப் பொருளும், கல்விப் பொருளும் செழித்திருப்பதற்கு அந் நாடுகளில் எண்ணிறந்த பத்திரிகைகள் தோன்றி இருப்பதும், அவற்றைத் தமது முக்கிய கடமைகளி லொன்றெனக் கருதிப் பொறுப்போடு ஆங்கிலர் படிப்பதுவுமே காரணமென்று கூறலாம். மேனாடுகளில் இன்பத்தில்

---

களின் அன்பைப் பெறுவதற்கான காரியங்களை நான் செய்ய முடியும் என்று நம்புகிறேன். சகல வகுப்பினரும் முன்னேற்றமடைந்து க்ஷேமமாக வாழ வேண்டுமென்பதே எனது கோரிக்கை. எனது பிரஜைகளிடை அமைதியும் க்ஷேமமும் நிலவும்படி செய்தால்தான், நான் எனது கடமையைச் சரிவரச் செய்தவனாவேன்.”

புதிதாக கிரீடம் தரித்த இம் மகா ராஜா அவர்களுக்கு சகல சம்பத்துக்களும், வாழ்வில் வெற்றியும், அவரது ஆதரவான நீதியான ஆட்சியில் அந் நாட்டுக் குடிகளுக்கு செல்வமுண்டாகி, சந்தோஷம் ஜெனித்து, சாந்தி நிலவி அவர்கள் சௌக்கியத்துடன் வாழும்படி கருணை பாலிக்குமாறு முழுமுதற் கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

---



திளைத்திருக்கும் பணக்காரர் முதல் அன்றாடம் நெற்றி வியர்வை நிலத்தில் விழக் கூலி வேலை செய்து துன்பத்தில் தோய்ந்திருக்கும் ஏழை வரையில் தேச நலத்தில் கருத்துடையவராய் நாடோறும் பத்திரிகை படிக்கிறார்கள். அவசர வேலைகளிலும் தினசரிப் பத்திரிகை படிக்கத் தவறுவதில்லை என்றால், அவர்களின் பத்திரிகாபிமானத்தை என்னென்று எடுத்துரைப்பது?

நம் நாட்டவரோ, பெரும் பகுதியாக இந்த இருபதாம் நூற்றாண்டிலும் உலக நடப்பை உணர விரும்பாமல், கிணற்றுத் தவளைகளாகக் காலங் கழிக்கின்றனர். நம் நாட்டிலே பத்திரிகை படிப்போரின் தொகை மிக மிகக் குறைவாக இருக்கின்றது. இங்குக் கல்வியும், செல்வமும் வாய்ந்த கனவான்களிலேயே பலர் பத்திரிகை வாசிக்க எண்ணுவதுமில்லை என்றால், இரு நிதியுமில்லாத ஏழைகளைப் பற்றிக் கூறுவானேன்? உடல் வளர்ச்சிக்கு உணவை எவ்வளவு அவசியமாகக் கருதுகிறார்களோ அதுபோல, அறிவுப் பெருக்குப் பத்திரிகை இன்றியமையாததென்றெண்ணி, நம்மவர் பத்திரிகை படிக்க முன்வராத வரையில் நாட்டின் முன்னேற்றம் பின்னேற்றமாகவே முடியும். தேச வளர்ச்சியைத் தேடும் ஒவ்வொரு தனி மனிதனும் பத்திரிகை படித்தலைத் தனது முக்கியக் கடனாகக் கொள்ளல் வேண்டும்.

நம் நாட்டின் இன்றைய நிலையில் எத்தனைப் பத்திரிகைகள் வெளிவரினும் அவை அனைத்தும் வேண்டற்பாலனவேயாம். ஆனால், நம் நாட்டில் இதுகாறும் தோன்றிய பத்திரிகைகளனேகம். அவற்றில் சில நாள் வெளிவந்து மறைந்தன பல. பல்வித இடையூறுகளில் சிக்குண்டு ஒருவாறு நடைபெறும் பத்திரிகைகளும் சில உண்டு. ஒரு சில பத்திரிகைகள் மாத்திரம் இன்றளவும் தீவிரமாக நின்று உழைத்து வருகின்றன. இவ்வாறு பத்திரிகைகள் தொடங்கிய சின்னாட்களில் நின்றுவிடுவதற்கும், செவ்வனே உலவுவதற்கும் முக்கிய காரணம் மக்களே என்பது சொல்லாமலே விளங்கும். மக்கள் எவ்வளவுக்கெவ்வளவு சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து பத்திரிகைகளை ஆதரிக்கின்றார்களோ, அவ்வளவுக் கவ்வளவு பத்திரிகைகள் அபிவிருத்தியடையுமென்பது திண்ணம்.

## “பாரதி”க்கு வாழ்த்து

சென்ற இரண்டு ஆண்டுகளாகப் ‘பாரதி’ எனும் பெயரிய மாஸிகை மதுரை ஜில்லா உத்தமபாளையத்திலிருந்து உதித்து எங்

களும் உலவி வருவதை உலகம் உணரும். சோதரர். ரா. நாராயண சுவாமியார் இப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்து சேவை செய்வது இதன் பெருமையைப் பெருக்குவதாகும். சில்லாண்டுகட்கு முன்னர், உயர்திரு. வ. வெ. ஸு. ஐயரை ஆசிரியராகக் கொண்டு 'பால பாரதி' என்ற பத்திரிகை தீவிரமாகப் பணியாற்றியதைத் தமிழுலகம் இவ்வளவு விரைவில் மறந்திருக்காதென்று நினைக்கின்றேன். இதுகாலை 'பாரதி' என்னும் பெயர் புனைந்து வெளிவரும் இப் புது 'பாரதி'யும் அன்னை பாரதியின் அடிமைத் தளையை யகற்ற அருந்தொண்டாற்றி வருவதை அன்பர்கள் அறிவார்கள். நாட்டிடைச் சாதிப் பூசல், சமயச் சண்டை, ஆண்—பெண் பிணக்கு முதலிய இன்னோரன்ன பிளவுகளும், அவற்றால் அல்லலும் மிகுந்திருக்கும் இது சமயம் சமரசம், சன்மார்க்கம் என்னும் இரண்டு தத்துவங்களையும் 'பாரதி' தனது இரு நுரை யீரல்களாகக் கொண்டு, எல்லா மதங்களும், எல்லா வகுப்புகளும், எல்லா உயிர்களும் ஒரு திருமேனியின் உடல்; ஒரு குளத்திற்குப் பல படித்துறைகளிருப்பினும் நீர் ஒன்றே; அதுபோல் ஆண்டவன் ஒருவன், மனிதன் மனம் வேறுபட்டால் வெவ்வேறு வகை வகைப்படுவதாகத் தோன்றுகின்றான், மனம் ஒன்றுபட்டால் எல்லாம் ஒன்றே, 'ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்' என்ற உயரிய நோக்கங்களோடு வெளிவருவது கண்டு பெரு மகிழ் வெய்துகின்றேன். 'பாரதி' அளிக்கும் பொருள்களனைத்தும் மிக்க பயன்தருவனவாயும் படிப்போர்க்கு உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்கத் தக்கனவாயு மிருத்தல் போற்றற்பாலது. யாவர்க்கும் பொதுவாய் நின்று ஆங்காங்குக் காணப்படும் குறைகளை எடுத்துக் கூறி நடுநிலைமை வகிப்பது பிற எல்லாப் பத்திரிகைகளிலும் காணப்படாத தொன்று. நாட்டின் நிலையை உள்ளவாறு ஆய்ந்து தெள்ளென வகுத்தோதும் செவ்விய பத்திரிகைகள் இல்லையே யென்ற குறையை 'பாரதி' நிறைவு செய்கின்றது. மக்கள் யாவர்க்கும் சீர்திருத்த நோக்கத்தையும், அறிவு விருத்தியையும் புகட்டித் தேசியத் தேனமுத மூட்டும் 'பாரதி' வளர் பிறையென வளர எல்லாம் வல்ல இறைவன் அருள் சுரப்பானாக. பல்வேறு வழிகளிலும் ஆக்கமுற்றுள்ள இச் சீரிய செந்தமிழ்ப் பத்திரிகையைத் தமிழர் ஒவ்வொருவரும் ஆதரித்தின்புற வேண்டுமென்பதை யான் சொல்லவும் வேண்டுமோ?

—— ——





H. H. திருவாங்கூர் மஹாராணி ரீஜெண்ட் அவர்கள்.

# ஸ்ரீ அரவிந்தரும் யோகாஸ்ரமும்.

## திரு. சுத்தானந்த பாரதியாரவர்கள்.

எல்லையற்ற பாரதம் இன்ப யோக சக்தியிற்
பல்லுலகைத் தாங்கியே பைந்தமிழி லோங்குதே!
எல்லாம் வல்ல தேவியே எங்களன்னை யப்பனும்
எல்லாம் வல்ல தேவிக்கே எங்களாவி யன்பெலாம்!

### இங்கு யாருக்கு இடம்?

யாருக்கு ஆத்ம சுதந்திரம் வேண்டுமோ, யாருடைய ஆவி கடவுளருளை நோக்கித் தீயெழும் ஆர்வமுடன் சுடரோங்குகிறதோ, யார் உடல் பொருள் ஆவி முழுதையும் சற்றும் பின்வாங்காமல், கரவாமல், மாறின்றி, தேவியின் பாதத்தில் வைக்கத் துணிகின்றார்களோ, யாருக்கு தெய்வ சக்தியே எல்லாமோ, யார் முற்றும் தன்னலமறுப்புள்ளவர்களாய், இவ்வுலக சுகத்தையும், மோட்ச விருப்பையும், தன்னலத் தவ சித்தியையும், வரம் வேண்டுமெனும் வேட்கையையும், சாதி, மத, நிற, சமயப்பற்றுகளனைத்தையுந் துறந்து எல்லாம் தேவியே, எல்லாம் சக்தியே, அவளின்றி எதுவுமில்லையென்று அடைக்கலம் புகுகின்றார்களோ அவர்களுக்கு இதுவே பூலோக வைகுண்டம்; இதுவே அகண்ட ரஸலீலைவட்டம். தன்னலம், ஆசை, வேற்றுமை, பொறாமை, சிறுமை, மதவெறி, சாதிநோய், அடிமைப்பேய் பிடித்தவர்களுக்கு இதிற் சிறிதும் இடமில்லை. மனத்தில் சிறிது நான் என்னும் அகந்தையுள்ளவர்க்கும் இது இடமில்லை. தன்னது என்று தன்னலத்துடன் எப்பொருளை ஒளித்து வைப்பவர்களுக்கும் இங்கு இடமில்லை. இது ஆண்டவன் உலகு; யோகசக்தி நிலையம்; விஸ்வ ஸமுதாயத்தின் தலைநகர். இங்கு உலகெல்லாம் ஆண்டவனன்பிலிணைந்து சாதி, சடங்கு, திவசம், திதி, புரோகிதம், கோவில், சர்ச்சு, மசூதி, சாத்திரம், நூல் முதலிய எவ்விதமான கட்டுப்பாடுமின்றி வசிக்கலாம். எல்லா ஸம்ஸ்காரப் பீடைகளையும் கழற்றி யெறிந்து ஆண்டவனுக்கே அனைத்தையும் துறந்த தீரர்களே இங்குள்ளவர்கள். அவர்களுக்கே

இங்கு வருதற்கு உள்ளெழுச்சி பிறக்கும். இங்கு எவரும் வலிய அழைக்கப்படுவதில்லை. பகட்டு, விளம்பரம் இவை இங்கு வெறுக்கப்படுகின்றன. ஆண்டவன் எவருக்கு உள்ளழைப்பு விடுகிறானோ அவர்கள் இங்கு தானே வருவர். இங்கு எவ்விதமான உபதேசம், போதனை, பேச்சு, ஆசன பிராணாயாம விதிகளும் கிடையாது. ஆண்டவனைச் சரணமடைந்து அகந்தைப் பேயை யடித்தோட்டி, கீழியல்பை மாற்றி தெய்வ வாழ்விற்குப் பூரணப்படுவதொன்றே இங்கு வேலை. அதைத் தவிர வேறு எண்ணம் எவருக்குமில்லை. தானே சரணடைவர்! ஆண் பெண் என்ற மூட வேற்றுமை ஈண்டு இல்லை. ஆனால் ஆண் பெண் உறவில் பாழும் உலக வாசனை சற்றும் கிடையாது. பூரண ப்ரம்மச்சரியம் இந்த வாடை பட்டவுடனேயே இருவருக்கும் மலர்ந்துவிடும். கடவுளுணர்விலேயே இருவரும் மனவுறவு கலந்து வாழ்வர். ஆண்களுக்கு எத்தகைய சுதந்திரமோ அது பெண்களுக்கும் உண்டு. சித்த சுத்தம், ஆத்ம சுதந்திரம், தெய்வ ஸமத்வம் இதுவே இக்காற்றின் பல்லவி. ஆனால் இங்குள்ள காற்றின் அணுத்திரள்கள் தெய்வத்தால் இயக்கப்படுவன. தெய்வ சக்தியின்றி இங்கு மூச்சு விடமுடியாது. நாஸ்திகரும், வீண் வாதம் பேசுவோரும், நம்பிக்கையற்றவரும், இதில் உண்மை உண்டோ இன்றோ என்று மனித புத்தியைக்கொண்டு ஆழம் பார்ப்போரும் இந்த தங்குதற்கிடமில்லை, பயனில்லை! தெய்வம் நாராயணனாக பூரண யோக சக்தி பெற்று நம்மை நடத்துகின்றது என்ற நம்பிக்கையுள்ளவர்களுக்கே இது இடமும் பயனும் மென்மேலும் தரும். நம்பிக்கையுள்ள அன்பருக்கு என்றும் நலம் வளர்பிறைபோலாகும். இதுவே அரவிந்த யோகாசிரமம். இவ்வாசிரமக் குரு தேவனைப்பற்றிச் சில மொழிகள் சுருக்கிக் கூறுவோம்.

## ஸ்ரீ அரவிந்தர் சரிதைச் சுருக்கம்.

ஸ்ரீ அரவிந்தர் 15—8—1872-ல் கல்கத்தாவில் பிறந்தார். எழுவயதில் தனது மூத்த சகோதரருடன் படிப்பிற்காகச் சீமைக்கு அனுப்பப்பெற்றார். அவர் தகப்பனார் ஊறிய மேனாட்டுப் பழக்கமுள்ளவர். அது அக்காலத்தில் நாகரீகமாகக் கருதப்பட்டது. அதிலும் வங்காளத்தில் ஆங்கில நடை ஜெஜ்ஜலாட்டமாடியது! சீமையில் அரவிந்தர் 14 ஆண்டுகள் கல்வி பயின்றார். முதலில் மாஞ்செஸ்டரில் ஒரு பாதிரியார் வீட்டில் வளர்க்கப்பட்டு, 1885-ல் லண்டன் செண்டு பால் பள்ளியில் படித்தார். 1890-ல் உயர்ந்த தொல்லிலக்கிய வெகுமானச் சம்பளத்துடன் (Senior Classical Scholarship) கேம்பிரிட்ஜ் கிங்ஸ் காலேஜில் சேர்ந்து இரண்டு வருஷங்கள் பயின்றார். 1890-ம் ஆண்டிலேயே இந்தியன் சிவில்



ஸர்விஸ் போட்டிப் பரீட்சையில் மதிப்புறத் தேறினார். ஆனால் இரண்டாண்டு பயிற்சிக்குப் பின் குதிரை சவாரிப் பரீட்சைக்குச் செல்லத் தவறிவிட்டதால் ஐ. ஸி. எஸ். வேலைக்கு எடுக்கப்படவில்லை. அப்போது பரோடா மன்னர் சீமையிலிருந்தார். அரவிந்தரின் சூடிகையையும் புத்தி கூர்மையையும் கண்டு தனது அரசியற் சேவகத்தில் அவரை நியமித்து, இந்தியாவிற்கு அழைத்துச் சென்றார். 1893 பிப்ரவரியில் ஸ்ரீ அரவிந்தர் பரோடாவிற்கு வந்து வேலையொப்புக்கொண்டார்.

ஸ்ரீ அரவிந்தர் 13 ஆண்டுகள் (1893—1906) பரோடா உத்யோகத்திலிருந்தார். முதலில் வருமான இலாகாவிலும் (Revenue Dept.) பின்பு அமைச்சவையிலும் இருந்தார். கல்வியில் தனக்கிருந்த அளவற்ற காதலால் தன்னைத்தானே கல்வியிலாகாவிற்கு மாற்றிக்கொண்டு பரோடா கல்லூரி ஆங்கிலப் புலவராயும் பின்பு துணைத்தலைவராயும் 750 ரூ சம்பளத்தில் வேலை பார்த்தார். மாணவர் அவரைக் கடவுளன்புடன் போற்றி வணங்கினர். அறிஞர் பலர் அவருடைய அறிவுத் திறனை வியந்து போற்றினர். இந்நாட்களிலேயே அவர் தனது அறிவைப் பல்லாற்றானும் விசாலப்படுத்தித் தான் பிற்காலத்திற் செய்யப்போகும் கடவுட் பணிக்குத் தன்னைத் தயார் செய்துகொண்டார். இரவும் பகலும் ஓயாமல் நூலாராய்ச்சியும், கவி புனைவதும், புதுப்புது மொழிகளைப் பயில்வதும் அவரைத் தம் வசப்படுத்தின. இங்கிலாந்தில் அவர் முற்றும் மேனாட்டுக் கலையே தேர்ந்தார். தன் தாய்மொழிகூடத் தெரியாதவராக இந்தியாவிற்கு வந்தார். இக்குறையைப் பதின்மடங்கு ஊக்கமுடன் பரோடாவில் நிறைவுறுத்தினார். வடமொழியை ஐயந்திரிபறக் கற்றுப் பெரும்புலமை வாய்ந்தார். வங்காளம், குஜராத்தி, மராத்தி, ஹிந்தி முதலிய மொழிகளையும் பயின்றார். வங்க மொழியில் பிறகு சில நூல்களும் புனையுந் திறமை பெற்றார். இவ்விதமாக பாரதநாட்டு முற்கால தற்கால நாகரீகம், நிகழ்ச்சி, உயர்வு தாழ்வுகளை நன்கு சீர்தூக்கி யாராய்ந்தார். பாரத சக்தி இன்னதென்பதை யறிந்தார். யோகநூல்களைப் பயின்று நின்று தேர்ந்தார். 1902-ம் ஆண்டு தாய்ப்பணி தொடர்ந்தார். ஸ்ரீ அரவிந்தரின் தாய்ப்பணி அரசியல் விஷயமன்று. அதை பாரத சக்தி யோக சாதனமென்பதே தகும். பாரத தேவி, பராசக்தி. உயிரோடுலவும் அன்னை ஜகன் மாதா என்றே அவர் எண்ணித் தன்னுட் கண்டு அவள் பணிக்கே உடல் பொருள் ஆவியனைத்தையுந் துறந்தார். 1902 முதல் 1906-வரை அவர் மறைவாயிருந்தே தாய்ப் பணிக்கு ஊக்கமளித்தார். உத்யோகத்திலிருந்து வெளிப்படையாக அரசியல் இயக்கங்களில் தலையிட முடியுமா? 1905-ல் வங்கப் பிரிவினையால் ஏற்பட்ட வீராவேசக் கிளர்ச்சி அவருடைய தாயன்

புக் கடலுக்கு மடை திறந்துவிட்டது. 1906-ம் ஆண்டு கல்கத்தாவில் ஏற்பட்ட சுதேசக் கல்லூரித் தலைவராகி அறிவுப் பணி தொடர்ந்தார்.

அரவிந்தரின் அரசியல் வாழ்வு எட்டு ஆண்டுகள் கழித்து ஒழிந்தது (1902—1910). இதன் முற்பாகத்தில் அவர் மறைவாயிருந்தே வேலைசெய்தார். நாட்டுப் பணிக்குப் பல இளைஞரைத் தயார்செய்துதான் பின்னே தோற்றிய சுதேசி யியக்கத்தை விதைத்தார். அயர்லாந்தில் தோன்றிய ஸின்பின் இயக்கம் போன்றே ஆத்மசக்தியைக்கொண்டு சாத்வீக எதிர்ப்பால் சுதேசி இயக்கத்தை நடத்த அவர் மேற்கொண்டார். அதுகாறும், மிதவாதிகளே காங்கிரஸ் என்னும் பாரத சபையைப்பற்றி யிருந்தனர். 1906-ல் காங்கிரஸில் ஒரு தீவிரக் கட்சி ஏற்பட்டது. அதுவே திலகர், பாரதியார் போன்றவர்கள் போற்றி நின்றது. அதிலேயே ஸ்ரீ அரவிந்தர் சேர்ந்தார். ஆனால் அக்கட்சிகூட நாட்டில் அப்போது செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை. ஒருவகை ஒத்துழையாமையை இது தத்துவமாகக் கொண்டிருந்தது. பாரத சபையை ஆண்டுதோறுங் கூட்டி, விஷயாலோசனைக் கூட்டத்தில் மிதவாதிகளுடன் வாதிடுவதல்லால் வேறொன்றும் அதனால் காரியமில்லை. ஸ்ரீ அரவிந்தரே வங்காளத்தில் அக்கட்சி முதன்மையாளரைத் திலகர் தலைமையில் ஒரு அகில இந்தியக் கட்சியாகச் சேர்த்துத் தீவிரமான திட்டங்கள் வகுத்து, மிதவாதிகளை வீழ்த்தி தேசிய வாதிகள் காங்கிரஸைப் பற்றும்படி தூண்டினார். மிதவாதிகளுக்கும் தேசபக்தர்களுக்கும் ஏற்பட்ட போராட்டத்திற்கு இதுவே காரணம். தேசபக்தர்களை மிதவாதிகள் தீவிரவாதிகள் என்றனர். இரண்டாண்டு கிளர்ச்சியில் இத்தேச பக்தர்கள் நாட்டில் பெரிய மாறுதலை உண்டுபண்ணினர்.

புதிய தேசக்கட்சி ஸ்வராஜ்யத்தையே தனது நோக்கமாகக் கொண்டது. மிதவாதிகள் இரண்டொரு நூற்றாண்டுக்குள் மெதுவாக என்றைக்கோ ஒருநாள் குடியேற்றநாட்டந்தஸ்து வருமெனவாயைப் பிளந்துகொண்டிருந்தனர். படிப்படியான, சாவதானமான சீர்திருத்தத்தாலேயே அதையும் அடைய விரும்பித் தொண்ணுந்தனர். தேசக்கட்சியோ சாத்வீக எதிர்ப்பால் ஸின்பின் இயக்கத்தைப்போன்று ஒரு தைரியமான இயக்கத்தைக் கைக்கொண்டது. தன்னுதவியே அதன் தத்துவம். நாட்டை ஒழுங்குறுத்தி, ஒற்றுமைப்படுத்தி, நாட்டின் சக்தியைக் கூட்டி பலப்படுத்தி, அரசாங்கத்துடன் ஒத்துழையாமையை மேற்கொள்வதே அதன் நோக்கம். விதேசித்துணி விலக்கு, அன்னியச் சரக்கு விலக்கு, சுதேசித் தொழிற் பெருக்கு, சுதேசித்துணிக் குவிப்பு, விதேசி மன்ற விலக்கு,



சுதேசப் பஞ்சாயத்து மன்றம் அமைப்பு, விதேசக் கல்வி மறுப்பு, சுதேசக்கல்வி வளர்ப்பு, ஊர்க்காவல், நாட்டுக்காவலுக்காக வாலிபப் படை வகுப்பு முதலிய ஆக்க அழிவுத் திட்டத்தை நாட்டிற்கு வீர சுதந்திர நலம்பெற அது அமைத்தது. சாத்வீக எதிர்ப்பே அதன் வழி. காங்கிரஸைப்பற்றி அதையே ஒரு தனி அரசியலாக நாட்டை ஆளும் சக்தியாகச்செய்து வீரசுதந்திர வெற்றி பெறவே ஸ்ரீ அரவிந்தர் முயன்றார். தான் அப்போது ஆசிரியராயிருந்த "வந்தே மாதர"ப் பத்திரிக்கையையே தினசரியாக்கி தேசக்கட்சியின் கருவியாக்க வலியுறுத்தினார். 1907—8-ல் வந்தே மாதரம் ஸ்ரீ அரவிந்தரின் மாணிக்கவாசகத்தை நாடெங்கும் பரப்பி நாட்டிலேயே ஒரு புதியவுணர்ச்சியை ஏற்படுத்தியது. அவ்வுணர்விற் பூத்த பாரதியார் பாடல்களை நேயர் படித்தால் வந்தே மாதரத்தின் அருமை தெரியும். அதன் கொள்கைகளே பின்னும் நாட்டின் மனத்தில் விடாது பற்றி வேரூன்றின. ஆனால், சுருசுருவென்று பட்படத்து எழுந்த இவ்வீர இயக்கம் நீடு நிற்கவில்லை. நாடு அப்போது அதற்குத் தயாராயில்லை.

ஸ்ரீ அரவிந்தர் 1907-ல் முதல் முதல் அரசியல் குற்றத்திற்காகக் கைதுசெய்யப்பட்டு விடுதலை பெற்றார். இதற்குள் தேசக்கட்சி வீரர் சிறையிலும், தீவாந்திரத்திலும் சிதறிவிட்டனராதலின் அரவிந்தரே தலைவரானார். அப்போதே அவர் மேடையேறிப் பேசத் தொடங்கினார். 1907 சூரத்து சுதேசக்கூட்டத்தில் தலைமை வகித்தார். மிதியடித் திருவிழாவுடன் அது இரண்டுபட்டு [illegible]டது நேயருக்குத் தெரியும். 1908-ம் ௵ மே ௴ அலிபூர் சதிவழக்கில் தம்பி வரீந்திரர் நடத்திய புரட்சியாளருடன் சேர்ந்திருப்பதாகக் குற்றஞ்சாற்றுண்டு கைதிசெய்யப்பட்டார். ஆனால் அவர் மீது குற்றமிருப்பதாக எள்ளளவும் ருஜுவாகவில்லை. ஆதலால் ஓராண்டு விசாரணைக் கைதியாக வைக்கப்பட்டு விடுதலை செய்யப் பெற்றார். 1909 ௵ மே ௴ அவர் சிறையினின்று வந்து பார்த்தார். தன் கட்சி எப்படி யெப்படியோ சிதறிப் போயிற்று. அதன் வீரர்கள் சிறைப்பட்டும், தீவாந்திரப்பட்டும், மறைந்தும் ஒழிந்தனர். ஒன்றுகூடிய தீவிரச் செயலுக்கு அது வலுவற்றிருந்தது. இருப்பவரைக்கொண்டு ஓராண்டுமட்டும் அதை முன்னேற்றி வலியுறுத்த முயன்றார். அப்போது அவரே இந்தியாவில் தேசக்கட்சித் தலைமை வகித்தார். தனது காரியத்திற்காகவும், தனது உயர்ந்த ஞானத் திரவியங்களை உலகிற் களிக்கவும் கர்மயோகின் என்ற வாரப் பத்திரிக்கையையும், தர்மா என்ற வங்க வாரப் பத்திரிகையையும் செவ்வையாக நடத்தினார். ஆனால், முதலில் நாடு இன்னும் தன்னெண்ணத்திற்குத் தயாராயில்லையென்பதை அறிந்துகொண்டார். நாடு போதிய பயிற்சி பெறவேண்டும், சுத்தப்படவேண்டும். சுயாட்

சிக் கிளர்ச்சி, அப்போது தென்னாப்பிரிக்காவில் காந்தி நடத்திய சாத்விகக் கிளர்ச்சி போன்றவற்றாலேயே நாடு அடிப்படையான சுத்தி பெறவேண்டும் எனத் தெரிந்தார். அதற்குத் தலைவன் தானல்ல என்பதை யுணர்ந்தார். மேலும் தனது ஓராண்டு சிறைவாசத்திற்செய்த தீவிர யோகத்தால், நாராயண தரிசனம் பெற்றுத் தனது அத்யாத்ம காரியத்தின் விரிவைத் தெரிந்து, அதற்குத்தான் தன் கவனம் முழுதும் சரியாயிருக்குமென அரசியல் வாழ்வினின்று விலகி நிற்கத் தீர்மானித்துவிட்டார்.

1910-ம் ஆண்டு பிப்ரவரியீ சந்திரநாகூரில் ஒரு ஒதுக்கிடத்தில் மறைவாயிருந்து தவஞ்செய்து நான்கு சக்திகளைப் பெற்றார். 1910-ம௵ ஏப்ரலில் புதுச்சேரிக்குக் கப்பலேறினார். அவர் புதுச்சேரிக்கு வந்தபிறகு தான் கையெழுத்திட்டு நாட்டாருக்கு எழுதியிருந்த ஒரு பகிரங்கப் பத்திரத்திற்காகக் குற்றப்பத்திரிக்கை பரப்பினர். ஆனால் புதுச்சேரிக்கு அரவிந்தர் சென்றுவிட்டபடியால் கர்மயோகின் அச்சுக்காரரைக் கைது செய்தனர். ஆனால் ஹைக்கோர்ட்டு அப்பீலில் அது தோற்றது. நீதிபதிகள் உட்ராபும் ப்ளெட்சரும் (Woodroff & Fletcher) அரவிந்தரின் பகிரங்கக் கடிதம் அராஜகம் அன்றென முடிவு சொல்லினர். இவ்வகையாக மூன்று முறை முயன்றும் குற்றங்காட்ட முடியவில்லை. முதலில் சிலகாலம் கழித்து மீண்டும் வங்காளத்திற்கு நாட்டை நடத்தத் திரும்பி வரவே எண்ணினார். ஆனால் பிறகு அத்யாத்ம வேலைப் பெருக்கம் தனது முழுத் திறனையும் கொண்டது. ஆதலின் அரசியலினின்று முழுதும் தன்னை வேறுபடுத்திக் கொண்டார். அதன்பின் எத்தனையோ முறை காங்கிரஸ் அக்கிராசனராக அழைத்தும் இணங்காது முற்றும் ஏகாந்த யோகத்தில் ஈடுபட்டார்.

1910-ம் ஆண்டு முதல் இதுகாறும் அவர் யோக சாதனத்திலும் அத்யாத்ம காரியத்திலுமே ஆழ்ந்துள்ளார். 1914-ல் (நான்காண்டுகள் மோனமாக யோகமுடித்து) ஆரியா என்ற வேத வேதாந்தப் பத்திரிக்கை தொடங்கினார். இதை ஆரிய வேதம் அல்லது அத்யாத்ம நிதி என்பதே தகும். இதில் எழுதப்படாத விஷயம் எதுவுமில்லை. மனித ஜாதி அமர வாழ்வடைந்து உள்ளும் புறமும் வானரசைக் கண்டு வாழ்வதற்குரிய தத்துவங்களனைத்தும் தனது யோகவிழியாற் கண்டு மஹா யோகீஸ்வரான ஸ்ரீ அரவிந்தர், இதன் மூலம் உலகிற்கு அருளினார். ஈசோபநிடதம், கீதை ஆகிய இரு நூல்கள் இதனின்று நூல் வடிவாகப் போந்துள்ளன. கடவுள் வாழ்வு, பூரண யோகம், கட்டுரைத் தொகுதிகளும் ஸ்ரீ அரவிந்தர் யோக விழியாற் கண்ட அதி நுட்பமான அத்யாத்ம ரகசியங்கள் அடங்கியவை. அவற்றையே இன்று



அரவிந்த பக்தர்கள் ஸாதனஞ் செய்கின்றனர். இந்திய நாகரிகம், பாரதக் கலைஞானம், உபநிடதம், வேதத்துட் பொருள், வேதப் பாசுரங்களின் விரிவுரை, மனித ஜாதியின் முன்னேற்றம், கவி இயல்பும் வளர்ச்சியும், மனித ஜாதி ஒரு குலத் தெய்வ மைந்தராக வாழுதல் முதலிய கட்டுரைகள் ஆரியாவை அணியுறுத்தி அமர வாழ்வின் நறுமணங் கமழுகின்றன. இப்போதுதான் ஸ்ரீ அரவிந்தர் தான் இளமையில் இங்கிலாந்திலும் பரோடாவிலும் எழுதிய அரிய ஆங்கிலப் பாசுரங்களை வெளியிடத் தொடங்கினார். வந்தேமாதரம், கர்மயோகின் இவற்றிலும் அவர் மிகவும் அரிய பாக்கள் எழுதியுள்ளார். அவற்றிலும் சிலது வெளியாகியுள்ளன. ஆரியா ஆறரை ஆண்டுகள் சிறப்புற நடந்து, 1921-ல் நிறுத்தப்பெற்றது. அதில் எழுதப்பட்ட விஷயங்கள் இன்னும் இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு மனிதர் ஆராயத்தக்கன. அதன் உண்மைகளைச் செயலிற் காட்டி யோக சங்கம் நிறுவி பூரணாத்மாக்களைப் பயிற்றும் வேலை மிகவும் உழைப்புள்ளது. ஆதலின் எழுத்து நின்று செயலிற் பாய்ந்தது.

## ஆசிரமம்

முதலில் ஸ்ரீ அரவிந்தர் புதுவையில் நாலைந்து சீடர்களுடனேயே இருந்தார். நமது பாரதியாரும் குரு விஸ்வாசத்துடன் அரவிந்தரைப் போற்றினார். வரவர மென்மேலும், யோக விருப்பமுள்ள நல்ல ஸாதகர்கள் உலகின் நாலாபக்கத்தினின்றும் வந்து குழுமினர். அவர் காட்டும் அத்யாத்ம வழியைப் பூரண சரணாகதியுடன் மேற்கொண்டவர்கள் ஒரு யோக ஸாதக சங்கமாகச் சேர்ந்தனர். இச் சாதகர்கள் அனைத்தையும் துறந்தவர்கள். தமக்கு என்று எதையும் உடையவரல்லர். ஆஸ்தி யிருப்பவர் எவ்வளவிருந்தாலும், எவ்வித நிபந்தனையுமின்றி உடனே அனைத்தையும் குரு பாதத்தில் அவர் கொண்ட மகத்தான விஸ்வ சங்கக் காரியத்திற்கு அர்ப்பணித்து விடுகின்றனர்.

'இது வேண்டும் அது வேண்டும்' எனக் கேட்கக்கூடாது. ஆண்டவன் தருவதை இன்புடன் ஏற்று, அவனுக்கு அர்ப்பணமாகவே அனுபவிக்க வேண்டும். தெய்வ சக்தி நம்மை நடத்துகிறது என்ற உணர்வு அத்தகைய அடைக்கல முள்ளவர்களுக்கு உடனே பிறக்கும். பரம பக்தியுள்ளவர்களுக்கே இது இடம். ஒரு குறிப்பிட்ட மதம், ஒழுக்கம், ஆசாரம், கிரியை, சாத்திரம் எதுவும் இங்கு அநுசரிக்கப்படுவதில்லை. ஆண்டவன் அவரவர் மனத்தினின்று தூண்டும்பொழுது அவரவர்கள் முன்னேறுவர். சக்தி. தியானம் ஒன்றுதான். அவர்கள் வேதம், கிரியை எல்லாம். கொடிய வைதீகனும் இங்கு சில நாளிருந்தால் பூணூலை அறுத்துச்

சக்திக்கு ஹோமஞ் செய்துவிடுவான். சாதி வேற்றுமையை உடனே கொளுத்துவான். எல்லாம் இறைவன் என்பதை யுணர்வான்; ஆசிரமிகளுடன் சாதி பாராமற் கலந்துண்ணுவான்; வைதிகப் பித்தத்திற்கு இதன் காற்றே இஞ்சிக் கஷாயம். சாதிச் சுரத்திற்கு இதன் ஸ்பர்சமே லிங்க சிந்தூரம். மதப் பேய்க்கு இதன் காட்சியே மாந்திரீகன். சர்வ சமரச உணர்விற்கு இதன் வாசமே விண்; ஆனால் நாஸ்திகச் சமரசம் இங்கு கிடையாது; பரிசுத்தமானவர்களே இச் சமரச சங்கத்தினர். தெய்வத்தை ஒவ்வொரு மூச்சிலும் எண்ணி அவனின்றியாமில்லை,

எல்லா வுலகிற் கிறைவனொருவன்
எல்லா வுடலும் இறைவனாலயமே
உயிர் மேனியாய்க் கொண்டே
யோங்கு மொரு சோதி
பயிலா லயமுலகு பார்

என்ற உன்னத சமரசமே இங்குள்ளது. இங்கு ஆங்கிலேயர், அமெரிக்கர், பிரெஞ்சுக்காரர், பாரசீகர், குஜராத்திகள், வங்காளர், ஹிந்தியர், தெலுங்கர், தமிழர் (தமிழர் 20 பேர்கள் உள்ளனர்) முதலியோர் எவ்வித வேற்றுமையுமின்றி யோக வுணர்வில் ஒன்று பட்டுள்ளனர். இவர்களில் மேனாட்டாரும் கீழ்நாட்டாருமாகச் சுமார் 35 பெண்மணிகள் அரிய தவம் புரிகின்றனர். பெண்கள் பரம சுதந்திரப் புன்னகை திகழ வாழுகின்றனர். ஆனால் ஆத்ம சுதந்திரம் மிருகச் சுதந்திரமல்ல. இங்கு கடுமையான பிரம்மச்சரிய விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. ஆனால் பெண்களைப் பார்த்தால் ஆண்கள் முக்காடு போட்டுக்கொள்ள வேண்டும், கண்களைப் புதைத்துக்கொள்ள வேண்டும் என்ற அசட்டுப் பிரம்மச்சரியமல்ல. இங்கிருப்பவர் அனைவருக்கும் ஆண்டவனே ஆன்மா; அவ்வுணர்விலேயே அவ்வுண்மையையே எங்கும் கண்டு பழகுவதால், மேல் வேடம் ஆணாயினும் பெண்ணாயினும் அதனால் மனோவிகார முண்டாவதில்லை. அதுவே பரிபூரண பிரம்மச்சரியம். உலகம் மாயை, தீது என்னும் பொய்கள் இதன் எல்லைக்குள் வரக் கூடாது. இங்குள்ளவர்கள் ஒவ்வொருவரும் தமது வாழ்வை தெய்வ நிவேதனஞ் செய்து தெய்வத்தில் தெய்வத்திற்காகவே வாழ்பவர்; இது சந்யாசி மடமன்று. சந்யாச வாட்சி இங்கு வெறுக்கப்படுகிறது. வாழ்வைக் கடவுளுணர்வில் மேற்கொண்டு விசாலப்படுத்துவதே இதன் நோக்கம்.

பக்தி, கர்மம், ஞானம் இம் மூன்றும் ஒருங்கே இங்கு பயிலப் படுகின்றன. ஆண்டவன் அனைத்தும் என்ற அறிவுடன் அன்பால் எப்போதும் உறவு கலந்து, அவன் பணியாக, ஆசிரம வேலைகளைச்



செய்து, காலையும் மாலையும் அன்னையடிக்கீழ் தியானிப்பதே இங்கு வாழ்வின் சுருக்கம்; எல்லா வகையிலும் பூரணம் பெறுவதே குறிப்பு. ஆசிரம காரியங்கள் ஆசிரமவாசிகளாலேயே "பராசக்தியே நம்மைக் கருவி கொண்டு எல்லாம் செய்கிறாள்" என்ற உணர்வுடன் நிர்வகிக்கப்படுகிறது. மனிதனிடமுள்ள தெய்வத் தன்மையைப் பூர்த்தி செய்து, விளக்கி அகந்தையை யழித்து ஆண்டவனுக்கு முற்றும் தன்னை யீவதே இங்கு சாதனம். ஆசிரமத்திற்கு சுமார் 29 பெரிய மாளிகைகள் தெருத்தெருவாக உள்ளன. அவையனைத்தும் பளிங்குபோல் சிறிது அழுக்குமின்றி போற்றப்படுகின்றன. அதற்கென ஆசிரமவாசிகளுள் சுகாதார இலாகா உள்ளது. மின்சார வசதிக்கான மின்சார இலாகா உள்ளது. ஒவ்வொரு வீட்டிலும் அழகிய பூந்தோட்டம் வளர்க்கப் படுகிறது. அதில் தேர்ச்சி பெற்ற தலைவர்கள் அவ் வேலையில் கருத்துள்ள சாதகர்களுடன் தோட்டம் வளர்த்து ஆசிரமத்தைப் பூவும் பசுமையும் குலுங்கச் செய்கிறாள். இங்கே தெய்வ வழிபாட்டிற்கு நாள்தோறும் ஏராளமான பூக்கள் வேண்டியிருக்கும். அவை ஆசிரமிகளால் வளர்க்கப்படும் பூந்தோட்டங்களினின்றே கிடைக்கின்றன. தோட்டம் வளர்த்தல் மிகத் திறமையுடன் ஈண்டு நடைபெறுகிறது. ஆசிரமத்திற்குத் தோட்டப் பயிற்சி எக்சிபிஷனில் பிரெஞ்சு சர்க்காரால் ஒரு மெடல் அளிக்கப்பட்டுள்ளது. வைத்திய இலாகா தனியேயுள்ளது. நாட்டு வைத்தியத்திலும் சீமை வைத்தியத்திலும் நல்ல யோக்கியதை பெற்றவர்கள் அதை நிர்வகிக்கின்றனர். ஆசிரமம் சுகாதார வாழ்விற்கும் மாசறு தூய்மைக்கும் உதாரணமானது. ஆதலின் வைத்தியத் தேவை அநேகமாக இங்கு அவசியமா யிருப்பதில்லை. ஆசிரமிகள் உண்ணும் உணவு ஆசிரமத்தில் யோகம் பயிலும் பெண்மணிகளாலேயே மிகப் பரிசுத்தமாகத் தயாரிக்கப்படுகின்றது. நன்கு வடிகட்டிய தண்ணீரே சமையலுக்கும் குடிப்பதற்கும் உபயோகிக்கப்படுகிறது. ரொட்டி, பொங்கோ என்னும் பானம் (இது காப்பியின் தீமைகள் அற்றது), ஒரு வாழைப் பழம் இதுவே சாதகர்களின் காலை யுணவு. 12 மணிக்கு, சாதம் ஒரு கூட்டு (அவியல்) அன்றாடகம் ஆசிரமத்திலேயே கறந்ததோடு வைத்த தயிர், சிறு எலுமிச்சம் பழத்துண்டு, வாழைப் பழம் இவையே பெரும்பாலும் மதிய உணவு. ரொட்டி, பால் அல்லது பாயாசம் ஏதாயினும் ஒரு மரக்கறி வகை இவை மாலை 6-மணி உணவு.

இதுதான் ஆசிரமவாசிகளின் உணவு. புளி, மிளகாய் முதலியன இங்கு சேர்ப்பதில்லை. இங்கு எல்லாம் சைவ வுணவே

சமைத்து 3 மணி நேரத்திற்குள் உணவு உண்டாகிவிடும். பழையனவும், கெட்டனவும், சைவமற்ற வுணவும், சுத்தமற்றனவையும், பேராசை யுணவும், சுருட்டு புகையிலை ஊண் மது முதலியவைகளும் இந்தக் கட்டிடத்துள் வரக்கூடாது. இவ் வுணவும் நீத்துப் பால் பழம் மட்டும் உண்போரும் உளர். ஆனால் இந்த யோகத்திற்குக் கடுமையான காயக் லேசங்கள் அனாவசியம்; உடல் வலிமை அவசியம். ஆதலின் ஒவ்வொருவரும் போதுமான உணவே மிதமாக உட்கொள்ளுகின்றனர். உணவுப் பொருள்களும் இங்கேயே செய்யப்படுகின்றன. ஆசிரமத்திற்கு வேண்டிய ரொட்டி, பிஸ்கோத்து, கோதுமை மா, ரவை எல்லாம் இங்கேயே வேலை நடக்கிறது. சாதகர்களே மிக நேர்த்தியான ரொட்டி செய்கின்றனர். இங்குள்ளவர்கள் அனைவரும் மௌன சுபாவத்துடன் ஆண்டவனுடன் உறவு கலந்து தங்கள் பணிகளைக் கவனிப்போர்கள். ஆதலின் வெளியார்களுடன் உறவாடச் சிறிதும் அவர்களுக்கு விருப்பும் சமயமும் இருப்பதரிது. எவரும் ஆசிரமத்திற்குள் திடீரென்று வர உத்திரவில்லை. பலர் வந்து ஏமாந்து திரும்புவதால் இந்த எச்சரிக்கை செய்யப்படுகிறது.

ஒழிந்த நேரங்களை ஆசிரமிகள் பலவிதமாகப் பயன்படுத்துகின்றனர். காவியம் புனைதல், வசனமெழுதல், ஆங்கிலம், பிரெஞ்சு, வங்கம் முதலிய பாஷை பயிலுதல், சங்கீதப் பயிற்சி, மரச் சாமான்கள் செய்தல், சித்திரமெழுதல், பட்டு நூலால் அழகிய அணி செய்தல் முதலிய பல பல வேலைகளில் ஈடுபடுகின்றனர். ஆனால் எல்லாம் ஆசிரம நலனுக்கே செய்யப்படுகின்றது. ஆசிரம நலத்தைத் தவிர வேறு நினைவும் செயலும் பேச்சும் எவர்க்குமில்லை. தனக்கென்று இங்கு எதுவும் செய்யப்படுவதில்லை. ஆசிரமத்திற்கு வேண்டிய துணியணிகள் இங்கேயே ஆசிரமிகளால் தைக்கப்படுகின்றன. ஆசிரமக் கட்டிட வேலைகளை அதற்கென்றமைந்த சாதகர்—இஞ்சினீயர் நடத்துகிறார். ஆசிரமிகளே கட்டிட வேலைகளை மேற் பார்க்கின்றனர்; எலலாம் தெய்வ வுணர்வில் நடக்கிறது. இந்த சங்கம் ஒரு உடல்; அதற்கு ஆண்டவன் ஆன்மா, சக்தியே மூச்சு! இது ஒரு தனியுலகு; வெளியுலகில் நடக்கும் எத்தகைய இயக்கங்களுக்கும் இதற்கும் உறவில்லை. இங்கு அரசியல் வாடையே கூடாது; இது கண்டிப்பான விதி; அரசியல் எண்ணங்கொண்டு இங்கு வருபவர் ஏமாற்றமடைவர். அரவிந்தரின் காரியம் மனித சமூகத்தை தெய்வ வாழ்வில் அமைப்பதொன்றே. தேசம், பாஷை, மதம், கொள்கை, சாதி அனைத்தையும் விடுத்து ஆண்டவனைச் சரண்புகுந்தோருக்கே இது இடம். ஸ்ரீ அரவிந்தரின் காரியம் மகத்தான அத்யாத்ம காரியம்; அது உலக வாழ்வையே யோக வாழ்வாக்குவது; மனோமயத்தில் உழலும் மனிதனை



விக்ஞானமயத்திற்கு உயர்த்துவது; மேனாடு அடைந்துள்ள தூல முன்னேற்றம் சாத்திர அபிவிருத்தி (Scientific Progress) யுடன் பாரத சக்தி, ஆத்ம சக்தியை யிணைத்து, மேற்கையும் கிழக்கையும் ஒன்று சேர்ப்பது. பாரெல்லாம் ஓர் குலமாய் கடவுளுணர்வுடன், அகண்ட யோக வாழ்வு வாழ்வதே இதன் கொள்கை. இது ஒரு புதிய யோக வழி. ஸ்ரீ அரவிந்தர் அருளிய "அன்னை" என்னும் நூல் தமிழில் வந்துள்ளது. அதைப் பார்த்தால் இங்கு உலக முன்னேற்றத்திற்காக எத்தகைய சக்திகள் வேலை செய்கின்றன வென்று தெரியும். இதுகாறுந் தோன்றிய தீர்க்கதரிசிகளெல்லாம் பொது ஜனங்களிடையே தமது கொள்கையை விதைத்துச் சென்றனர். பண்படாத மாக்கள் அதைப் பலவாறு அனர்த்தஞ் செய்துகொண்டு பல சமயச் சச்சரவு உலகை இரணகளமாக்கிவிட்டது. ஸ்ரீ அரவிந்தர் யோக வுணர்வுள்ள உத்தமர்களை, ஆண்டவனுக்குப் பரிபூரண சரணாகதியுள்ள தீரர்களை மௌனமாக, அவர் சுபாவத்தின்படி பரிபூரணப்படுத்தி மனமாசைத் துடைத்து அத்யாத்ம சித்தியை முற்றுவித்து அவர்களை ஒரு ஆத்மசக்தி நிலையமாக்கவே முயலுகின்றார். அவர் முயற்சியால் பாரத தேசமே பெரிய தெய்வ சங்கமாகும்; தேவரைப் பெற்றுத் திகழும்; ஸ்ரீ அரவிந்தரின் யோக வரலாறு "யோக விளக்கம்" என்ற நூலாக சீக்கிரம் வெளிவரும். அதில் பிற விவரங்கள் கண்டு கொள்க. ஸ்ரீ அரவிந்த சக்தி விலாசத்தை "அன்னை" எனும் நூலிற் காண்க. பாரதியாரின் சக்திப்பாக்களும் வேதாந்தப்பாக்களும், பக்திப் பாக்களும் முழுக்க முழுக்க அரவிந்தரின் கொள்கைகளிற் சிலவற்றையே விளக்குகின்றன. அவை இங்கு நின்று நிலவும் தேவசங்க வர்ணனையேயாகும். இதோ கவியின் கனவு உருவாகிவிட்டது. தமிழ்நாடு இப்பேறு பெற்றது. அமுத வாழ்வைத் தமிழகம் தனது மார்பகத்தில் தாங்கி நிற்கிறது. நான் நீண்ட நாளாகச் செய்த தவமும் நிறைவேறிற்று. எனது கனவும் உண்மையாயிற்று. எல்லாரும் தேவராகலாம். ஆனால் எல்லாம் ஆண்டவன் என்பதைக் கண்டு நிற்கவேண்டும். அத்தகைய நரதேவர் சங்கம் இன்று விளங்குகிறது. அது வாழி. அடியிற் காணும் சங்க சங்கீர்த்தனத்தினின்று இந்த யோகப் பயனை அறியலாம்.

## சங்கீத சங்கீர்த்தனம்.

கல்யாணி ராகம்] [தாளம்-திஸ்ர திரிபுடை.

பல்லவி

வாழிய நரதேவர் சங்கமே
ஜய ஜய ஜய ஜய ஜய ஜய— (வாழிய)

### அனுபல்லவி

ஆழிசூழு லகமெல்லாம்—அகண்ட பாரதம்
வாழியமர வாழ்வி லோங்கி
வளமை பொங்கியே
வளமை பொங்கியே—இன்ப
வளமை பொங்கியே—ஜெய (வாழிய)

### சரணம்

கோயிலாக வுலகமெல்லாம் குலவி வாழ்கவே!
சாவும் இருளும் அடிமை வறுமை
தளர்ந்து தேய்கவே
தளர்ந்து தேய்கவே
இன்பம் வளர்ந்து பாய்கவே—ஜெய (வாழிய)

கடவுள் மனிதர் கடவுட் புலவர் கடவுள் வேதமும்
கடவுளறிவுங் கடவுட் செயலுங்
கதிர்விட் டோங்கவே—யோகக்
கதிர்விட் டோங்கவே—ஜெய (வாழிய)

வீர நினைவும் வீர வினையும் வீர சக்தியும்
வீர முரசு விண் முழங்க
வெற்றி கொட்டவே
வெற்றி கொட்டவே—ஆத்ம
வெற்றி முற்றியே—ஜெய (வாழிய)

பொன்றரு மின்பம் புதுமணக் காதலிற்
போகமும் யோகமும் மலரும்
என்று மழகும் இளமையுஞ் செல்வமும்
இகபரத்துடன் வளரும்
இகபரத்துடன் வளரும்—ஆன்மச்
சுகக்கனி பழுத்தொளிரும்—ஜெய (வாழிய)

அல்லற்படுத்தும் அகந்தைச் சமர்புரி
அரக்கன் எரிந்து மடிந்தான்—பொய்
யரசன் திகைத்து மறைந்தான்
எல்லாம் சக்தி மயம்—எல்லாம் சக்தி வயம்
எல்லாமுமே சக்தி யருளே!
எல்லாமுமே சக்தி விரிவே—யின்
னெல்லாமுமே சக்திப் பொருளே—ஜெய (வாழிய)



எல்லா வுலகிலும் இன்பசிற் சக்தியின்
இச்சை விளங்கிட வுழைப்போம்
எல்லாம் சக்தி மயம்—எல்லாம் இன்ப மயம்
என்னு மறிவினில் தழைப்போம்
எல்லாருமே சக்தி மைந்தர்
எல்லாருமே புவி வேந்தர்—உண்மை
எல்லாருமே ஜீவன் முக்தர்—இன்
னெல்லாருமே சுத்த சித்தர்—ஜெய (வாழிய)

இந்த தேவ சங்கத்தை உலகளாவச் செய்து உலகின் உணர் வையே கடவுளுணர்வாக மாற்றி வாழ்வையே அகண்ட யோக மாக்குவதே குருதேவரின் அருட்பணி. ஆனால் அகந்தையும், தன்னலமும், வீரியத் தினவும், மனமாசும் படிந்த மனிதவுலகை அசுர வன்மைகள் பற்றிக்கொண்டிருக்கின்றன. விஞ்ஞான மயத் திற்கு உயர்ந்து விஞ்ஞான சக்தி பெற்றால்தான் இத்தீய பலங்களை வெல்லலாம். அவற்றை வென்றால்தான் உலகில் வசுநாதர் கண்ட வானரசை நிலைநிறுத்த முடியும்.

மனித வாழ்வை உள்முகப்படுத்தவேண்டும். மனிதன் தன்னி லுள்ள கடவுளைக் காணாது, ஆத்ம சித்தி பெறாது "நான் செய் கிறேன்" என்று துணிவதெல்லாம் அசத்தியம், அபத்தம், அபக்கு வம், துயர் இடர், அகந்தைப்போர் இவற்றில் முடியும். முதலில் வாழ்வைப் பரிசுத்தப்படுத்திப் பூரணமாக்கி, தெய்வ மயமாக்கி அதன்மீதே ஆண்டவனுக்காக அவன் இச்சைப்படி செயல்புரிதல் வேண்டும். ஆத்மசக்தி பெற்ற பூரணாத்மாக்களின் சங்கம் உலகி லேயே ஆத்ம சக்தி பரப்ப வல்லது. அதனால் உலகிற்கே நல முண்டு. அத்தகைய சக்தியாளர் கூட்டத்தைப் பூரணப்படுத்தவே இவ்வாசிரமம் முயலுகிறது. ஆனால் எவ்வளவு சிக்கன வாழ்வாலும் அதற்கு ஏராளமான செலவுபிடிக்கிறது. இச்சங்கம் நிலைத்துப் பூரணப்பட்டால், இன்னும் சில மாகாணங்களில் கிளைச் சங்கங்கள் தோன்றும்; அவையும் பூரணப்பட்டால் உலகின் பல நாடுகளிலும் இச் சங்கம் விரியும். ஆனால் எதற்கும் இங்கு அவசரப்படுவதில்லை. புகழ், பிறர் பாராட்டு, விளம்பரம் எதையும் இங்கு விரும்புவதில்லை. இங்கு எல்லாம் மௌனமாகவே நடைபெறுகிறது. ஆண்டவன் இச்சையே அணுவணுவாக ஒவ்வொன்றையும் நடத்துகிறது. அவ னிச்சைக்கு எவர் நம்பி சர்வத்யாகத்துடன் பாத்திராகின்றனரோ, அவர்களைக்கொண்டே இச்சங்கம் தெய்வ சக்தியால் விரிந்தோங்கும். ஆண்டவன் அருள்வல்லபமே இதை நடத்துகிறது. இதில் மனித முயற்சியும், "நான் செய்கிறேன்" என்ற பேதையகந்தையும் எள் ளளவும் இல்லை. எல்லாம் சக்தி செயல்!

---

# தமிழருக்கு ஒரு வேண்டுகோள்.

திரு. N. வேங்கட்டரமணன் அவர்கள்.

இவ்விருபதாவது நூற்றாண்டில் ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமாயின் அந்நாட்டுக்கெனச் சிறந்த பத்திரிகைகள் தோன்றி, உழைக்கவேண்டியது அவசியம். மக்களிடையில் அறிவை வளர்க்கவும், அரசியல் ஞானத்தைப் புகுத்தவும், விஞ்ஞான உணர்வை யூட்டவும், விவேக உணர்ச்சியை நாட்டவும், தேசாபிமானத்தைப் பெருக்கவும், தெவிட்டாத ஊக்கத்தைக் கிளப்பவும், ஒற்றுமை விதையினை யூன்றவும், உயர்வுகள் பலவற்றை நல்கவும் ஒப்பற்ற சாதனங்களாயிருப்பவைப் பத்திரிகைகளே யென்பதை யாரே மறுக்க வல்லார்? இக்காலத்தில் உலகில் முதன்மையடைந்து விளங்கும் அமெரிக்கா, பிரான்சு, இங்கிலாந்து, ஜர்மனி, ஜப்பான் முதலிய நாடுகள் இத்துணை முன்னேற்றமடைந்திருப்பதற்கு அந்நாட்டுப் பத்திரிகைகளின் அரிய உழைப்பே காரணமாகும். மேற்கூறிய நாடுகளில் பத்திரிகைகளுக்குள்ள செல்வாக்கு மிக மிக அதிகம். ஒரு நாட்டின் அரசியலைப் போற்றி நிலைக்கச் செய்யவோ, அன்றி அவ்வரசியலை யழித்து மறைக்கவோ பத்திரிகைகள் வல்லமையுடையவை யெனின் அவற்றின் பெருமையை வேறாகப் புகழவேண்டுமா? பத்திரிகைகளே நாட்டின் கண்களாக விளங்குகின்றன, இங்கிலாந்தில் ஒரு சில பத்திரிகைகள் செய்த கிளர்ச்சியால் பலதடவைகளில் அந்நாட்டு அரசாங்கமே அடியோடு மாறியிருக்கின்றன வென்பதைச் சரித்திரம் கூறுகிறது.

பலவாறு கூறலானேன்? நந் தமிழ் நாட்டில் சற்றேறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு முன்னர் நம் மக்களில் பெரும்பாலார் உலகம் என்ன நிலையில் இயங்குகிறதென்பதை ஒரு சிறிதும் உணராதவராயிருந்தனர். ஐரோப்பிய மகாயுத்தத்தின் பயனாகவும், காங்கிரஸ் மகாசபையின் முயற்சிகளாலும் நந் தமிழ் மக்களிடையில் பத்திரிகைப்



படிப்பு வளர்ந்தோங்கி வந்ததன் பயனாய், இன்று சாமானிய மக்களும் உலக அரசியல்களைப்பற்றியும், நாட்டு நடப்புகளைப்பற்றியும், சமூக சீர்திருத்தங்களைப்பற்றியும் வெகு அற்புதமாக விவாதித்து வருகின்றனர். இவ்வளவுதூரம் தமிழகத்தார் விழிப்படைந்ததற்கு மூலகாரணம் தமிழ்மொழிப் பத்திரிகைகளே யென்பதைச் சிந்திக்க வேண்டும். அவ்வாறு தமிழகத்தாருக்கு அரிய ஊழியம் செய்து வந்த—வரும் தமிழ்ப் பத்திரிகைகளில் தினப் பதிப்புகளென்றும், வாரப் பதிப்புகளென்றும், மாதப் பதிப்புகளென்றும் பலவகையுண்டு. தின, வாரப் பத்திரிகைகள் பெரும்பாலும் உலகச் செய்திகளை யறிவித்து, உலக நிகழ்ச்சிகளின்மீது மக்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளை அவ்வப்போது போதித்துவரும். மாதப் பத்திரிகைகள் போன்றவை மக்களின் அறிவு வளர்ச்சிக்குரிய சரித்திரம், சாஸ்திரம், நீதிமுறை, பூத பௌதிக ஆராய்ச்சி, அரசியலமைப்பு, பொருளாதாரம், சுகாதாரம், கலைகள் முதலிய பல துறைகளைப்பற்றிய நிலையான கட்டுரைகளைத் தாங்கி, அறிவு நூல்களாகப் பயன்பட்டுவரும். தமிழ்நாட்டில் ‘சுதேசமித்திரன்’, ‘தேசபக்தன்’, ‘திராவிடன்’, ‘தமிழ் நாடு’ முதலிய தினசரிகளும், ‘லோகோபகாரி’, ‘நவசக்தி’, மகா விகட தூதன்’, ‘குடி அரசு’ முதலிய வார வர்த்தமானிகளும் செய்துவந்துள்ள ஊழியம் அளவிடற்பாலதன்று. அப்படியே தமிழ் மக்களிடையில் அறிவு வளர்ச்சிக்கான முறையில் பாடுபட்டுவந்த—வரும் ‘ஜனவிநோதினி’, ‘சக்கரவர்த்தினி’, ‘விவேக சிந்தாமணி’, ‘விவேக பாநு’, ‘ஞான பாநு’, ‘வாணி விலாசினி’, ‘இந்தியா’, ‘பெண் கல்வி’, ‘மாதர் மனோரஞ்சனி’, ‘பிழைக்கும் வழி’, ‘ஜநாபிமானி’, ‘தமிழர் நேசன்’, ‘விவேக போதினி’, ‘பால பாரதி’ முதலிய பல மாதாந்தரப் பத்திரிகைகள் போற்றத்தக்கனவாகும். எனினும் இம்மாதப் பத்திரிகைகளுள் பெரும்பாலன இன்று நடைபெறுவதில்லையெனின் யாரே வருந்தாதிருப்பர்? பல அறிஞர்களின் அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தாங்கி, அழகிய வுருவுடன், மேலான வகையில், ஆவேசத்துடன் வெளிவந்த தமிழ் மாசிகைகள் பல ஆதரிப்பாரின்றி மறைந்துபோனமை தமிழ் மக்களுக்கு அவமானமல்லவா? இன்று பல கஷ்ட நஷ்டங்களுக்கும் ஈடுகொடுத்து, ஒருவாறு நாட்டில் உலவிவரும் தமிழ் மாதப் பத்திரிகைகள் மிக

மிகச் சிலவே. அவற்றிலும் சில உருவிலும், உள்ளுறையிலும் குறைந்துபோய் நிற்கின்றன. தமிழகத்தில் சமீப காலத்தினின்றும் தின, வார சமாசாரப் பத்திரிகைகளின் குறை ஒருவாறு நீங்கிற்றெனலாம். காலணா சமாசாரப் பத்திரிகைகளும் சில தோன்றி உழைத்துவருகின்றன. எனினும் தமிழகத்தின் பெரும் பரப்பையும், மக்கட் பெருக்கத்தையும் உற்று நோக்குமிடத்து, அவைகட்கேற்பத் தமிழில் உயரிய மாதப் பத்திரிகைகள் இல்லையென்ற குறை நீங்கியபாடில்லை.

மேல் நாடுகளில் ஒரு நாளில் இருமுறை, மும்முறை, நான்கு முறை வெளிவரும் உயரிய சமாசாரப் பத்திரிகைகள் இருக்கின்றன. நந் தேயத்திலும் ஆங்கிலத்தில் தின மிருமுறை வெளிவரும் புதினங்களுள. எனினும் தமிழில் அவ்வாறு வெளிவரும் பத்திரிகைகளைக் காணும் நாள் எந்நாளோ? ஐரோப்பிய நாடுகளில் வெளிவரும் மாதப் பத்திரிகைகளின் உயர்வும், சிறப்பும், அழகும் சொல்லுந் தரத்தன்று. வெகு தூரம் போவானேன்? நந் நாட்டில் கவனியுங்கள். ஹிந்தி, வங்காளி, தெலுங்கு முதலிய மொழிகளில் எத்தனையோ உயரிய மாதப் பத்திரிகைகள் தோன்றி உழைத்து வருகின்றன. அவை ஒவ்வொன்றும் நூற்றுக்கணக்கான படங்களுடன், எண்ணற்ற சித்திரப் படங்களுடன், பலதுறைப்பற்றிய அறிவாராய்ச்சிக் கட்டுரைகளையும், கதைகளையும், பாக்களையுங்கொண்டு, பெரிய உருவில், சிறந்த தாளில், அழகிய கோலத்தோடு அறிவுப் பொக்கிஷமாக வெளிவருவதைக் காணுந்தோறும் எம்போன்றார் மனதில், தமிழில் அதுபோன்ற மாசிகைகளில்லையே யென்ற வருத்தம் எழும்புகின்றது. தமிழரைவிட நிலப் பரப்பிலும், மக்கட் தொகையிலும் குறைந்தவர்களாகிய தெலுங்கரைக் கவனியுங்கள். தெலுங்கு நாட்டுக்கே ஒரு திலகம்போல் "பாரதி" என்ற பெயரால் தெலுங்கில் ஒரு பெரிய மாசிகை நடைபெற்றுவருகிறது. அதன் வருட சந்தா 6 ரூபாயாகும். ஒவ்வொரு மாதமும் தடித்த சேர்த்தியான தாளில் ராயல் சைஸில், நூற்றுக்கு மேற்பட்ட பக்கங்களில் பலதுறைகளைப்பற்றிய அரிய விஷயங்கள் (கட்டுரைகள்) பல தாங்கி, கதைகளும், கவிகளும் பல கொண்டு வர்ணச் சித்திரப் படங்களும், சாதாரணப் படங்களும் பல பெற்று,



மனதைக் கவரும் அழகிய முகத்துடன் அஃது வெளிவருங் காக்ஷி மகிழ்ச்சி யூட்டுகிறது. அதுபோல் தமிழில் ஒரு மாசிகையைக் காணவேண்டுமென்ற பேரவா எம்போன்றார்க்கு நெடுநாளாகவுண்டு. இன்று தமிழில் உயரிய நோக்கத்தோடு வெளிவரும் திங்கள் வெளியீடுகள் ஒரு சில காணக் கிடக்கின்றன. ஆயினும் அவற்றுள்ளும் மேற்கூறிய தெலுங்கு மாசிகையின் பண்புகளைப் பெற விழைந்து நிற்பவை காணேம். நந் தமிழ் "பாரதி"யோ வெனில் ஆங்கிலத்தில் கல்கத்தாவினின்று வெளிவரும் ஒப்பற்ற மாசிகையாகிய "மாடர்ன் ரிவ்யூ"வை முன்மாதிரியாகக் கொண்டு வளர்ச்சி பெறவேண்டுமென்ற முகவுரையுடன் ஒரு கிராமத்தில் தோன்றி, இற்றைக்குச் சுமார் 3 ஆண்டுகளாக தமிழகத்தில் உலவிவருகிறது. பிற மாதப் பத்திரிகைகளைவிட சீரிய முறையில், தேசாபிமானம் ததும்ப, உள்ளக்கிளர்ச்சி வாய்ந்த அரிய விஷயங்களைத் தாங்கி குறைந்த சந்தாவில் படங்களுடன் இஃது தமிழகத்திற்குத் தொண்டு புரிந்துவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆயினும், அஃது மேற்கொண்ட—குறிக்கோளாகக்கொண்ட சிறப்பை இன்னும் பெறவில்லை யென்றே கூறுவோம். 'பாரதி' இன்னும் அளவிலும் (சைஸ்), பக்கங்களிலும், விஷயங்களிலும், விஷயங்களுக்கேற்ற சித்திரப் படங்களிலும் பெருக்கமடையவேண்டும். தமிழகத்தில் இஃது ஓர் ஒப்பற்ற உயர்தனிப் பத்திரிகையாகத் திகழவேண்டும். சந்தாவை 5 ரூபாயாக உயர்த்தியாயினும் அளவில் பெரிதாக்கி வெளியிடல் மிக மிக அவசியம். தமிழில் இஃதொரு "மாடர்ன் ரிவ்யூ"வாகவே விளங்கவேண்டும். இப்பத்திரிகை செய்ய வேண்டிய ஊழியங்கள் பலவுள. தமிழ் நாட்டுப் பூர்வ சின்னங்கள் ஆராயப்பட வேண்டும். அவற்றின் உருவப் படங்கள் வெளிப்படவேண்டும். நந்நாட்டின் உண்மைச் சரித்திரம் வெளிவரவேண்டும், நாட்டு மொழி வளர்ச்சிக்கான முறைகள் தேடப்படவேண்டும். தேச நன்மைக்கான துறைகள் திறக்கப்படவேண்டும். பூத பௌதிக விஞ்ஞான சாத்திரங்கள் தமிழில் தோன்றவேண்டும். சமூக சீர்திருத்தங்களுக்கான முறைகள் கோலவேண்டும். தேசிய

ஒற்றுமை காணவேண்டும். மூட நம்பிக்கைகள் ஒழியவேண்டும். விரிந்த நோக்கமும், பரந்த அறிவும் உதயமாகவேண்டும். பெண்கள் உலகம் உயர்வடையவேண்டும். சாதி பேதங்கள் சாகவேண்டும். சமத்துவமும், சகோதரத்துவமும், சுதந்திரத்துவமும் எங்கும் நிலவவேண்டும். இன்னோரன்ன பல நன்மைகளையும் சாதிப்பதற்கு நம் "பாரதி" பாடுபட வேண்டும்.

ஒரு பத்திரிகைச் செழித்தோங்க வேண்டுமென்றால் அதை ஆதரிப்பவர்கள் பலரிருக்கவேண்டும். சந்தாதாரர்கள் எவ்வளவுக்கெவ்வளவு பெருக்கமடைகிறார்களோ அதற்கேற்பவே அப்பத்திரிகையும் வளர்ச்சியடையும். எனவே நந் தமிழகத்தார் பல பத்திரிகைகளைக் கைவிட்டதுபோலன்றி, இப் "பாரதி"யை நந் தேசத் தாயாம் பாரத தேவியினது திருவருளால்—திருநாமத்தால் ஒவ்வொருவரும் ஆதரிக்க வேண்டுவதவசியம். தமிழ்நாட்டுக் கிராமப் பஞ்சாயத்துகளும், தாலுகா ஜில்லா போர்டுகளும், தத்தம் கீழுள்ள கல்வி ஸ்தாபனங்கள் ஒவ்வொன்றுக்கும் "பாரதி"யை வரவழைக்கச் செய்யவேண்டும். ஆங்காங்குள்ள கிராமப் புத்தகாலயங்களும் இதை ஆதரிக்கவேண்டும். தமிழச் சகோதர சகோதரிகள் ஒவ்வொருவரும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து துணைபுரிய வேண்டும். தமிழ்நாட்டு அறிஞர்கள் பலரும் பல துறைப்பற்றிய அரிய கட்டுரைகளை எழுதி "பாரதி"யை அலங்கரிக்க வேண்டும். சித்திரக் கலை பயின்ற மேதாவிகள் தங்கள் சித்திரங்களை "பாரதி"யில் வெளியிட்டு மகிழவேண்டும். பண்டிதர், பாமரர், சிறியோர், பெரியோர், ஆடவர், மகளிர் முதலிய பலருக்கும் பயன்படும் பான்மையில் பல விஷயங்களைத் தாங்கி, உருவிலும், அமைப்பிலும், உள்ளுரையிலும் பெரிதாகி நம் "பாரதி" வெளிவரவேண்டும். எனவே பாரதியின் அதிபராகிய நமதன்பர் திருவாளர் ரா. நாராயணஸ்வாமி யவர்கள் நமது வேண்டுகோளுக்கிணங்கிச் சந்தாவை அதிகப்படுத்தி "பாரதி"யைப் பெரிதாக்குமாறு வேண்டிக்கொள்கிறேன். பாரத தேவி அருள் புரிவாராக.

வந்தே மாதரம்.

---

# லைலி மஜனூன் *




பாலைவனத்தினிடையே, கடலில் காணப்படும் தீவுகள்போல, அங்கங்கே நீர்வளம் பெற்றுத் திகழும் ஓயஸிஸ் என்று சொல்லப்படும் ஜீவபூமிகளுள் ஒன்றில் இன்று ஒரு பெரிய கொண்டாட்டம். இபனே ஸலாமுடைய கூடாரம் தரையிலிருந்து துவஜ ஸ்தம்பம் வரையில் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. தரையில், நீல வானத்தையும் இளம் பசும் புல்லையும் பழித்ததாய், கைக்குப் பஞ்சுபோலவும் பட்டுப்போலவும் மிருதுவாயிருக்கிற, துருக்கிஸ்தானத்துப் பெண்கள் செய்த, உயர்ந்த இந்திர நீல ஜமக்காளம் விரித்திருக்கிறது. கூடாரத்தின் மூங்கில் தூண்களெல்லாம் பலவேறு வர்ணமுள்ள பட்டுத்துணிகளால் மூடப்பட்டு வைரத் தூண்கள்போலவும் கோமேதகத் தூண்கள்போலவும் மாணிக்கத் தூண்கள்போலவும் ஜ்வலிக்கின்றன. மேலே கூடாரத்தின் உட்புறம் பச்சைப் பசும் பட்டால் போர்த்தப்பட்டிருக்கிறது. அதனிடையே, சபாமண்டபத்தின் மீது, செம்பவளவல்லியையும்விடச் சிவந்த பட்டால் செய்த விதானம் விளங்குகின்றது.

காலமேமுதல் வாத்தியங்கள் கோஷித்துக்கொண்டிருக்கின்றன. காயக ஸ்திரீகள் குயில்போன்ற குரலில் பாடிக்கொண்டிருக்கிறார்கள். இன்னொருபுறம் ஆட்டக் கச்சேரி நடந்துகொண்டிருக்கிறது. ஜீவ பூமியில் சேர்ந்துள்ள ஜனங்களெல்லாம் இந்தக் கூடாரத்தில் கூடியிருக்கிறார்கள். எல்லோரும் ஆனந்த சாகரத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். ஏனெனில், அராபியாவின் தாரகை என்று எல்லோராலும் புகழ்ந்து சொல்லப்பட்ட லைலிக்கு இன்று கலியாணம் நடைபெற இருக்கிறது.

---

* எமக்கு ஒரு புஸ்தக ஜாப்தா (கேட்லாக்), லண்டன் பேர்னுட் க்வாரிட்ச் கம்பெனியாரிடமிருந்து வந்தது. அதிலிருந்த அனேக அற்புதப் படங்களில் பாலைவனத்தில் மஜனூனை, லைலா என்ற பெண்மணி காண்பதுவும் ஒன்று. லைலாவைப் பற்றிக் கதைகளிருக்கிறதா வென்று எமது சகோதரரிடம் ஆராய்ந்ததில் வீரத் தமிழர், வி. வி. எஸ். அய்யாவர்கள் எழுதியிருப்பதாக அறிந்தோம். "பாரதி"யின் வாசகர்கள் படித்தனுபவிக்கும் பொருட்டு, நின்றுபோன "பால பாரதி"யிலிருந்து இதை எடுத்து இங்கு வெளியிட்டிருக்கிறோம். அன்பர்கள் அதன் உண்மையைக் காண்பார்களாக.

ஆசிரியர், "பாரதி."

இந்தக் கோலாகலத்தினிடையில், இந்த ஆனந்தக் கடலின் மத்தியில் ஒரு பிராணி துக்காதிக்கத்தால் மனம் பொருமிக்கொண்டிருக்கிறது என்றால் யார் ஆச்சரியப்படமாட்டார்கள்? அந்தப் பிராணியும் கலியாணப் பெண்ணான லைலிதான் என்று சொல்லுவோமானால் யார் நம்புவார்கள்? ஆனால் அது நிஜமே. லைலி ஆழம் காணமுடியாத துக்கக்கடலில் மூழ்கிப்போயிருக்கிறாள்.

இபனே ஸலாம் அந்தப் பிரதேசங்களிலுள்ள யாவரிலும் பணக்காரன். அவனிடத்திலிருந்த ஒட்டகைகளுக்கும் குதிரைகளுக்கும் நீக்ரோவ அடிமைகளுக்கும தாதியருக்கும் கணக்கே யில்லை. மணற்காடுகளிலுள்ள ஒவ்வொரு பாதையிலும் அவனுடைய காரியஸ்தர்களும் ஆட்களும் துருக்கி ஸ்தானத்துக்கும், பாரஸீகத்துக்கும், எகிப்துக்கும், சிரியாவுக்கும், வியாபாரார்த்தமாகப் போனவண்ணமாயும் அவ்வூர்களினின்று திரும்பியவண்ணமாயும் இருப்பார். அவனுடைய உண்டியல் மெர்விலிருந்து ஆஸ்திராகான்வரையிலும் உள்ள எந்த ஊரிலும் செலாவணியாகும். இப்பேர்ப்பட்ட தனவந்தனுக்கு வாழ்க்கைப்பட வேண்டுமென்று எத்தனையோ அராபியப் பெண்கள் தவஞ்செய்துகொண்டிருந்தார்கள். அவனுக்கு மனைவியானால் அத்தனை செல்வத்தையும் ஆளலாமன்றோ?

ஆனால் லைலி அவ்விதம் நினைக்கவில்லை. மனதில் அன்பில்லாமல் அந்தச் செல்வத்தை வைத்துக்கொண்டு என்ன செய்கிறது? அவள் தன் இருதயத்தைத் தன் பாலிய சிநேகிதனான காயிஸ் என்பவனுக்குத் தத்தம் செய்துவிட்டிருந்தாள். இனி இபனே ஸலாமுக்குக் கொடுக்க இருதயம் ஏது?

காயிஸ், லைலியின் பாலிய சிநேகிதன் என்றோம். அவனுடைய தகப்பனான ஸைது ஒம்ரியும், லைலியினுடைய தகப்பனும் மிகுந்த நண்பர்கள். நஜத் மணற் பிரதேசத்திலுள்ள இரண்டு அராபிய குலங்களுக்கு இவர்கள் தலைவர். பாலைவனத்தில் வசிக்கவோ முடியாது. அம்மணற் சாகரத்தினிடையிலுள்ள ஜீவ பூமிக்குச் சென்றால்தான் மனிதனுக்குப் பேரீச்சம் பழமும் மிருகங்களுக்குப் புல்லும் அகப்படும். ஒரு ஜீவபூமியில் இரண்டு மூன்று மாதங்களுக்குமேல் ஒரு கூட்டம் தங்கமுடியாது. சில பசுமை நிலங்களில் நாலைந்து நாள் சேர்ந்தாப்போல் தங்குவதே கடினமாகிவிடும். மனிதனுக்கும் மிருகங்களுக்கும் தீனி தீர்ந்துபோய்விடும். பசுமை நிலத்தில் இனி சாப்பாட்டுக்கு ஒன்றும் அகப்படாது என்று கண்டதும் அராபியர் தங்கள் ஒட்டகைகள், குதிரைகள் முதலியவற்றை ஓட்டிக்கொண்டு இன்னொரு பசுமை நிலத்துக்குச் செல்லுவார்கள். வருஷம் முன்னூற் றறுபத்தைந்து நாட்களுக்கும் இவர்களுக்கு இதுவேதான் காரியம். இடையிடையே வியாபாரத்துக்காகக் கூட்டமாய்ப் போகும் பிரயாணிகளைத்



தாக்கி இவர்கள் அவர்களிடமுள்ள விலையுயர்ந்த பொருள்களைப் பறித்துக் கொள்ளுவார்கள். தாங்களும் மற்றோரால் தாக்கப்படுவார்கள். இப்பேர்ப்பட்ட அராபியர் கூட்டத்தில்தான் லைலியும் காயிஸும் பிறந்து வளர்ந்தார்கள்.

காதல் வளரும் வழியை யாரால் கண்டுபிடித்துச் சொல்லலாகும்? கண் எல்லோரையும் பார்க்கிறது; காது பேசுவோர் வார்த்தைகளையெல்லாம் கேட்கிறது; வாய், காரியம் இருக்கிறதோ இல்லையோ, பலரிடத்திலும் பேசுகிறது. ஆனால் கண்ணானது ஒருவரைப் பார்க்கும்போது மற்றயாரைப் பார்க்கும்போதும் அடையாத இன்பத்தை அடைகிறது. அவர் பேசுவது சாமானிய விஷயமானாலும், அவருடைய குரலில் விசேஷமான இனிமை யிராவிட்டாலும், அவருடைய வார்த்தையைக் காது தேவாமிர்தத்தைப் பருகுவதுபோலப் பருகுகிறது. அவரிடத்தில் பேசும்போது வாய் குளறுகிறது; நாக்கு கொஞ்சுகிறது; இதெல்லாம் அன்பின் அடையாளம். ஆனால் இந்த அன்பு எப்படிப் பிறக்கிறது என்றாலோ, அது தேவ ரகசியம்—மனிதரால் சொல்ல முடியாது. அவ்விரண்டு அராபியக் கூட்டங்களிலுமுள்ள குழந்தைகள் எல்லாம் ஒன்றோடொன்று விளையாடும்போதும், சாப்பிடும்போதும், தூங்கும்போதும், ஒரு ஜீவபூமியைவிட்டு இன்னொரு ஜீவபூமிக்குப் போகும்போதும் எப்பொழுதும் கூடவே இருக்கும். ஆனால் காயிஸ் இருக்கும்போதுதான் லைலி பூரண குதூகலத்தோடிருப்பாள். பிரயாணப்படும்போது அவன்தான் அவள் ஏறும் ஒட்டகக் குட்டியைப் பிடித்துக்கொள்ளவேணும். பிரயாணம் போகும்போது அவளுடைய ஒட்டகம் அவனுடைய ஒட்டகத்தோடு ஜோடியாய்ப் போகவேண்டும். கூடிக் கூடிப் பேச என்னதான் சமாசாரம் இருக்குமோ? இருவரும் எப்போது பார்த்தாலும் பேசிக்கொண்டேயிருப்பார்கள். தங்குமிடங்களில் ஒரு ரோஜாச் செடியைக் காயிஸ் கண்டுவிட்டானால் அன்றைக்கு அது மொட்டைதான். ஒருவரை எடுக்க விடமாட்டான். எல்லா மலர்களையும் தானே பறித்து மாலை கட்டி லைலியின் கழுத்தில் போட்டுவிடுவான். அந்த மாலை கழுத்தில் விழுந்ததும், கண்ணன் மாலையைப் பெற்ற சத்தியபாமைக்குக்கூட அத்தனை செருக்கு இராது—லைலிக்கு அத்தனை கர்வம் உண்டாகிவிடும். காயிஸ் என்மீது இவ்வளவு அன்போடிருக்கையில் எனக்கு யார் நிகர் என்று நினைப்பவள்போலப் பார்ப்பாள்.

லைலிக்குக் காயிஸின்பேரில் உள்ள அன்பு எவ்வளவோ அதற்குப் பன்மடங்கு கொண்டதாகும் காயிஸுக்கு லைலியின்பேரில் உள்ள காதல். லைலியாவது மற்றப் பையன்களோடு விளையாடாதிருக்கமாட்டாள். ஆனால் காயிஸுக்கு லைலி இருந்தால்தான் விளையாட முடியும். அவள் இல்லாத விளையாட்டில் அவன் சேரவேமாட்டான். உலகம்

முழுவதும் அவளுடைய இரண்டு விழிகளுக்குள் அடங்கிவிட்டன என்பது அவனுடைய நினைவுபோலும்!

வயது வளர வளர இருவருக்கும் அன்பு வளர்ந்தேவந்தது. இருவரும் வயதிலும், உருவத்திலும், குலத்திலும் ஒருவருக்கொருவர் இணையாகவே இருந்ததினால், லைலியைக் காயிஸுக்குத்தான் விவாகம்செய்து தரவேண்டும் என்கிற விஷயத்தில் அவ்விரு குடும்பங்களும் ஒரே அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தன. அவர்களுடைய அனுசாரர்களாகிய பந்து ஜனங்களும் அந்த அழகிய யுவதி யுவர்களுடைய விவாகத்தைக் கண் குளிரப் பார்க்கவேணும் என்கிற ஆசையோடு கண்ணைத் திட்டிக்கொண்டிருந்தார்கள்.

கடைசியாக இருவருடைய தாய் தந்தையரும் ஒன்றுகூடி அடுத்த ஆறுவது மாதத்தில் ஒரு நல்ல முகூர்த்தத்தில் அவர்களுக்கு விவாகத்தைச் செய்துவைத்துவிடுகிறது என்று நிச்சயம் செய்துகொண்டார்கள். காயிஸுக்கு உண்டான ஆனந்தத்துக்கு அளவில்லை. ஆனால், அன்பு நிறைந்திருப்பினும் லைலிக்கு ஏதாவது விலை உயர்ந்த பொருள்கள் சுல்கமாகத் தரவேண்டும் என்று அவளுக்கு விருப்பமுண்டாயிற்று. ஆகையால், அவளிடம் தன் சகோதரியை அனுப்பி அவளுக்குச் சீராக என்ன வேண்டும் என்று கேட்டுவரச் சொன்னான்.

"காயிஸின் அன்பு ஒன்றே எனக்குப் போதாதா, பாதிமா? எனக்குச் சுல்கமும் வேண்டுமோ? ஆனால் காயிஸே விரும்பித் தருகிறேன் என்னும்போது மறுப்பதும் அழகில்லை. எனக்கு நெடு நாளாய்ப் பாரஸீகத்துக் கிளிப்பிள்ளையும், இந்தியா தேசத்து மான்குட்டியும் வளர்க்கவேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. முடிந்தால் இவை இரண்டையும் எனக்கு வாங்கித்தரச் சொல்லு," என்றாள் லைலி.

அதற்குப் பாதிமா, "அப்படியே சொல்லுகிறேன், லைலி; கலியாணம் இன்னும் ஆறுமாதமிருக்கிறது. அதற்குள்ளும் அகப்படாமற் போய்விடுகிறதா?" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டாள்.

காயிஸுக்கு லைலியின் விருப்பம் தெரிந்ததும் அதைப் பூர்த்தி செய்விப்பதற்காகத் தன் தந்தையரிடம் செலவு பெற்றுக்கொண்டு ஒரு வியாபாரக் கூட்டத்தோடு சேர்ந்து பாரஸீகம் நோக்கிப் புறப்பட்டுவிட்டான். லைலி கேட்ட பொருள்கள் அராபியா பாலைவனத்தில் கிடையா வானதாலும் வியாபாரிகள் இவற்றைக் கொண்டுவருகிற வழக்கமில்லை யானதாலும் காயிஸ் இவற்றுக்காக நேரே போகவேண்டியதாயிற்று.



காயிஸ் போய்க் கொஞ்ச நாட்களுக்கெல்லாம் அவனுடைய தகப்பனும் தாயும் திடீரென இறந்துபோய்விட்டார்கள். தலைவன் இறந்துபோய்விட்டதால் அவனுக்குக் கீழ்ப்படிந்துள்ள பந்துக் கூட்டமும் அராபியர் கூட்டமும் கலைந்துபோயின. லைலியின் தகப்பனுக்கும் கஷ்டங்கள் வந்துவிட்டன. அவன் சுபாவத்தில் செலவுகாரன். தானஞ் செய்வதிலும், வேட்டைகளிலும், உற்சவங்கள் கொண்டாடுவதிலும், மக்கா ஷரீபுக்குத் தன் பரிவாரங்களோடு ஹஜ் செல்லுவதிலும் பொருள்களை ஏராளமாய்ச் செலவுசெய்வான். செலவு செய்பவர்களுக்குக் கடன் வாங்குவது இயற்கையன்றோ? ஆகையால் நாளுக்கு நாள் அதிகப்படும் செலவுக்காகத் தலை கால் தெரியாமல் கடன் வாங்கி வந்தான். ஆனால் வாங்கும் கடன்களுக்கு ஏதாவது ஒரு நாள் பதில் சொல்லித் தீரவேண்டியதன்றோ? பல ஆண்டுகளாக ஏறிவந்த கடன்களுக்காகக் கடன்காரர்கள் அவனை நெருக்க ஆரம்பித்தார்கள். கடன்கள் சொத்துக்குமேல் ஏறிவிட்டன. என்ன செய்வான் பாவம்? லைலியின் கதி என்னவாகும் என்று மனம் பொருமிக்கொண்டு, வேறு வழி ஒன்றும் தோன்றாததால், இபனே ஸலாமிடம் மொத்தமாய்த் தொகை வாங்கிச் சில்லறைக் கடன்களைத் தீர்த்துவிட்டு இனிச் செட்டாக இருந்து இபனே ஸலாமின் கடனையும் தீர்த்துவிடலாம் என்று நிர்ணயித்து அவன் இருக்கும் இடம் சென்று அவனைக் கடன் கேட்டான். இபனே ஸலாம் "கொடுக்கிறேன், ஆனால் என்ன தருவாய்?" என்று கேட்டான்.

"ஈடுதானே? என் குதிரை, ஒட்டகை, கூடாரம், முதலிய சகலத்தையும் ஈடாக வைக்கிறேன். ஹைறயீல் சுல்தானுக்கும் எறியாது சுல்தானுக்கும் சண்டை நடக்கும்போல் இருக்கிறது; என் ஆட்களோடு எறியாது சுல்தான் சேனையில் சேர்ந்து போர் செய்தேனானால் வெற்றி நிச்சயம். ஹைறயீல் கொள்ளையில் இப்பொழுது உன்னைக் கேட்கும் கடனைவிடப் பத்து மடங்கு கொண்ட கடனைக்கூட ஊதித் தள்ளிவிடுவேன்," என்றான் லைலியின் தகப்பன்.

"ஹைறயீல் கொள்ளையை நம்பிக் கடன் கொடுக்க முடியுமா, உசேன்? ஆனால், ஒன்று செய்வாயானால் நீ கேட்கும் தொகையை உனக்கு இனாமாகக் கொடுத்துவிடுவேன்," என்று இபனே ஸலாம் சொன்னான்.

"எனக்கு இனாமாக ஒன்றும் வேண்டியதில்லை. ஆனால், நீ கடன் கொடுப்பதாக இருந்து, நீ விரும்பும் காரியமும் என்னால் ஆகக் கூடியதாயிருந்தால் சந்தோஷத்தோடு செய்வேன்," என்று உசேன் கர்வத்தோடு சொன்னான்.

இபனே ஸலாம்: “உன்னால் முடியாததை நான் கேட்பேனோ? உன்னுடைய லைலாவின்மீது நான் மோகங்கொண்டிருக்கிறேன்; அவளை எனக்கு விவாகம் செய்து கொடுப்பாயானால் உனக்கு வேண்டியிருக்கிற கடனையும் கொடுப்பதோடு என்னுடைய அளவற்ற பொருளையும் அவளுக்கே ஸ்திரீதனமாக வைப்பேன்.”

உஸேன் எதையோ கேட்டுவிட்டாயே, ஸலாம்? லைலியைக் காயிஸுக்குக் கொடுத்துவிடுகிறது என்று இறந்துபோன அவனுடைய தகப்பனும் நானும் நிச்சயம் செய்துகொண்டிருக்கிறோமே; அதை எப்படி அழிப்பேன்? லைலியின் தங்கை லைலியைவிட ரூபவதியாக இருக்கிறாள்; அவளைக் கேள், உனக்கு சந்தோஷத்தோடு கொடுக்கிறேன். அவளுக்கு நீ சொல்லும் ஸ்திரீதனம் அத்தனையும் கொடுக்கவேண்டாம். எனக்குத் தற்பொழுது வேண்டிய தொகையை மாத்திரம் கடனாகக் கொடுத்து உனக்கு இஷ்டமான பொருளை ஸ்திரீதனமாய்த் தரலாம்.”

இபனே ஸலாம்: “இருதயம் என்ன, பொன் தங்கமா, எந்தப் பெட்டியில் வேணுமானாலும் வைத்து மூடலாம் என்பதற்கு? லைலியின்மீது விழுந்திருக்கிற காதல் வேறொருத்தியின்மேல் எப்படி விழும்? எனக்கும் நேரமாகிறது. உனக்கு இஷ்டமானால் லைலியை எனக்குக் கொடுத்து உனக்கிஷ்டமான பொருளைப் பெற்றுக்கொள். இல்லையாகில் என்னிடம் கடனுக்காக வரவேண்டாம் என்று வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.”

இந்தக் கண்டிப்பான பதிலைப் பெற்றுக்கொண்டு உஸேன் வீட்டுக்குச் சென்றான். யாருக்கும் லைலியைக் காயிஸைத் தவிர வேறொருவருக்கும் கொடுக்க இஷ்டமில்லை. என்ன வந்தாலும் வரட்டும், சொன்ன வார்த்தையும் தவறுவதில்லை, லைலி காதலியாதவனுக்கு அவளைக் கொடுப்பதுமில்லை என்று நிச்சயித்துக்கொண்டு ஒருமாதமிருந்தார்கள். ஆனால் நாளுக்கு நாள் கடன்காரர்களுடைய நிர்ப்பந்தம் அதிகரித்தே வந்தது. கெடுச் சொல்லிச் சொல்லி உஸேனுக்கு நாக்குத் தேய்ந்தது. முகமும் சின்னதாய்ப் போய்விட்டது.

உபத்திரவங்கள் ஒரு அளவுக்கு மிஞ்சிப்போய்விட்டால் மனிதன் எப்பேர்ப்பட்ட நிர்ணயமாயிருந்தாலும் அதை மறந்துவிடுகிறான். அப்படியிருக்க, பெண் குழந்தையின் காதலைப்பற்றியா பிடிவாதமாய் நிற்கப்போகிறான்? உலகத்தில் எல்லாப் பொருள்களிலும் உயர்ந்தது சுத்தமான, அனன்னியமான அன்பு. அதிலும் ஸ்திரீகளுக்குக் காதலேதான் ஜீவநாடி. இருந்தும், மனிதன் பெண் மக்களின் காதலை எத்தனை அலக்ஷியத்தோடு மிதித்துவிடுகிறான்! இந்த விஷயத்தில் உஸேனை மிகக் கெட்டவன் என்று சொல்லக்கூடாது. எத்தனை தகப்



பன்மார் அவனைப்போல் ஸலாமினுடைய விருப்பத்துக்குச் சம்மதியாமல் திரும்பியிருப்பர்? எத்தனைபேர் வேறு ஒரு சுலபமான வழி இருக்கையில் அவனைப்போல் கடன்காரர்களிடம் முகத்திடி பட்டுக் கொண்டு ஒருவருஷ காலம் இருந்திருப்பார்? ஆகையால், அவனைக் கெட்டவன் என்று சொல்லுவதில் என்ன பயன்? இப்பொழுது லைலியை இபனே ஸலாமுக்குத்தான் கொடுக்கவேண்டியது என்பதற்கு அவன் பல காரணங்களும் சொன்னான். “மூன்று வருஷ காலமாய்க் காயிஸ் இருக்குமிடமே தெரியவில்லை. (அப்பொழுது காயிஸ் போய் மூன்று வருஷமாகிவிட்டது) அனேகமாய் அவன் இறந்தேபோயிருப்பான். அப்படியே அவன் உயிரோடிருந்தாலும் ஆறு மாதத்தில் நிக்கா நடத்துவதாக இருந்து இப்பொழுது மூன்று வருஷம் காத்தாகிவிட்டது. அவனுக்காக எத்தனை நாள் லைலியைக் கன்னிகையாக வைத்துக்கொண்டிருக்கிறது? ஸலாமுக்கும் தாய் தந்தை உற்றார் உறவினர் ஒருவருமில்லை. இப்பொழுதே தன் ஆஸ்தியெல்லாம் நமது லைலாவுக்குச் சுல்கமாகத் தந்துவிடுகிறேன் என்கிறான். வயதிலும் இளைஞன்; ஆயுட் காலத்தில் இன்னும் எத்தனையோ பொருள் தேடுவான். எல்லாவற்றினும் மேலாக, நமது லைலாமீது பிராணப் பிரேமை வைத்திருக்கிறான். இல்லாவிட்டால் ஆஸ்தி அத்தனையும் இப்பொழுதே கன்னியா சுல்கமாகத் தரச் சம்மதிப்பானா?”

லைலியின் ஆற்றாமையைத் துடைக்க இத்தனை காரணங்கள் போதாவா என்று உஸேனும் அவனுடைய மனைவியும் உறவினரும் நினைத்தார்கள். ஆனால் லைலியோ? அவளுக்காகப் பேசுவோர் எவருமில்லை. காயிஸுக்காகப் பரிந்து பேசுவோர் ஒருவருமில்லை. அவளுடைய அளவிடமுடியாத காதலை வெளியிட்டுச் சொல்லவோ அவளுக்குத் தைரியமில்லை. தகப்பன் பேச்சைக் கடைசிவரையில் பிடிவாதமாய் நின்று தட்டவோ அவளுக்குத் திடமில்லை. ஆனால், ஸலாமை விவாகம் செய்துகொள்ளுகிறேன் என்று அவள் வாயால் சொன்னவளே அல்லள். பெண்கள் சுபாவத்திற் கேற்ப, நம்முடைய இஷ்டத்தை நிறைவேற்றக் கடவுள் ஏதாவது ஒரு வழி பிறப்பியாது போவாரா என்று ஒரு மூட நம்பிக்கை மாத்திரம் மனதில் வைத்துக்கொண்டு, ஆம் என்னாமலும் மாட்டேனென்னாமலும் பரம துக்காக்கிராந்தையாயிருந்தும் மௌனமாயிருந்துவிட்டாள். இந்தச் சம்பிரமத்தில் தான் நாம் முதலில் சொன்ன விவாக உற்சவம் நடைபெற்றது.

விவாகத்துக்குப் பூர்வாங்கமெல்லாம் ஆகிவிட்டது, காஜியும், “இப்பொழுது உனக்கு நிக்காஹு செய்ய இருக்கிற லைலிக்குக் கன்னியா சுல்கமாக என்ன கொடுக்கிறாய்?” என்று சம்பிரதாய ரீதியாய்

இபனே ஸலாமைப் பார்த்துக் கேட்க, அவன், "தற்பொழுது எனக்குச் சொந்தமாயுள்ள ஒட்டகைகள், குதிரைகள், ஆடு மாடுகள், வியாபாரச் சரக்குகள், தங்கம் வெள்ளி நாணயங்கள், ஆயுதங்கள், தாசதாசிகள், முதலிய சமஸ்தான சொத்துக்களையும் என் லைலாவுக்குத் தானமாகக் கொடுத்துவிடுகிறேன். எங்கெந்த தேசாந்தரங்களில் என்னுடைய வியாபாரச் சரக்குகளும் நிலுவைகளும் இப்பொழுது இருக்கின்றனவோ அவை யெல்லாமும் இந்த லைலாவுக்கே சொந்தமாகக் கொடுத்துவிட்டேன்," என்று சொன்னான்.

இப்படிச் சொல்லி முடித்தானோ இல்லையோ, "ஹைறயீல் படை!" "ஹைறயீல் படை!" என்ற சத்தம் தண்ணிலமனைத்திலும் எல்லாப் பாகங்களினின்றும் ஏக காலத்தில் கிளம்பிற்று. நிசம்தான். ஒரு வருஷத்திற்கு முன் எறியாது சுல்தானோடு சேர்ந்து ஹைறயீல் சுல்தானைத் தாக்கப்போகிறேனென்று ஸலாமினிடம் உஸேன் சொன்ன வார்த்தை பரதேசித் தபால்மூலமாகச் சென்று ஹைறயீல் சுல்தானான நவ்பல் காதில் விழுந்துவிட்டது. அவன் சினத்தோடு பொங்கித் தன் ஆட்களை யெல்லாம் சேர்த்துக்கொண்டு உஸேனைத் தேடிவந்து, கடைசியாக இந்தத் தண்ணிலத்தில் அவனைக் கண்டுபிடித்து விவாக சமயத்திலேயே அவனுடைய கூடாரத்தைத் தாக்கினான்.

லைலிக்கு நிக்காஹ் சடங்கு இவ்வாறு தடைப்பட்டதில் சந்தோஷமாய்விட்டது என்று நாம் சொல்லவே வேண்டியதில்லை. ஸலாமுக்கும் அது சந்தோஷம் தந்தது என்றால் படிப்போர் ஆச்சரியப்படுவார்கள். உண்மை என்ன என்றால், காயிஸ் மகா தீரனென்று எங்கு பார்த்தாலும் பேர்வாங்கியிருந்தான். ஸலாமும் தைரியத்திலும் பலத்திலும் யாருக்கும் தோற்றவனல்லனாயினும், அவனுடைய ஏராளமான செல்வத்தினால்தான் அவனுக்குப் பேர் வந்திருந்ததே ஒழிய அவனுடைய தீரத்தைப்பற்றி ஒருவருமே பேசுவதில்லை. ரூபவதிகள் தீரர்களுடைய அன்பைத்தான் மதிப்பது வழக்கமாதலால், இந்தப் போரில் தீரத்தைக் காட்டினால் லைலிக்குத் தன்மீது உண்மையான காதல்பிறந்துவிடுமென நினைத்து இந்தப் போர் தோன்றினமைபற்றி ஸலாம் சந்தோஷப்பட்டான். அவனுடைய ஆட்கள் ஜீவபூமியில் குழுமியிருந்தார்கள். அவனும் கம்பலை பிறந்ததும் மணப்பந்தரினின்று எழுந்து, "லைலா, இந்தச் சத்துருக்களை வென்று உன் தகப்பனையும் உன்னையும் காத்துப் பிறகு உன்னை மணந்துகொள்கிறேன், அதுவரையில் விடையளிப்பாய்" என்று லைலியிடம் சொல்லிவிட்டு, துக்கமும் நாணமும் பயமும் நிறைந்திருந்தும் முன்னிலும் அதிக அழகுடன் விளங்கிய அவளுடைய ஒளியைக் கள் குடிப்பவன்போலக் கண்ணால் பருகிவிட்டு, ஆஜானுபாகுவான தன் குதிரைமீது ஏறிக் கத்தியும் கேடயமுமாய்ச் சத்துருக்களின் கூட்டத்தில் புகுந்து, இருபக்கமும் வாளால் வீசி



மதுரைவீரன்போல் விளங்கினான். சண்டையைப்பற்றி அதிகமாய் வர்ணிப்பதில் காரியமில்லை. இரண்டு சத்துருக்களும் ஒருவருக்கொருவர் தோலாமல் அடலும் வீரியமும் சாமர்த்தியமும் காட்டினார்கள். நவ்பலினுடைய மகன் உஸேனுடைய கூடாரத்தைச் சூறையாடினான். அவன் செல்லுமிடமெல்லாம் ஸலாமினுடைய ஆட்களின் தலைகளும் உஸேனுடைய ஆட்களின் தலைகளும் உருண்டன. காலொடிந்த ஆட்களும், கையொடிந்த ஆட்களும் கணக்கில்லாமல் விழுந்துகிடந்தார்கள். ஹைறயீல் ராஜ குமாரன் வீராதி வீரர்களை யெல்லாம் பருந்துகளுக்கு இரையாகக் கொடுத்துக்கொண்டு போர்க்களத்தில் சுறங்குபோல் சுழன்றான். ஆனால், இபனே ஸலாம் தன் ஆட்களில் மிகவும் தீரமானவர் ஒரு ஐம்பது பேரை அழைத்துக்கொண்டு ஹைறயீல் படையின் பின்புறத்துக்கு வளைந்து சென்று அங்கேயுள்ள காவற் படையைச் சாமர்த்தியமாய்த் தாக்கினான். திரும்பிப் போகும் வழியைச் சத்துரு அடைத்துவிட்டான் என்று தெரிந்ததும் ஹைறயீல் படையில் கலக்கம் உண்டாகிவிட்டது. ஆட்கள் நாலாபக்கமும் சிதறி ஓடத் தலைப்பட்டார்கள். ஹைறயீல் அரசிளங்குமாரன் அனுசரர்களின்றிச் சத்துருக்களுக்கிடையே தனியே நின்றவனாகிவிட்டான். ஸலாம் உடனே குதிரைமீது வந்து அவனெதிரே நின்று, தனியே நிற்கிறோமே என்று பயப்படவேண்டாம்; மற்றவர் ஒருவரும் உன்னைத் தாக்கமாட்டார்கள்; ஹடோ! எல்லோரும் பின் வாங்குங்கள்! என்னோடு நீ தனிப்போர் புரிந்து வென்றாயானால் உன்னை எதிர் ஜாமீனின்றி சகல மரியாதைகளுடனும் உன் ஊருக்கு அனுப்புகிறேன்," என்றான். அரச குமாரன் சம்மதித்தான். இருவரும் சாமர்த்தியவான்கள். குதிரையும் குதிரையும் மோதின. கேடயங்கள் ஒலித்தன. வாட்கள் வெயிலில் சூரியன்போல் மின்னின. அரசிளங்குமாரனுடைய வாள் மின்னல் வேகத்தோடு விழும். ஆனால் ஸலாமினுடைய கேடயம் அதனிலும் வேகமாய் வந்து அதைத் தேக்கிவிடும். பின்னவனுடைய வாள் யமனுடைய சூலாயுதம்போலத் தாக்கும். ஆனால் ஹைறயீல் குமாரனுடைய சர்மம் அதையே எதிர்பார்த்துக் காத்திருந்ததுபோல் அதை வெகு லாகவமாகத் தடுத்துவிடும். இவ்வாறு பதினைந்து நிமிஷம்வரையில் இந்தக் கத்திப்போர் நடந்தது. கடைசியில் அரசிளங்குமாரனுடைய கேடயம் வெட்டுண்டு ஒடிந்து போயிற்று. அதே நிமிஷத்தில் இபனே ஸலாமின் வாள் அவனை இரு துண்டாய்ப் போட்டுவிட்டது.

ஸலாமினுடைய படையும் உஸேனுடைய படையும் ஜயபேரிகை முழக்கின. ஆனால், சிரமப்பட்டுப் பெற்ற வெற்றியைப்பற்றி ஒருவருக்கொருவர் தன்யவாதம் பேசிக்கொள்ள ஆரம்பிக்கக்கூட இல்லை, அதற்குள் ஒரு அம்பு வந்து ஸலாமின் மார்பில் தைக்க அவன் கீழே

விழுந்துவிட்டான். அவ் அம்பின் வரலாறு என்ன என்றால், தனிப் போர் நடக்கையில் மற்றெல்லாரும் சும்மா இருந்ததைப் பார்த்து, ஓடிப்போன ஸைன்யத்தில் வீரரிற் சிலர் அரசிளங்குமாரனைத் தேடிக்கொண்டு போர்க்களத்தை நோக்கித் திரும்பிவந்தார்கள். எல்லோரும் வாட்போரைக் கவனித்திருந்ததால் அவர்களைக் கவனிப்பாருமில்லை, தேக்குவாருமில்லை. கடையிசில், அரசகுமாரன் விழுந்துவிட்டான் என்று கண்டதும் அவர்களுள் ஒருவன் கையிலுள்ள வில்லைக் குழைய வாங்கி அக்கொடிய அம்பை இபனே ஸலாமுடைய மருமத்தில் எய்துவிட்டான்.

மணப்பந்தல் பிணப்பந்தலாகிவிட்டது. பிரேதங்களையெல்லாம் அடக்கம் செய்ய ஏற்பாடு செய்துவிட்டு, காயமுண்டவர்களுக்குச் சிகிச்சை செய்ய ஹகீம்மாரை ஏவிவிட்டு, உஸேனனவன் ஸலாமை நல்ல படுக்கையில் படுக்கவைத்து இரண்டு கூட்டங்களுக்குள்ளும் மிகத் தேர்ந்த ஹக்கீம்கள் இரண்டுபேரைத் தருவித்து அவனுடைய காயத்தைப் பார்க்கச் சொன்னான். வெகுநேரம் கை பார்த்துவிட்டு அவர்கள் தகுந்தபடி பார்த்துவந்தால் ஸலாம் அனேகமாய்ப் பிழைத்துவிடலாம் என்று சொல்லி, அம்பைப் பிடுங்கி இரத்தத்தைக் கட்டும் மூலிகைகளைப் பிரயோகம் செய்தார்கள். ஸலாமுக்கு வேண்டிய சகல உபசாரங்களும் லைலி செய்தாள். அவனுக்குத் தானே விசுறுவாள். தன் கையாலேயே ஆகாரம் கரைத்துக் கொடுப்பாள். வைத்தியர் சொல்லும் ஒழுங்கின்படி உள்ளுக்கு ஔஷதமும் கொடுத்துக் காயத்தில் தைலமிட்டுக் கட்டும் கட்டுவாள். ஆனால் செளக்கியமாவது போல வந்து கடைசியில் இபனே ஸலாமுக்கு இசிவு கண்டு ஜன்னியும் பிறந்துவிட்டது. இனிப் பிழைக்கமாட்டானென்று ஏற்பட்டுவிட்டது. பிரக்ஞையோடிருக்கும்போதே அவன் காஜியையும் லைலியையும் பக்கத்தில் வரச்சொல்லி, லைலியைப் பார்த்து "என்பேரில் அன்பு உனக்கு இல்லாதிருந்தும் எனக்காக நீ பட்டது போல இத்தனை பாடு வேறு யாரும் படமாட்டார்கள். லைலா, உன்னை மணந்துகொண்டு உன்மீது எனக்குள்ள காதலைக் காட்டி உன் இருதயத்தில் என்மீது அன்பு பிறக்கும்படி செய்யவேண்டும் என்றிருந்தேன்; கொடுத்துவைக்காத பாவியாகப் போகிறேன்," என்றான். அதற்கு லைலி, "அண்ணா தாங்கள் இத்தனை செளரியம் காட்டி என்னையும் என் தகப்பனையும் காத்தபோது நான் இவ்வளவுகூடச் செய்யாவிட்டால் என்னைப்போல் நன்றிகெட்டவள் யார் இருப்பாள்? இப்பொழுதும் தாங்கள் நம்பிக்கையை விடவேண்டாம். வைத்தியரை மறுபடியும் வருவித்துத் தங்களைப் பிழைப்பிக்க என்ன வழி இருந்தாலும் அது செய்துவிடுவோம்," என்றாள். ஸலாம் அது கேட்டுத் தலையசைத்துக்கொண்டு, 'இனிப் பிழைப்பது ஏது? உலகில் என்னுடைய



ஓட்டம் ஆகிவிட்டது," என்று சொல்லிவிட்டு, காஜியைப் பார்த்து, "காஜி சாகிப்! இன்னும் ஐந்து நிமிஷங்கூட என் உயிர் நில்லாது. காலமே என் பொருளெல்லாம் லைலாவுக்குத் தத்தஞ் செய்கிறேன் என்று சொன்னேனன்றோ? அதை இப்பொழுது பூரணப் பிரக்ஞையோடு காயம் செய்துவிடுகிறேன். என்னுடைய சகல பொருள்களும் எனக்கு இப்பொழுது சகோதரியாய்ப்போய்விட்ட லைலாவுக்குச் சொந்தம்" என்று குழறிக்குழறி மெல்லச் சொல்லிவிட்டு அப்படியே உயிரற்றுப்போய் விழுந்துவிட்டான்.

லைலியின் இஷ்டப்படி உஸேனும் இபனே ஸலாமின் படைத்தலைவர்களும், கணக்கர்களும் அவனுக்கு வெகு விமரிசையாகச் சாமக்கிரியைகள் நடத்தி, அவனுக்கு மிக அலங்காரமாக ஓர் சமாதியும் கட்டிவைத்தார்கள். அவன் மரணத்துக்காக லைலி ஆராத் துயரமடைந்தாள். இத்தனை தீரமும் தயாளமும் உள்ளவன் எந்த இருதயத்தைத்தான் இளக்கமாட்டான்?

உஸேனுடைய கடன்களெல்லாம் தீர்ந்துவிட்டன. கொஞ்சநாள் கழித்து உஸேனும் இறந்துபோய்விட்டான். இபனே ஸலாமுடைய ஆஸ்திக்கும் உஸேனுடைய ஆஸ்திக்கும் லைலியே பாத்தியஸ்தியாகிவிட்டாள். கடைசிக் காலத்தில் ஸலாமுக்கு லைலி செய்த சுசுருஷைகளைப் பார்த்து அவனுடைய ஆட்களெல்லாம் லைலியிடம் மனப்பூர்வமான பிரபு பக்தி செலுத்தத் தலைப்பட்டார்கள்.

லைலியின் மனதை விட்டுக் காயிஸின் நினைவு என்றைக்கும் அகன்றிருக்கவில்லை. அவள் தகப்பன் உயிரோடிருக்கையில், "இத்தனை சொத்துக்களை வைத்துக்கொண்டு கன்னிகையாக ஏன் காலம் கழிக்க வேணும்? நல்ல புருஷனைப் பார்த்து உனக்கு நிக்காச்செய்து வைக்கிறேன்," என்று எத்தனையோ தடவை சொல்லிப்பார்த்தான். ஆனால், அவள் காயிஸினிடம் சென்ற இருதயம் வேறு யாரிடமும் செல்லாது என்றே சொல்லிவந்துவிட்டாள். ஊரில் காயிஸ் செத்து எத்தனையோ நாட்களாகிவிட்டது என்பார்கள். துருக்கி ஸ்தானத்தில் நிக்காச்செய்துகொண்டு சுகமாக இருக்கிறான் என்று சொல்லுவார்கள். எங்கேயோ அடிமையாக அகப்பட்டுக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறான் என்ற வதந்தியும் உலவும். ஆனால் லைலியின் மனதில் மாத்திரம் இதெல்லாம் பொய்யாகத்தானிருக்கும் என்ற குருட்டு நம்பிக்கை ஆழமாகப் பதிந்திருந்தது. இதுமாதிரி சமாசாரங்கள் எத்தனை விவரமாகவும் உறுதியாகவும் சொல்லப்பட்டாலும் அவள் மனதில் அவை நுழைகிறதில்லை. ஆகையால் தன்னுடைய வியாபாரக் கூட்டங்களுக்கும் காரியஸ்தருக்கும் காயிஸ்ஸைப்பற்றி என்ன சமாசாரம் கேள்விப்பட்டாலும் புலம் அகப்படுகிற வழியில் தீர விசாரித்து, தெரியவரும் விஷயங்களுக்கு

அப்போதைக்கப்போது ஆள் அனுப்பிவரவேண்டும் என்று ஆக்ஞாபித்திருந்தாள்.

தங்கள் எஜமானியின் ரூபலாவண்ணியத்திலும் யௌவனத்திலும் நற்குணத்திலும் மாறாத அன்பிலும் ஈடுபட்டு அவ் ஆட்கள் காயிஸ்ஸைப்பற்றிய சமாசாரத்தை மிகவும் ஜாக்ருதர்களாகத் தாமே விசாரித்துவந்தார்கள். அங்கங்கே நிச்சயமான சமாசாரம் அகப்படுவது போல இருக்கும். ஆனால், நெருங்கிப்போய்ப் பார்த்தால் ஒன்றுமே இராது. இப்படி அவளது பல கூட்டங்களும் எண்ணிறந்த தடவை ஏமாந்துபோய்விட்டன. ஆனாலும் அவை முயற்சியையும் ஆசையையும் விடாது தேடியே வந்தன.

இப்படி இருக்கும்போது ஒருநாள் லைலி இருக்குமிடத்திற்கு ஒரு பக்கிரி வந்தான். வழக்கமாக நடத்தவேண்டிய மரியாதைகளெல்லாம் அவனுக்கு நடத்திவிட்டு, நல்ல விருந்துமிட்டு அவன் சாப்பிட்ட பிறகு இளைப்பாறிக்கொண்டிருக்கும்போது லைலி அவனிடம் வந்து, “பக்கிரி சாகிப்! தாங்கள் அனேகம் இடங்களெல்லாம் பார்த்திருப்பீர்களே, ஏதாவது விநோதங்கள் பார்த்திருந்தால் சொல்லவேணும்,” என்று கேட்டாள்.

அதற்கு அவன் சொன்னான்: “என்ன விநோதமிருக்கிறது? மனிதன் எங்கு பார்த்தாலும் ஒரேமாதிரி இருக்கிறான். ஒருவரோடொருவர் சண்டை, சச்சரவு, மோசம், நாசம், கம்பளி வேஷம், இது தான் நம் கண்ணை எங்கு பார்த்தாலும் தாக்குகிறது. இருந்தாலும் இப்பொழுது ஒரு விநோதம் என் நினைவுக்கு வருகிறது. ஹெஜாஜில் ஒரு ஜீவபூமியில் ஒரு வேடிக்கை பார்த்தேன். அங்கே ஒரு இளமைந்தன் இருந்தான். மிகவும் ரூபலாவண்யவான். ஆனால் கிழிந்த வஸ்திரம் ஒன்று தரித்துக்கொண்டு அன்னம் ஆகாரத்தையே லக்ஷியம் செய்யாதவன்போல உலவிக்கொண்டிருந்தான். அதில் என்ன விசேஷமென்றால், வேய்ங்குழல் பிரம்மானந்தமாய் வாசிக்கிறான். அவன் குழலை எடுத்து ஊதத் துவங்கினதும், புலிகளும், சிங்கங்களும், மான்களும், பறவைகளும் அவனைச் சூழ்ந்துவந்து அசைவற்று உட்கார்ந்துவிடுகின்றன. அவனுடைய கஜல்கள் எத்தனையோ கிழவனான என் மனதையும் பறித்துத் தின்றுவிட்டன. அவன் போகுமிடமெல்லாம் சிங்கமும் புலியுங்கூட நாய்க்குட்டிகள்போலத் தொடர்ந்து செல்லுகின்றன. ஒரு கிளி ஒன்று அவன் தோளைவிட்டு இறங்குவதே இல்லை. இந்த யாத்திரி சங்கதி வேறெங்காவது நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?”

கிளி என்று பக்கிரி சொன்னதும் லைலியின் இருதயத்தில் ஒரு வாள் வெட்டு விழுந்தாற்போலாகிவிட்டது. ஆனால், சுதாரித்துக்



கொண்டு “வேறெங்கும் நான் இம்மாதிரி வேடிக்கை கேள்விப்பட்டதில்லை. அவன் யார் என்று விசாரித்திருப்பீர்களே. அவன் பேர் என்ன, அவன் பூர்வோத்தரம் என்ன, எல்லாம் தெரிந்தால் சொல்ல வேண்டும்,” என்று லைலி கேட்டாள்.

அதற்குப் பக்கிரி, “அவன் பேர் அந்தப் பிரதேசத்திலே ஒருவருக்கும் தெரியாதாம். ஆனால், அவனை எல்லோரும் மஜனூன்—பைத்தியம்—என்று கூப்பிடுகிறார்கள். அவனைப்பற்றிப் பலர் பலவிதமாய்ச் சொல்லுகிறார்கள். ஆனால், பெரும்பான்மையோர் அவனுக்கு ஆசைப் பைத்தியம் பிடித்திருக்கிறது என்கிறார்கள். யாரோ ஒருத்தி அவனை நிக்கா செய்துகொள்ளுகிறேன் என்று சொல்லி வந்து கடைசியில் வேறொரு பணக்காரன்மேல் ஆசைவைத்து, நமது மஜனூனை ஏதோ ஆகாததும் போகாததும் கொண்டுவர தூரதேசத்துக்கு அனுப்பிவிட்டாளாம். அவைகளை அவன் மிகச் சிரமப்பட்டுத் தேடிக் கொண்டுவந்து, அவள் இருக்குமிடத்துக்கு ஒருநாள் பிரயாணத்துக்குள் வந்துகொண்டிருக்கும்போது அவள் அந்தப் பணக்காரனை நிக்கா செய்துகொண்டுவிட்டாள் என்று அங்கிருந்து வந்தவர்கள் சொன்னார்களாம்; அவ்வளவுதான், அங்கேயே அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதாம்; அவனும் அப்படியே புறப்பட்டு ஊரெல்லாம் சுற்றிவருகிறானாம்,” என்று சொல்லி முடித்தான்.

நள்ளிரவில் திருடர் புகுந்து வாயில் துணியை அடைத்துவிட்டு சதைசதையாய் வெட்டினால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது லைலிக்கு. ஆனால் இவ்வார்த்தைகளைக் கேட்டதும் மனதில் குமிழிவிட்டு எழுந்திருக்கும் துக்கத்தையும், காயிஸ்ஸை அனேகமாய்க் கண்டுபிடித்துவிட்டோம் என்கிற நம்பிக்கையிற் பிறந்த பரபரப்பையும் பல்லைக் கடித்துக்கொண்டு அடக்கிக்கொண்டு, பக்கிரிக்கு வந்தனை வழிபாடுகள் செய்தனுப்பிவிட்டு, அவள் தன் காரியஸ்தர்களை வரவழைத்து, “இன்றிரவு மக்காவுக்கு ஹஜ் போவதற்காகச் சகலத்தையும் ஆயத்தம் செய்க!” என்று ஆக்ஞாபித்துவிட்டு, தன் அறைக்குத் தனியே சென்று கட்டிவைத்திருந்த மடையைத் திறந்துவிட்டுக் கண்ணீரை ஆறாய்ப் பெருக்கினாள்.

“ஆ காயிஸ்! உன் நிலையை நினைக்க என் மனம் துடிக்கிறதே! அத்தனை நாடு தேச தேசாந்தரங்களெல்லாம் சுற்றிவந்தவன், இன்னும் ஒரு நாளைய பிரயாணம்தானே, நாங்கள் இருந்த இடத்திற்கு வந்து என்னதான் நடந்திருக்கிறது என்று பார்த்திருக்கக்கூடாதா? என் அன்பின் ஆழம் உனக்குத் தெரியாதுபோயிற்றே? பாவி, என்ன சொல்லுகிறேன்? உன் அன்பின் ஆழம் அன்றோ எனக்குத்

தெரியாமற்போயிற்றா? ஒரு கிள்ளைக்காகவும் மான்குட்டிக்காகவும், பாவி, உன்னை வனவனாந்தரங்களிலெல்லாம் கொண்டு அலையவிட்டேனே! உனக்கு என்பேரில் இருந்த அன்பு, எனக்கு உன்பேரில் இருந்திருந்தால், தகப்பனுக்கு எத்தனை அதிகமான கஷ்டம் வந்திருந்தாலும் இபனே ஸலாமோடு மணப்பந்தரில் உட்கார்ந்திருப்பேனா? அதைவிட உயிரையே விட்டிருக்கமாட்டேனா? இந்த மூன்று வருஷங்களில் என்ன என்ன கஷ்டப்பட்டாயோ! திரும்பி வரும்போது என்ன என்ன நினைத்துக்கொண்டு வந்தாயோ! என்ன மனக்கோட்டைகள் கட்டியிருந்தாயோ! அத்தனையும் உடைத்துவிட்டேன் பாவி, நீலிக்குக் கண் நெற்றியிலே என்று சொல்லுவதுபோலவே அழவும் அழுகிறேனே! ஆனால், ஐயனே! நான் உன்னைத் தவிர வேறு யாருக்கும் என் இருதயத்தைக் கொடுத்தவள் அல்லள். அன்று நவ்பலின் படை எங்களைத் தாக்காதிருந்தால் ஸலாமுடன் நிக்கா சடங்கு பூர்த்தியாகியிருந்தால் அன்றோடு என் வாழ்க்கை முடிந்துவிட்டிருக்கும். அன்று விஷம் வாங்கிக்கொண்டு செத்துவிடுவது என்றிருந்தேன். இந்த உடலை உன்னைத் தவிர வேறு ஒருவரும் தீண்டக்கூடாது என்று அத்தனை உறுதியாக இருந்தேனே. நீ இவ்விதம் ஆகிவிட்டாயே! உன்னுடைய அளவற்ற காதலை அனுபவிக்கக் கொடுத்துவையாத பாவியாய்ப் போய்விட்டேனே! என் செய்வேன்!'' என்ற இவைபோன்ற எண்ணங்களெல்லாம் லைலியின் மனதைத் துருவின. அன்று இரவெல்லாம் அவள் தூங்கவில்லை.

பொழுது விடிந்ததும் கூடாரங்களைப் பெயர்த்துக்கொண்டு எல்லோரும மேற்கு நோக்கிப் புறப்பட்டார்கள். போகும் வழியெல்லாம் மணற்காடு முடிவற்ற கடலைப்போல் கண்ணுக்கெட்டிய வரையில் பரந்திருந்தது. நடுப் பகலில் சூரியனுடைய வேகம் தாங்கமுடியாது. வெள்ளை மணலுக்கும், சூரியப் பிரகாசத்துக்கும், வானத்திலுள்ள வெண் மேகங்களுக்கும, அந்தப் பாலைவனமானது உலகமே தழல்விட்டு எரிவதுபோன்ற உணர்ச்சியைத் தரும். தங்குவதற்குத் துளிநிழலிராது. கூடாரத்தை நிறுத்தித்தான் பகற்பொழுதைப் போக்குவார்கள். நாலு நாள் ஐந்து நாள் பிரயாணத்தில் ஒரு பசுமை நிலம் அகப்பட்டால் அவர்கள் அதிர்ஷ்டசாலிகள்தாம். அதில் கொஞ்சம் ஆசுவாசம் செய்துகொண்டு நாலைந்துநாள் தங்கி, பேரீச்சம் பழங்கள், நல்ல தண்ணீர், ஒட்டகை மோர் முதலிய எல்லாவற்றையும் சேகரித்துக்கொண்டு மறுபடியும் புறப்படுவார்கள். புறப்பட்டாலோ மறுபடியும் அதே பாலைதான், அதே கொடுமைதான், அதே தவிப்புதான்.

இவ்வாறு அனேக காதங்கள் வந்துவிட்டார்கள். வரும் வழியில் அகப்படும் வியாபாரக் கூட்டங்களிடம் லைலி பேச்சுக் கொடுத்



துக் காயிஸின் சங்கதியை விசாரிப்பாள். காயிஸ் என்றால் ஒருவருக்கும் தெரியாது. ஆகையால் மஜனூன் என்றே பெயர் சொல்லிக் கேட்பாள். மஜனூன் என்று தன் நாவால் சொல்லும்போதும், அவர்கள் வாயால் கேட்கும்போதும், அவர்கள் அவனுடைய பைத்தியத்தைப்பற்றிப் பரிகசிக்கும்போதும், அவளுக்கு நெஞ்சு வெடித்துப்போகும். இருப்பினும் விசாரிக்காமல் தீருமா? கிடைக்கும் சமாசாரங்கள் ஒருநிலைப்பட்டவையாய் இரா. சிலர் பைத்தியம் முற்றிப்போய்விட்டது அவனுக்கு என்பார்கள். சிலர் அவன் சாகுந்தருவாயில் இருக்கிறான் என்பார்கள். சிலர் 'லைலா, லைலா' என்று கத்தினவண்ணமாக இருக்கிறான் என்பார்கள். கேட்கும் சமாசாரங்களெல்லாம் லைலியின் மனதை மேலும் மேலும் சித்திரவதை செய்வதுபோலிருந்தன.

கடைசியாகப் புலம் தெரியும் வழிகளால் சென்று சென்று லைலியின் கூட்டம் காயிஸ் இருந்த ஜீவபூமிக்கும் வந்துவிட்டது. நெஞ்சு படபட என்று அடித்துக்கொள்ளவும், மனம் ஆசையினாலும் பயத்தினாலும் பறந்துகொண்டு முன் செல்லவும், லைலி இரண்டு பணிப்பெண்கள் பின்தொடர அந்நிழலடர்ந்த நிலத்தினுள் பிரவேசித்தாள்.

நிசமாகத்தான் அப்படி இருந்ததோ, அல்லது அவள் மனதுக்கும் கண்களுக்கும்தான் அப்படித் தோன்றினதோ, மற்றெங்கேயும் கண்டிராத சாந்தி அந்தப் பசுமை நிலத்தில் இருப்பதாக அவள் நினைத்தாள். அந்நிலம் வியாபாரக் கூட்டத்தார் வழக்கமாய்ப் போய்வரும் பாதைக்கு ஒரு இரண்டு நாள் பிரயாணம் அப்புறம் தள்ளியிருந்தது. அங்கே காணப்பட்ட பட்சிகளும் மிருகங்களும் மனிதக் கூட்டத்தைக் கண்டு பயப்படாமல் ஏதேச்சையாயிருந்தன. செடிகளும் மரங்களும் செழித்து வளர்ந்திருந்தன. மனித சஞ்சாரம் குறைவாகையால் பழங்களும் காய்களும் அபரிமிதமாயிருந்தன. புல்லும் முழங்கால் உயரம் வளர்ந்து மந்தமாக அடிக்கும் காற்றில் ஓயிலுடன் வளைந்துகொடுத்துக்கொண்டிருந்தன. ஜீவபூமி முழுவதும் நிசப்தம் தனி அரசு செலுத்திக் கொண்டிருந்தது.

லைலியும் அவள் தோழிகளும் சத்தம் செய்யாமல் சென்றார்கள். போகும் வழியில் ஒரு மரத்தில் லைலி என்னும் எழுத்துக்கள் அன்றுதான் வெட்டப்பட்டனபோலப் பச்சையாய்க் காணப்பட்டன. அதைக் கண்டதும் லைலியின் கண்களினின்று நீர் தாரதாரவென்று வந்துவிட்டது. அப்புறம் நாலடிகூட எடுத்துவைக்க

வில்லை. அங்கே ஒரு மரத்தடியில் நன்றாகப் பொருத்தி வைத்திருந்த கூரையின்கீழ் ஒரு மனுஷன் படுத்திருந்ததைப் பார்த்தாள். திடீரென நின்றுவிட்டாள்.

அங்கே படுத்திருந்தவன் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தான். அவன் உடம்பில் எலும்பும் தோலும் தவிர வேறு ஒன்றுமில்லை. உடம்பெல்லாம் வெளுத்துப்போய்க் காய்ச்சல் வந்திருப்பதுபோலப் பளபளப்பாய்க் காணப்பட்டது. முகம் குழந்தையின் முகம் போலத் தெளிந்திருந்தது. உதட்டில் ஒரு புன்னகையின் சாயை தெரிந்ததுபோலிருந்தது.

நன்றாக உற்றுப்பார்த்ததும் லைலிக்கு அவன்தான் காயிஸ் என்று தெரிந்துபோய்விட்டது. அவனை அந்த நிலைமையில்தான் அனேகமாய்ப் பார்ப்போம் என்று நினைத்து மனதை அதற்கேற்றபடி அவள் பக்குவப்படுத்திக்கொண்டிருந்தபோதிலும், அந்நிலைமையில் அவனை நேரிற் கண்டபோது அவளுக்குத் தாங்கவில்லை. இடியுண்ட சர்ப்பம்போல விழுந்துவிட்டாள். அவளுடைய தோழிகள் அவளோடு ஒரு வார்த்தையும் பேசத் துணியவில்லை. அந்த நிமிஷத்தில் அக்கன்னிகையின் இளநெஞ்சில் எழுந்த புயற்காற்றை யாரால் வர்ணித்துச் சொல்ல முடியும்? உலகமெல்லாம் சுவர்க்கமாய்த் தோன்றும் குழந்தைப் பருவத்தில் நாட்களையெல்லாம் தேனீக்களைப்போலச் சுவைக்கும் இன்பத்தின் அளவிறந்தேயே தாங்கள் இருவரும் அனுபவித்ததை எண்ணிப் பொருமினாள். அழகிலும் சௌரியத்திலும் காயிஸுக்கு ஒருவரும் நிகரில்லை என்று அக்காலத்தில் அடிக்கடி தன் காதில் வார்த்தைகள் விழும் போதெல்லாம் தனக்கு உண்டான ஆனந்தத்தை நினைத்து, இப்பொழுது அவன் இருக்கிற நிலைமையோடு சேர்த்துப்பார்த்து மனமுடைந்தாள். தங்களிருவருக்கும் விவாகம் செய்துவைக்கும் நாளைத் தன் தகப்பனும் காயிஸின் தகப்பனும் சுற்றத்தார் கூட்டத்தில் நிச்சயித்துக் குறித்த அன்றைக்குத் தன் மனதில் எழுந்த நிரதிசய ஆனந்தத்தை நினைந்து வெதும்பினாள். காயிஸ் தனக்கு என்ன வேணும் என்று கேட்டனுப்பின தினத்தன்று தன் மனதில் எழுந்த கர்வத்தை நினைத்து இப்பொழுது சாம்பினாள். "ஐயோ! எதற்காகக் கிளியும் மானும் கேட்டேன்! இப்படி முடியுமென்று தெரிந்திருந்தால் கேட்டிருக்கமாட்டேனே! பாவியேன் நானே உன்னை இந்தக் கதிக்கு ஆளாக்கிவிட்டேனே!" என்று கதறிக் கண்ணீரை ஆறாய்ப் பெருக்கினாள். பிறகு அப்படியே மூர்ச்சித்துப் போய்விட்டாள்.

தோழிகள் துக்கத்தால் விம்மிக்கொண்டு அவளுக்குச் சைத்தியோபசாரம் செய்தார்கள். சற்று நேரத்துக்கெல்லாம், புரண்டு



புரண்டு கொடுத்துக்கொண்டு, இடையிடையே தடைப்பட்ட தூக்கம் தூங்கிக்கொண்டிருந்த காயிஸின் பக்கத்தில் ஒரு கிளி வந்து உட்கார்ந்தது. அவன் வாயை முத்தமிடுவதுபோல முத்தமிட்டு 'லைலா' 'லைலா,' என்று மிருதுவான குரலில் கூவிற்று.

"லைலாவா? என் ஆசைக் கண்ணாட்டிக்கு என்பேரில் இரக்கம் வந்துவிட்டதா? எங்கே வந்திருக்கிறாள்?" என்று சொல்லிக் கொண்டு எழுந்திருந்தான். ஆனால் லைலி எதிரிலில்லை. வேறு ஒருபுறத்தில் மூர்ச்சைபோயிருந்தாள். "வழக்கம்போல் இன்றைக்கும் என்னை ஏமாற்றிவிட்டாயே, லைலா! (காயிஸ் தான் கொண்டு வந்த பாரஸீகக் கிளிக்கு லைலி என்று பேர் வைத்து, அதைத் தன் லைலியை அழைப்பதுபோலவே செல்லமாய் லைலா என்று அழைத்துக்கொண்டிருந்தான்.) "நாளைக்கு நீ என்னை ஏமாற்ற முடியாது. இன்றைக்கே அல்லாஹுத் தஆலா என்னை அழைத்துக்கொள்ளப்போகிறான். ஐயோ, கடைசியாக என் லைலாவை ஒருமுறை கூடப் பார்க்காமலே போகிறேனே!" என்று கிளியைப் பார்த்துச் சொன்னான். இதைக் கேட்டதும், லைலியின் தோழிகள் தாங்க மாட்டாமல் முன்னிலும் அதிகமாகக் கண்ணீர் பெருக்கிக்கொண்டு லைலியை மூர்ச்சையினின்று எழுப்ப முன்னிலும் அதிகமாகப் பரபரத்துகொண்டு முயன்றார்கள்.

காயிஸ் தனக்குள்ளே, ஆனால் வாய்விட்டு, சொல்லுவான்: "லைலாவையாவது நான் பார்க்கிறதாவது! இப்பொழுதெல்லாம் இபனே ஸலாமோடு சுகமாய்க் காலம் கழித்துக்கொண்டிருப்பாள். என்னுடைய நினைவும் அவள் மனதிலிருக்குமோ? ஆஹா! இந்தப் பைத்தியம் பிடித்த மனது என்ன நினைத்துவிட்டது? லைலாவும் என்னை நினைக்காமல் இருப்பாளா? இருக்கமாட்டாள்! இருக்கமாட்டாள்! அவள்தான் என்ன செய்வாள்? நான் திரும்புகிற அன்றைக்குத்தானே அவளுக்கும் அவனுக்கும் நிக்கா என்று சொன்னார்கள். மூன்று வருஷம் எனக்காகக் காத்திருந்தாளே? அவள்பேரில் குற்றமே யில்லை. எல்லாம் விதி, விதி, கிஸ்மத்!" என்று சொல்லி விட்டுத் தலையில் கையால் அடித்துக்கொண்டான்.

அதற்குள்ளும் லைலி மூர்ச்சை தெளிந்து எழுந்து அவனுக் கெதிரே வந்து, அவன் பேசிய கடைசி வார்த்தைகளுக்குப் பதில் சொன்னாள். "காயிஸ்! காயிஸ்!! உனக்காக நான் மூன்று வருஷந்தானா காத்திருந்தேன்? இன்னும் காத்திருக்கிறேன், காயிஸ்! உன்னைத் தேடிக்கொண்டு இருநூறு காதம் வந்திருக்கிறேன்—என்னைச் சற்று முகமெடுத்துப் பாரேன்!" என்று கதறினாள்.

காயிஸ் அவளைப் பார்த்தான். ஆனால், புத்தி பேதப்பட்டுப்போயிருந்ததாலும், சுரம் மேலிட்டுப் போயிருந்ததாலும் அவன் அவளை இன்னாளென்று தெரிந்துகொள்ளவில்லை. ஆகையால் அவளிடம், "நீ யாரம்மா? நல்ல வேளையாய் அல்லா உன்னை இந்தச் சமயத்துக்குக் கொணர்ந்துவிட்டான். என் உயிர் போய்க்கொண்டிருக்கிறது; சற்று நேரத்துக்கெல்லாம் போய்விடும். உயிர்போனதும் என்னை இங்கே புதைத்துவிட்டு, உனக்குத் தெரிந்தவர் யாராவது கிழக்கே போனால் காயிஸ் இங்கே இறந்துபோய்விட்டான் என்று லைலாவிடம் சொல்லியனுப்பவேணுமம்மா,' என்றான்.

லைலிக்குத் தாங்கவில்லை. "காயிஸ்! காயிஸ்! என்னை உனக்குத் தெரியவில்லையா? இங்கே பார். நான் உன் லைலா இல்லையா?" என்று சொல்லி மனம் சுக்கு நூறானாள்.

அதற்குக் காயிஸ் அவளைப் பாதாதிகேசம்வரையில் ஏறிட்டுப் பார்த்து, தலையை மெதுவாக அசைத்துக்கொண்டு, "லைலாவா, நீயா லைலா? லைலாவை நீ பார்த்ததில்லைபோலிருக்கிறது. மூன்றாம் பிறைக்காவது, சரற்காலத்து நிலவுக்காவது, புனர்வசு நக்ஷத்திரத்துக்காவது அவளுடைய அழகு வருமா? இந்தியா தேசத்துக் குயிலும், கிளியும், புல்புலும் பேச்சுக்கு அவளிடம் பிச்சை வாங்க வேண்டும். அவளுடைய கண்ணாகிய சந்திரிகையிலேயே ரமித்து வந்த எனக்கு அவளைப் பார்க்கும்பொழுதெல்லாம் "கண்ணினால் காதல் என்னும் பொருளையே காண்கின்றோம்" என்றே தோன்றும். ஆகாரத்தினால், செல்வத்தினால் எனக்குப் பலம் வரவில்லை. அவளுடைய அன்புதான் எனக்கு அத்தனை வன்மை தந்தது. ஆ! அவள் இப்பொழுது எனக்கு இல்லை! எனக்கு இல்லை! ஒரு கொடியில் இரண்டு மலர்கள் பூத்துப் பார்த்தோர் மனதைக் களிக்கச் செய்தன. ஒன்று வாடி வதங்கிக்கொண்டிருக்கிறது. மற்றதாவது வாடாமல் மலர்ந்திருக்கும்படி அல்லா அருள்புரியட்டும். அம்மா! நான் முன்னே சொன்னேனே, அவ்விதம் லைலாவுக்குச் சொல்லியனுப்பவேண்டாம். நான் இறந்துபோனேன் என்று கேட்டால் அவள் உயிர் தரியாள். ஆகையால் உயிர்போனதும் என் உடலைப் புதைத்துவிட்டு உன் வழியே செல்லுவாய்," என்று குழறிக் குழறிக்கொண்டு பெருமூச்சுகளுக்கிடையே சொல்லி அயர்வினால் நிறுத்திவிட்டான்.

லைலிக்குச் சகிக்கவேயில்லை. "யாருமில்லாத இந்த வனாந்தரத்தில் தனியேயிருந்து தவித்துக்கொண்டு இப்படி ஆகிவிட்டாயே, காயிஸ்! இந்த ஆறு வருஷமாக உன்னைத் தேடாத இடமில்லையே. எங்கெங்கே தேடினேன்! யாராரை அனுப்பினேன்!



எத்தனை பொருள் செலவிட்டேன்! உன்னை நினைந்து எத்தனை கண்ணீர் விட்டேன்! எத்தனை இரவுகள் தூக்கமே இன்றிக் கழித்தேன்! எனக்கு நல்ல பொழுதேது? நல்ல இரவேது? இப்பொழுதுதான் ஒரு மாதமிருக்கும், ஒரு பக்கிரி—ஸல்லல்லாஹு ஸல்லல்லம்—அவன் நன்றாயிருக்கவேணும்—நீ இந்தப் பக்கத்தில் இருக்கிறாய் என்று சொன்னான். அன்றைக்கே இவ்விடம் நோக்கிப் புறப்பட்டுவிட்டேன்," என்று சொல்லிக்கொண்டே வந்தாள். அந்த நிமிஷத்தில் காயிஸ் அவளை வெறிக்க வெறிக்கப் பார்த்தான். லைலி பயந்துபோய், "ஜீது! ஓட்டமாய் ஓடிப்போய் நமது ஹகீமை அழைத்து வா," என்று ஒரு தோழியை அனுப்பிவிட்டு, காயிஸின் கன்னத்தில் கை வைத்துப் பார்த்தாள். மழுவாய்க் கொதித்தது. ஆனால் அவளுடைய கை பட்டதும் காயிஸுக்குச் சுயப் பிரக்ஞை சற்று வந்தது.

"லைலா! லைலா! நான் நினைத்தேன், என்னை நீ கைவிடமாட்டாய். எங்கே, இன்னும் அருகில் வா. ஆ! என் லைலாதான்! நீ எப்படி வந்தாய் இங்கே? என்னை ஏன் இத்தனை நாள் விட்டுவிட்டுப் போயிருந்தாய்? என் கையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்," என்று சொன்னான்.

ஆனால், திரை மூடுவதுபோல உடனே மறுபடியும் பிரக்ஞை போய்விட்டது. "லைலாவுக்கு என்னைப் பிடிக்கவில்லை. மான் கொண்டுவருவதற்கு மூன்று வருஷமா? நன்றாய் வேணும் காயிஸ்! உனக்கு நன்றாய் வேணும்," என்றிவ்வாறு பிதற்றத் துவக்கினான்.

"என்ன செய்வேன்! என்ன செய்வேன்! ஹகீம் வந்துவிட்டானா பார், அர்ஜ்மந்து" என்று தோழியிடம் சொல்லிக்கொண்டு, துவண்டுபோய்க் கீழே சாயும் காயிஸின் உடலை லைலி தாங்கிக்கொண்டாள். அவன் வாயினின்று, "ஆ, லைலா! தனியாய்ச் செல்லுகிறேன். ஆனால், மேலுலகத்தில், மேலுலகத்தில் உன்னை—அடைவேன்," என்ற வார்த்தைகள் வந்தன. அத்தனைதான். லைலியின் மடியிலேயே பிராணனை விட்டுவிட்டான்.

லைலி வேடன் கையால் அடிபட்டு விழுந்த ஹம்ஸ பக்ஷிபோல விழுந்துவிட்டாள். கலையை இழந்த பிணையைப்போலக் கதறினாள். அந்த நிர்மானுஷ்யமான வனத்தில் அவனைத் தேடிப் பிடித்தும் அவள் வரும் வழியெல்லாம் கட்டிக்கொண்டு வந்த மனக்கோட்டை காற்றாய்ப் பறந்துபோய்விட்டது.

லைலி அங்கேயே காயிஸை அடக்கம் செய்தாள். தன் ஆட்களைக்கொண்டு அடக்கம் செய்த இடத்தில் உன்னதமான ஸமாதி

# இனி நாம் செய்ய வேண்டுவ தென்?

## திருச் செல்வி கண்ணம்மாள் இராசமாணிக்கம் அவர்கள்

சகோதரிகளே!

நாடெங்கும் தேசிய மனம் கமழும் இக் காலத்தில்—கைராட்டினமும் கதர் ஆடையும் புத்துயிர் அளிக்கும் இக் காலத்தில்—கடல் அலைகளும் "காந்தியடிகள் வாழ்க" என்று வாழ்த்தும் இக் காலத்தில்—வெள்ளையரின் மோசத்தனம் வெளியான இக் காலத்தில்—அடிமை இந்தியா சுதந்திர இந்தியாவாக மாறும் இக் காலத்தில்—நம் சகோதரிகளில் ஒரு சிலரே தேசிய இயக்கத்தில் ஈடுபட்டிருக்கும் இக் காலத்தில் இந்தியப் பெண்மணிகளாகிய நாம் இனிச் செய்ய வேண்டுவ தென்?

ஒவ்வொரு நாட்டிலும் ஆண் பெண் என்னும் இரு பிரிவுகளும் ஒன்றுபட்டே எக் காரியத்தையும் சாதிக்கக் கூடும். ஒரு நாட்டின் முன்னேற்றம் ஆண் பெண் என்னும் இரு பிரிவினரிடத்தும் தான் இருக்கின்றது. ஒரு பிரிவினரால் மட்டும் அக் காரியத்தையும் சாதித்துவிட முடியாது. இதனை நன்கு உணர்ந்தே காந்தியடிகள் தேச விடுதலைக்குப் பெண்கள் சேவையைப் பெரிதும் வேண்டுகின்றார். பெண்களாகிய நாம் நம் நாட்டு விடுதலைக்குப் பாடுபட வேண்டுமா? ஆம், இந்திய விடுதலைக்குப் போராட வேண்டுவது இந்திய நாட்டில் பிறந்த ஒவ்வொரு பெண்ணினது முதற் கடமையாகும்.

நம் நாட்டு ஆண்கள் தேச விடுதலைக்குப் பாடுபடுகையில் பெண்கள் வாளாயிருத்தல் முறையோ? சென்ற ஆண்டு கடந்த

---

ஒன்று கட்டினாள். தன் செல்வத்தை யெல்லாம் தர்மத்துக்கென்று வாகுப் ஆக மாற்றி வைத்துவிட்டுச் சன்னியாசினியைப் போல் கொஞ்ச காலம் கழித்து வந்து கடைசியில் காவியை நினைந்து கொண்டே உயிரை விட்டாள்.

மேலுலகத்தில் இரண்டு காதலர்களும் சந்தித்துக்கொண்டு அழியாத ஆனந்தத்தை அநுபவிக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. இவ்வுலகத்திலும் மாறாத அன்புக்கு இவர்களுடைய பேரைவிட உயர்ந்த உதாரணம் கிடையாது.



தேசியப் போரில் நம் சகோதரிமார் சரோஜினி தேவியார், கமலா தேவியார், கமலா நேரு, ருக்மணி லக்ஷ்மிபதி அம்மையார் முதலானவர் கலந்து கொண்டதால் அன்றோ தேசிய இயக்கம் வலுப்பட்டது. இந்தியப் பெண்களும் நாட்டு விடுதலைக்குப் போராடவே, நமது உயிரைக் கசக்கி உறிஞ்சிய பிரிட்டிஷ் வல்லரசு நடுங்க ஆரம்பித்தது. அதுவரையில் தேசீய இயக்கத்தில் நம்பிக்கை அற்றுத் தூங்கிக்கொண்டிருந்த பிரதம மந்திரி மாக்டோனல்டு கண்களைத் திறந்து, "இந்தியப் பெண்களுமா தேசீய இயககத்தில் கலந்து கொண்டார்கள்?" என்று மனம் கலங்க ஓலமிட்டுக் கேட்டார்.

இவ்வாறு வல்லரசும் நடுங்கத் தக்கவாறு நம் சகோதரிகள் தேசியப் போர் தொடுத்தது பாராட்டத்தக்கது. ஒரு சில சகோதரிகள் சேர்ந்ததாலேயே நாட்டிற்குப் பெருமை யுண்டாயிற்று என்றால், இந்தியப் பெண்மணிகளாகிய நாம் அனைவரும் தேசீய இயக்கத்தில் சேர்ந்து உழைத்தோமானால், நாம் நிச்சயம் சுதந்திரம் அடைவோமென்பதை சொல்லவும் வேண்டுமோ?

ஆகவே சகோதரிகளே! இந்திய வீரப் பெண்மணிகளாக நாம் மிளிர வேண்டும். தேச நலத்தின் பொருட்டு நமது உயிரையும் இழக்கத் தயாராக இருக்க வேண்டும். ஒவ்வொரு இந்தியப் பெண்ணும் கதர் ஆடை உடுத்த வேண்டும். நம் இல்லத்து ஒருப்படா ஆடவரையும் ஒருப்படுத்திக் கதர் ஆடைகளை அணியச் செய்ய வேண்டும். வீர மணமும் சுதந்திர மணமும் உள்ள பாலை இந்தியத் தாய்மார் வருங்காலச் சுதந்திர வீரர்களாக விளங்கப்போகும் இக் காலக் குழந்தைகட்கு ஊட்ட வேண்டும். பெண்கள் பொழுது போக்கச் சொக்கட்டான் ஆடல், வீண் பேச்சுப் பேசல் முதலியன செய்யாமல், சர்க்காவையும் கைராட்டினத்தையும் கொண்டு நூல் நூற்க வேண்டும். குழந்தைகட்கு வீரம் வாய்ந்த தேச பக்தர்களின் தியாகச் சரித்திரங்களைச் சொல்லி, அவர்களைத் தியாகம், வீரம், தேசப் பற்று ஆகிய உணர்ச்சிகள் உள்ளவர்களாக்க வேண்டும். முப்பத்து ஐந்து கோடி இந்திய மக்களுக்கு உழைக்கும் ஒப்புயர்வற்ற காந்தியடிகளின் உருவப் படம் ஒவ்வொரு வீட்டிலும் வைத்துப் போற்றப்படல் வேண்டும்.

நாட்டின் விடுதலைக்கான பாடல்களையே நாம் எங்கும் பாட வேண்டும். நமது முதல் பிரார்த்தனை "இந்தியா சுதந்திரம் அடைய வேண்டும்" என்பதாக இருக்க வேண்டும். நம்மிடத்தில் இருக்கும் கொடுமையானது நகைப் பயித்தியமே. உடலில் ஓர் இடம் பாக்கியின்றித் துளைத்து நகை பூட்டும் அநாகரீகச் செயல் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் நம்மைவிட்டு நீங்கியபாடில்லை. இது நமது அறியா

மையே அன்றி வேறன்று. ஒரு பெண் நான்கு பாரம் எடை இருந்தால் அவளது நகைகள் இரண்டு பாரம் நிறை இருக்கின்றன. இவர்களும் இவர்கள் விரும்பும் விதம் நகைகள் செய்து போடும் ஆடவரை என்னென்பது? நம் நாட்டுப் பெண்மணிகளின் நகைகளின் கிரயத்தைக் கொண்டு நாட்டில் பல கைத்தொழிற்சாலைகளை நிறுவலாம்; ஏழை மக்கள் பிழைக்கலாம். பின்னும் நம் பெண்கள் அந்நிய நாட்டு வளையல்களை அறவே நீக்க வேண்டும். ஒவ்வொரு வருடமும் வளையல்களுக்காக லட்சக் கணக்கான ரூபாய்கள் நமது நாட்டில் இருந்து பிற நாடுகளுக்குச் செல்கின்றன. ஒவ்வொரு வருஷத்திலும் சுமார் எண்பது லட்ச ரூபாய்க்குக் குறையாத விதேசி வளையல்கள் இந்தியாவில் இறக்குமதி யாகின்றன. இவை யணிவதால் நமக்கு என்ன நன்மை உண்டாகிறது? வளையல்களை அணியும் சகோதரிமார் இக் கேள்விக்கு என்ன விடை யளிப்பார்கள்?

இந்த வளையல்களைக் குறித்துக் காங்கிரஸ் தலைவர் சர்தார் வல்லபாய்படேல் அவர்கள் பர்தோலி வரிகொடா இயக்க காலத்தில் கூறிய அரிய மொழிகளை இங்குக் காட்டுகின்றோம்:— "சகோதரிகளே! உங்கள் உடைமைகளை ஜப்தி செய்ய எந்த அதிகாரியாவது வந்தால் அவரை வரவேற்று உங்கள் கை வளையல்களை கழற்றிக் கொடுத்து விடுங்கள். வேண்டுமானால் அவர் அவற்றைப் போட்டுக் கொண்டு அலையட்டும். உங்கள் கைகளிலும் கால்களிலும் அடிமைகளின் அடையாளங்களாக அவை இருக்கின்றன. அவைகளில் எவ்வளவு அழுக்குப் படிகின்றன! அவைகளால் நமது தோலுக்கு எவ்வளவோ வியாதிகள் உண்டாகின்றன. ஆதலால், அவைகளை விட்டெறியுங்கள்."

ஆகவே, அரிய சகோதரிகளே! நம் நாடு சுதந்திரம் அடைய வேண்டுமானால் கதர் ஆடைகளை நாம் உடுக்க வேண்டும். சர்க்கா, கைராட்டினம் சுற்ற வேண்டும். அந்நிய நாட்டுச் சோப்பு, முகத்தூள் முதலான சாமான்களை அறவே நீக்க வேண்டும். தேசிய கீதங்களை நம் வாயார மனமுருகப் பாட வேண்டும். நம் குழந்தைகளுக்கும், கணவருக்கும் தேசீய உணர்ச்சியை உண்டாக்குதல் வேண்டும். நாட்டுச் சுதந்திரத்திற்காகப் போர் தொடுக்க நேரினும், பெண்கள் முதல் வரிசையில் நிற்கத் தயாராக இருத்தல் வேண்டும். தற்போது சுதந்திரத்திற்காகப் பாடுபட்டு வரும் பெரியார்களையும், சரோஜினி தேவியார், கமலா தேவியார், கமலா நேரு முதலானவர்களையும் நம் சகோதரிமார் நினைத்து நினைத்து அவர்களைப் பின்பற்றி நடப்பார்களாக!

"பாரதி"
ஓர் தேசீய மாதப் பத்திரிகை.

| மாலை 3 | பிரஜோற்பத்தி கார்த்திகை-மார்கழி 1931-ஹு டிசம்பர்மீ | மணி 12 |
|---|---|---|

# மனந் தளரேல்.

ஸ்ரீமான் பா. ஆதிமூர்த்தி அவர்கள்.

(அறு சீர்கழில் நெடில் ஆசிரிய விருத்தம்.)

மலையே சரிந்து விழுந்தாலும், வானே றிடிகள் சொரிந்தாலும்
அலையே புரண்டிங் கழித்தாலும், அறமே நிலைகெட் டழிந்தாலும்
இலை, போ, உனது உரிமையெலாம், ஈயே னெனவந் தெதிர்த்தாலும்
தலையே போக வந்தாலும், தளரேல் மனது தளரேலே. 1

பெரியோர் தமையுங் கள்ளரைப்போல் பிடித்துச் சிறையி லடைத்தாலும்
உரியோர் உரியர் எனப்புகலும் உரையே பிழையென் றுரைத்தாலும்
நிரையார் கற்பின் பாஞ்சாலி நிலையே மாதர் நிலையெனினும்
தரியா துள்ளந் தடுமாறித் தளரேல் தளரேல் தளரேலே. 2

மனமும் நினைப்பும் வார்த்தைகளும் வரையு மொழிக ளொவ்வொன்றும்
வினையு மழுக்கற் றிரவியென விளங்கப் பழகி மேலான
உனதி புரியும் "சுயராஜ்ய" மொன்றே தவமாய் உயர்பொறையாம்
தனைநேர் படையால் விறல் பெறுவாய் தளரேல் தளரேல் தளரேலே. 3

வரியா லுள்ள பொருள் தோற்று வறிஞ ராகி மடிந்தாலும்
பெரியோர் கற்ற கலைகளெலாம் பிழையா யடிமை பெருகிடினும்
அரிதாம் மானங் குலங்கல்வி ஆண்மை யெவையு மழிந்தாலும்
தரியா துள்ளந் தடுமாறித் தளரேல் தளரேல் தளரேலே. 4

துன்ப மின்றிச் சுகமுண்டோ? தூய்மை யழுக்கால் தோன்றுமெனில்
இன்ப மெங்ஙன் நம்முயிரை இனிமையாகி யிவ்வுலகில்
அன்பின் உருவாம் நம் பெரியோர் அடைந்த துயர்கள் அறியாயோ?
துன்பே ரறிவை துணையாகத் தளரேல் தளரேல் தளரேலே. 5

காந்தி லாலா நேருவுடன் கலிதீர் தாசு முதலான
மாந்தர் பல்லா யிரர்சிறையில் வருந்தித் தாயின் வாழ்வுயராச்
சாந்தியோடு மடிந்தழிந்து சாம்ப ராகி முடிந்தாலும்
தான் தன் காலம் வருமளவும் தளரேல் தளரேல் தளரேலே. 6

கொலைகள் மிகுந்து வளர்ந்தாலும் குருதி நதிகள் பாய்ந்தாலும்
அலைகள் புரண்ட தெனக்கொடுங்கோல் அதிக மாகிச் செழித்தாலும்
நிலைகள் மாறி எச்செயலும் நீதிக் கெதிராய் நின்றாலும்
தலைகள் உருண்டு விழுந்தாலும் தளரேல் தளரேல் தளரேலே. 7

கண்ணன் பிறந்தான் சிறைவீட்டில் காலங் கருதிக் கதிவழியே
எண்ணாங் கடந்த துன்பமெலா மேற்றான் தோற்றான் எனருக்கும்
மன்னின் றறங்கள் வளர்ந்தோங்க வதைத்தான் பகைவர் தமைப்போரில்
தண்ணென் றிருத்தி மனமுடைந்து தளரேல் தளரேல் தளரேலே. 8

## ஜக்லுல் பாஷா.

ஈஜிப்ட் நாட்டுச் சுதந்தரத் தலைவர்.

திரு. என். வேங்கடரமணன் அவர்கள்.

இந்தியாவைப்போலவே ஈஜிப்ட் தேசமும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு ஒரு வகையில் உட்பட்டு அல்லலுற்று வருவதாகும். அந்நாட்டு மக்கள் தங்கள் நாட்டை அடிமை வாழ்க்கையினின்றும் விடுதலை பெறச் செய்வதற்கு எண்ணற்ற முயற்சிகள் செய்துவந்தனர். அதனால் அவர்கள் அடைந்த கஷ்ட நஷ்டங்கள் அனந்தம். ஆங்கிலேயர்களும் அந்நாட்டினரின் சுதந்தர முயற்சிகளை அற்புதமாகவே அடக்கி



வந்தனர். என்ன செய்துமென்ன? கொளுந்து விட்டெரியும் நெருப்பை எத்தனை நாட்களுக்கு அடக்கி வைத்திருக்க முடியும்? ஈஜிப்ட் நாட்டினரின் சுதந்தர தாகத்தை யடக்க ஆங்கிலேயர்கள் செய்த முயற்சிகளனைத்தும் அத்தாகத்தை மேலெழும்பவே செய்தது. எதிர்ப்பு எங்கேயிருக்கிறதோ அங்கே முயற்சி பலப்படுமென்பதும், அடக்குமுறை எவ்வளவு அதிகப்படுகிறதோ அவ்வளவுக்குச் சுதந்தர வேட்கை மேலோங்குமென்பதும் உலகமுணர்ந்த உண்மையன்றோ! அதுபோலவே ஈஜிப்ட் தேசத்தாரும் சுதந்தர முயற்சியில் தீவிரமாக முனைந்து பலன் பெற்று வந்துள்ளார். அவ்வாறு நடைபெற்ற ஈஜிப்ட் நாட்டுச் சுதந்தர வியக்கத்திற்குத் தலைவராயிருந்து புகழ்பெற்ற ஜக்லுல் பாஷா அவர்களின் ஊக்கமும், விடாமுயற்சியும், தேசாபிமானமும், அஞ்சா வீரமும் அடிமை இந்தியாவில் வாழும் நம்மனோர் அறியத்தக்கனவன்றோ? ஈஜிப்ட் நாட்டுச் சரித்திரத்தில் ஜக்லுல் பாஷா அவர்களின் பெயர் முதன்மையடைந்து நிற்பதாகும்.

### பிறப்பும் உழைப்பும்.

ஈஜிப்ட் நாட்டுச் சுதந்தர வீரராகிய ஜக்லுல் பாஷா அவர்கள் 1850-ம் ஆண்டில் பிறந்தார். கல்வி கற்றார். சாமானிய வாழ்க்கை நடத்தினார். தேசாபிமானங் கொண்டார். பொது நலத்தில் கவனஞ் செலுத்தினார். 1882-ம் ஆண்டில் முதன் முதலாக அந்நாட்டு அரசியல் முயற்சிகளில் ஈடுபட்டார். அப்போது அராபி பாஷா ஆங்கிலேயருடன் போரிட்டு வந்தார். அப்போரில் ஜக்லுல் பாஷாவுங் கலந்து ஆங்கிலேயருடன் சமர்செய்து, கடைசியில் அவர்களுடன் சமாதானம் செய்துகொண்டார். அச்சமயத்தில் ஆங்கிலேய கமிஷனராக நியமிக்கப்பட்ட லார்ட் குரோமர் துரையவர்களுடன் ஜக்லுல் பாஷாவுக்கு நெருங்கிய பழக்க மேற்பட்டது. அதன்மேல் ஜக்லுல் அவர்கள் ஈஜிப்ட் நாட்டின் கல்வி மந்திரியாக நியமிக்கப்பட்டார். அப்பொழுது சூடான் பிரதேசத்தை வேறுபடுத்துவதற்கும், சூயஸ் கால்வாயின் பங்குகளை ஆங்கிலேயர்களுக்கு விற்பதற்கும் அவர் மந்திரியாயிருந்தமையால் ஒப்புக்கொள்ளவேண்டி வந்தது. 1912-ம் ஆண்டில் ஆங்கில துரைத்தனத்தார் ஈஜிப்ட் நாட்டுக்கு வழங்கிய ஜனப்பிரதிநிதி சபை (அஸெம்பிளி)-க்கு ஜக்லுல் பாஷா அவர்கள் முறையே உபத்தலைவராகவும், தலைவராகவும் ஆயினார். அவ்வளவில் 1914-ம் ஆண்டில் ஐரோப்பிய மகா யுத்தம் ஆரம்பமாயிற்று. அப்பொழுது ஜக்லுல் பாஷா உண்மை உருவுடன் தோன்றினார். பூர்ண சுதந்தரத்தை விரும்பிய தேசிய வாதிகளை ஒன்று சேர்த்துக்கொண்டு, அவர்களுக்குத் தலைவராகி நாட்டில் சுதந்தரக் கிளர்ச்சியை நடத்தினார். 1918-ம் ஆண்டு நவம்பர்மீ 13 ந் தேதி ஈஜிப்டில் ஹை கமிஷனராக விருந்த விங்கேட் துரையவர்களிடத்தில் ஜக்லுல் பாஷா அவர்கள் தாம் இங்கிலாந்து சென்று

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தாரிடத்தில் ஈஜிப்ட் நாட்டுச் சுதந்தர உரிமைகளைப்பற்றி வாதிக்க விரும்புவதாகக் கூறினார். ஹை கமிஷனர் அவ்வாறே அநுமதிக்க வேண்டியிருந்தது. எனவே ஜக்லுல் அவர்கள் இங்கிலாந்து சென்று வெகு முயற்சி செய்தாராயினும், வழக்கம்போல் ஆங்கிலேயர்கள் அவரை வெறுங் கையுடன் திரும்பச் செய்தனர்.

## சிறைவாசம்.

1919-ம் ஆண்டில் பாரிஸ் நகரத்தில் யுத்த சமாதான மகாநாடு நடைபெற்றது. அம் மகாநாட்டின் முன்னர் ஈஜிப்ட் தேசத்தின் குறைபாடுகளை எடுத்துக் கூறுவதற்காக வேண்டி அந்நாட்டுச் சுதந்தரக் கக்ஷியினர் ஜக்லுல் பாஷாவுடன் பன்னிரு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களைத் தூதாக அனுப்பத் தீர்மானித்தனர். ஜக்லுல் அவர்களும் பாரீஸ் நகரம் செல்லுவதற்கு ஆயத்தப்பட்டுக்கொண்டிருந்தார். அந்நிலையில் ஆங்கில துரைத்தனத்தார் ஜக்லுல் பாஷாவை திடீரென்று சிறைப்படுத்தி, மால்டாவுக்கு அனுப்பிக் காவற்படுத்தினர். அதுவே காரணமாக ஈஜிப்ட் நாட்டில் கலகங்களேற்பட்டன. எங்கும் குழப்பம் மும்முரமடைந்தது. அப்பொழுது புதிதாக வந்த ஆங்கிலேய ஹை கமிஷனர் ஜக்லுல் பாஷாவை விடுதலை செய்தார். சிறையினின்றும் வெளிவந்தவுடன் ஜக்லுல் அவர்கள் சிறைவாச பயத்தைக் கண்டு வாளா இருக்கவில்லை. முன்னிலும் பன்மடங்கு தீவிரமாக ஆங்கில துரைத்தனத்திற்கு எதிராகக் கிளர்ச்சி இயக்கத்தை நடத்தினார். தமது இருப்பிடத்தையும் பாரிசுக்கு மாற்றிக்கொண்டார்.

## இராயல் கமிஷன் நியமனம்.

அவ்வாறு நாட்டில் கிளர்ச்சி அதிகமடைந்ததைக் கண்ட ஆங்கிலேய அதிகாரிகள் ஈஜிப்ட் அரசியல் நிலைமையை விசாரணை செய்வதற்காக ஒரு கமிஷனை மில்னர் துரையின் தலைமையின்கீழ் நியமித்தனர். ஆயினும் அந்த ராயல் கமிஷனை ஈஜிப்ட் நாட்டினர் பகிஷ்கரிக்கவேண்டுமென்று ஜக்லுல் பாஷா கட்டளையிட்டார். தமது நாட்டார் அக்கமிஷனோடு ஒத்துழைக்க வேண்டுமென்று ஆங்கிலேயர்கள் விரும்பினால், ஈஜிப்ட் தேசத்தாரின் சுதந்தரத்தை முதலில் ஆங்கிலேயர்கள் அங்கீகரிக்க வேண்டுமென்று கூறினார். முடிவில் அவ்வாறே பிரிட்டிஷார் ஒப்புக்கொண்டதன்மேல் அக்கமிஷன் முன் சாக்ஷியம் கூறச் சம்மதித்தார். ஆயினும் அக்கமிஷனால் அவர் எதிர்பார்த்தபடி நன்மை விளையாமற்போகவே மீண்டும் கிளர்ச்சியை ஆரம்பித்தார். அதனால் ஜக்லுல் பாஷா அவர்களை ஆங்கில துரைத்தனத்தார் மீண்டும் 1921-ம் ஆண்டில் அரெஸ்டு செய்து சிறையில் வைத்தனர். கடைசியில் 1923-ம் ஆண்டில் அவரை விடுதலை செய்தனர். 1924-ம் ஆண்



டில் ஆங்கிலேயர்கள் ஏதாவது அநுகூலஞ் செய்வார்களென்று ஜக்லுல் எதிர்பார்த்தார். அதனால் அவ்வருடத்தில் மந்திரி சபையை முன்னின்று நிறுவினார். அச்சமயத்தில் இங்கிலாந்தில் தொழிற் கக்ஷியார் அதிகாரம் வகித்திருந்தமையால் அவர்களால் உதவி கிடைக்கலாமெனக் கருதி, ஜக்லுல் பாஷா இங்கிலாந்துக்குச் சென்று தொழிற்கக்ஷியின் முதன் மந்திரியாகிய மெக்டொனால்டு அவர்களோடு கலந்து பேசினார். சூயஸ் கால்வாயின் பாதுகாப்பு முதலிய உரிமைகளை ஆங்கிலேயர்கள் விட்டுவிட வேண்டுமென்றும், ஈஜிப்ட் நாட்டினின்றும் ஆங்கிலச் சேனையை அப்புறப்படுத்த வேண்டுமென்றும் ஜக்லுல் பாஷா விரும்பினார். அதற்கு முதன் மந்திரியார் "சூயஸ் கால்வாயின் பாதுகாப்பு உரிமையை பிரிட்டிஷார் எப்பொழுதும் விட்டுக்கொடுக்க முடியாதென்றும், ஆனால் ஆங்கிலச் சேனைகள் ஈஜிப்ட் அரசரின் அரசாங்கத்தில் தலையிடா வென்றும்" பதில் கூறினார். அவ்வாறு ஜக்லுல் தொழிற்கக்ஷி மந்திரியாருடன் பேசிய முயற்சி பயன்படாதொழிந்தது.

## முடிவு.

ஜக்லுல் பாஷா இங்கிலாந்தில் முதன் மந்திரியாருடன் பேசித் திரும்பி வந்தது முதல் ஈஜிப்ட் நாட்டுத் தேசீயக் கக்ஷியார்கள் சிலர் ஜக்லுல் பாஷாவை ஆங்கிலேயருக்கு உடந்தையானவரோ வென்று அநுமானித்தனர். அதனால் அந்நாட்டுப் பள்ளி மாணவனொருவன் அவரைக் கொல்ல முயற்சித்தான். அதிர்ஷ்ட வசமாகச் சிறு காயங்களுடன் உயிர் தப்பினார். அதற்குப் பின் சில தினங்களில் ஸர் லீஸ்டார் என்ற ஆங்கில உத்தியோகஸ்தர் ஒருவர் கொல்லப்பட்டார். அதைக் கண்ட ஆங்கில துரைத்தனத்தார் ஈஜிப்ட் நாட்டின்மீது ஐந்து லக்ஷம் பவுன் அபராதம் விதித்ததோடு, ஜக்லுல் பாஷா தமது அதிகாரப் பதவிக்கு ராஜிநாமாக் கொடுக்கவேண்டுமென்று கட்டளையிட்டனர். தேச நன்மைக்கு உழைக்க முற்படும் தேசாபிமானம் படைத்த ஒரு தலைவருக்குக் கிடைக்கும் வெகுமதிகளைக் கவனியுங்கள். அச்சமயத்தில் ஜக்லுல் பாஷா அவர்கள் ஆங்கிலேயரின் விருப்பப்படியே தமது பதவிக்கு ராஜிநாமாக் கொடுத்துப் பின்னர் 1925-ம் ஆண்டில் மறுபடியும் அந்நாட்டுப் பிரதிநிதிச் சபைக்குத் தலைவராக வந்தார். அவ்வாறு தன் ஆயுள் முழுதும் தன் நாட்டு நன்மையே பெரிதெனக் கருதி உழைத்துவந்த ஈஜிப்ட் நாட்டுச் சுதந்தரத் தலைவர் ஜக்லுல் பாஷா அவர்கள் 1927-ம் ஆண்டு ஆகஸ்டுமீ 24-ந் தேதி கெய்ரோ நகரத்தில் இப்பூத வுடம்பை விட்டுப் புகழுடம்பைத் தாங்கினார். ஜக்லுல் பாஷாவின் திருநாமம் ஈஜிப்ட் தேசீய வானத்தில் இன்று மங்காது பிரகாசித்துக்கொண்டிருக்கிறது.

# பண்டிதை இராமா பாய்.

திருமதி. அ. பொன்னம்மாள் அவர்கள், B.A., L.T.

உலகம் தோன்றியது முதல் மக்கள் வாழ்க்கையைச் சீர்படுத்தப் பெரியார் பலர் தோன்றிய வண்ணமே இருக்கின்றனர். நமது சரித்திர ஆராய்ச்சிக்கு முன்னர் எண்ணிறந்த பெரியார் தோன்றி மறைந்திருக்கலாம். அவர்கள் யாவரும் பல துறைகளில் மக்கள் வாழ்க்கையைச் செம்மையுறச் செய்தனர். அத்தகைய பெரியார்களில் பெண்மக்களும் அடங்கியிருக்கின்றனர். அப்பெண்மணிகளில் ஒருவரான பண்டிதை இராமா பாய் என்பாரது சீரிய வரலாற்றை ஈண்டுத் தருதும்:

இவர் துங்கபத்திரை நதிக்கருகில் உள்ள ஓர் ஊரில் 1850-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் அனந்த நாராயணர் என்பது; தாயார் பெயர் இலட்சுமி பாய் என்பது. அவ்விருவரும் மக்களது சமூக வாழ்வின்பொருட்டு மிக வுழைக்கும் நோக்கத்தினர்; வடமொழிச் சாத்திரங்களிலும் வைதீக நூல்களிலும் பயிற்சி பெற்றவர். அவர்கள் கொண்டிருந்த ஈகைப் பழக்கத்தால் இராமா பாய் ஆறு வயது சிறுமியாக இருக்கையிலேயே வறுமையடைந்து, தேசாந்திரிகளானார்கள். இத்தகைய நிலையிலும் நுண்ணறிவு வாய்க்கப்பெற்ற இராமா பாய் நன்றாய்ப் பன்னூல்களைப் பன்னிரண்டு வயதிற்குள் படித்து முடித்தார்; 1,800 செய்யுட்களை மனப்பாடஞ் செய்திருந்தார். இவர் இங்ஙனமிருக்க, வறுமைக் கொடுமையால் தாய் தந்தையரும் ஒரு தமையனைத் தவிர மற்ற உடன் பிறந்தாருங் காலமாயினர்.

உடன் பிறந்தார் இருவரும் பெரும்பாலும் இந்தியா முழுவதும் சுற்றினர். இளவயது முதல் தெய்வ வழிபாட்டிலும், நல்லொழுக்கத்திலும் பயின்ற அவ்விருவரும் ஒருவரை யொருவர் தேற்றிக்கொண்டு பலவிடங்களிலும் யாத்திரை செய்து, ஆங்காங்குள்ள சிறந்த நகரங்களையும் க்ஷேத்திரங்களையும் பார்வையிட்டனர்; கங்கை முதலாய சிறந்த ஆறுகளில் படிந்தனர்; ஆங்காங்குள்ள மக்களின் வாழ்க்கை நிலை, கட



வுள் வழிபடு முறை, தரும ஸ்தாபனங்களின் நிலை முதலாயவற்றைக் கருத்துடன் கவனித்து, அவற்றைப்பற்றிப் பலவாறு ஆழ்ந்து ஆராய்ச்சி செய்தனர். தமது பிரயாணத்தின் பயனாக அவ்விருவரும் வங்காளி, ஹிந்தி, மகாராட்டிரம், துளுவம், கன்னடம், சம்ஸ்கிருதம் முதலாய மொழிகளில் தேர்ச்சியுற்றனர். இம்மொழிகளில் தேர்ச்சியுற்றதன் பயனாக அவர்கள் கோயில் மடம் முதலான பொதுவிடங்கள் அவற்றின் பாகங்கள் முதலாயவற்றை உள்ளவாறே கண்டறிந்தனர்; இவையே யன்றிப் பெண்களின் உண்மையான நிலை, குருட்டுப் பழக்க வழக்கங்கள் இன்ன பிறவும் நேரிற் கண்டுகொண்டனர். இவ்வித ஆராய்ச்சிகளுக்கிடையில், மக்களை வருத்தும் பிணி, மூப்பு, சாக்காடு, பசி முதலிய கொடுமைகளையும், அவற்றைச் சகிப்பதால் மக்கள் பக்தி, மனதிடம், நன்னம்பிக்கை, பொறுமை, அன்பு, அனுதாபம் முதலான அரிய குணங்களோடு விளங்குவதையும் அறிந்துகொண்டனர். இங்ஙனம் சிறந்ததோர் அனுபவமளித்த சீரிய யாத்திரையில் அவ்விருவரும் இருபத்திரண்டு ஆண்டுகளைக் கழித்தனர். இராமா பாய், தமக்குண்டான பரந்த இயற்கை யறிவு, உலகானுபவம் இவற்றின் பயனாக, மூன்று சிறந்த விரதங்களை நோற்கத் தீர்மானித்தனர். அவற்றுள் முதலாவது, உண்மையான ஆன்ம அறிவு, ஆன்ம ஈடேற்றம், இறைவனது உண்மையான இலட்சணம் இவற்றை ஆராய்வது; இரண்டாவது, மாதரின் அறிவையும், ஆன்ம வளர்ச்சியையும், ஒழுக்கத்தையும் வளர்க்கத் தம்மால் இயன்றவரை முயல்வது; மூன்றாவது, குழந்தை வளர்ப்பு, சமூகப் பொது நன்மை இவற்றிற்கு உழைப்பது. இம்மூன்றைப் பற்றியும் சிறந்ததோர் அறிவு பெற, பல நூல்களைக் கற்றுத் தேர்ந்தார்; கற்றோர் பலருடனும் இவற்றைப் பற்றித் தர்க்கஞ் செய்து, பல உண்மைகளை யறிந்துகொண்டார்.

இராமா பாய் 1878-ஆம் ஆண்டு வங்காளத்தில் தங்கி, பல பண்டிதர்கள், மடாதிபதிகள், அறிவுடையோர் முதலியோரிடம் பழகினர். தமது அனுபவத்திலும் ஆராய்ச்சியிலும் தாமுணர்ந்த அரிய விஷயங்களைத் தம் தாய்நாட்டுச் சகோதரிகட்கு அறிவிக்க ஆவல்கொண்ட அவ்வம்மையார் பலவிடங்களில் மாதர்களிடையே பல அரிய பிரசங்கங்கள் செய்தார். உயர்குலப் பெண்களுக்குப் புராணங்கள், உபநிடதங்கள், வேதங்கள் இவற்றுள் பொதிந்துள்ள சிறந்த உண்மைகளைக் கற்பித்து அவர்களை நல்வழியில் பழக்கிவந்தார். அவரது பெயர் சில மாதங்களுக்குள் பத்திரிகைகள் வாயிலாக எங்கும் பரவியது. பம்பாய் மாகாணத்தார் தம்மிடம் வருமாறு அம்மையாரை வேண்டினர். அவர்களது அழைப்புக்கிணங்கி அம்மையார், "எனது உடலில் ஒரு துளி இரத்தம் இருக்கும்வரை என் நாட்டுச் சகோதரிகட்காக உழைக்க என்னை அர்ப்பணம் செய்திருக்கிறேன்" என்ற உயரிய செய்தியைப் பம்பாய்க்கனுப்பினர்.

அவ்வமயம் நற்குண நல்லொழுக்கம் வாய்ந்த வழக்கறிஞர் ஒருவரை அம்மையார் மணந்து, இல்லறத்தை இனிதே நடத்தி வந்தார். அதுகாலை அவர் கிறித்தவப் போதகர் பலரையும் சாத்திரியர் பலரையும் சந்தித்து, அவர்களோடு தாம் முன்னர் ஆராய்ச்சி செய்த பல விஷயங்களைப்பற்றித் தர்க்கித்து, அரிய பல உண்மைகளை உணர்ந்தனர். சத்திய வேதப் புத்தகத்தைப் படித்தாராய்ந்து, தாம் அதில் கற்றறிந்தவற்றை மதாசாரத்தோடு ஒப்பிட்டு இடையறு ஆராய்ச்சி செய்து வந்தனர். மண வாழ்க்கைக்குட்பட்ட ஓராண்டில் பெண் குழந்தையொன்று பிறந்தது. இந்நிகழ்ச்சிக்குப் பின் அவர் கணவர் காலமானார்.

அதன் பின்னர், அம்மையார் பம்பாய் மாகாணத்தாரது அழைப்பைச் சிரமேற்கொண்டு, சிறிதுகாலம் ஊரூராய்த் திரிந்து, நாட்டின் முன்னேற்றத்திற்கான சில வழிகளைக் காட்டியும், அவற்றைத் தடுத்து நிற்கும் மூட பக்தி, அறியாமை, வீண் பாரம்பரியக் கொள்கைகள், காலஞ் சென்றவையும் உபயோகப்படாதவையுமான சடங்காசாரங்கள், மதத்தைக் கொண்ட ஜாதிகள் ஆகியவற்றைக் கண்டனஞ் செய்தும் அரிய விரிவுரைகள் நிகழ்த்தினார். அம்மையார் 1883-ஆம் ஆண்டு ஆரிய மகிலா சமாஜம் என்ற சங்கமொன்றை நிறுவினார். (இச்சங்கம் இன்றும் நடைபெறுகிறதெனினும், அறிவினர் பலர் உள் நுழைந்து சங்கத்தின் நன்னோக்கங்களை மாற்றிவிட்டனர்.) அதுகாலை அம்மையார் மிஸ். ஹார்பர்ட் என்ற கிறித்தவ மாதரசியின் நட்பைப் பெற்றார்; அன்றியும், ஒரு பார்ப்பனக் கிறித்தவ சாஸ்திரியின் அரிய நட்பையும் பெற்றார். அவ்விருவரது துணைகொண்டு இந்து விதந்துகளுக்கு அறிவூட்டி, அன்னோரை நன்னிலைக்குக் கொணர ஆசித்தார். அவரது விருப்பமும் நிறைவேறத் தருணம் வாய்ந்தது. 1882-ம் வருடம் துறைத்தன கல்வி யாராய்ச்சிக் கூட்டத்தாரையும் அதன் தலைவராய ஸர். வில்லியம் ஹண்டர் (Sir William Hunter) என்பவரையும் அம்மையார் சந்தித்தார்; தமக்கிருந்த பல அபிப்பிராயங்களை வெளியிட்டு இந்திய மாதரின் நன்மையின் பொருட்டுப் பல 'பெண் வைத்தியர்கள்', நியமிக்கப்படவேண்டும் என்றும், இந்திய மாதர் அவ்வைத்திய முறையில் தேறும் வழிகளை யுண்டாக்கவேண்டு மென்றும் கோரினார். இவ்விரண்டு விஷயங்களையும் பற்றிய மனு விக்டோரியா மகாராணியார் முன்னர் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பயனாக முதல் முதல் டபரின் சீமாட்டி இயக்கம் என்ற சங்கம் தோன்றி, பெண்கள் வைத்திய உதவி பெறும் நன்மை உண்டாயது. அம்மையார் மாதர் ஒழுக்கம் என்னும் அரிய நூலொன்றை அக்காலத்தில் இயற்றினார்.

இராமா பாயவர்களின் பெயர் நாளடைவில் மேனாட்டில் பரவியது. பல நண்பர்கள் வேண்டுகோள்படி அம்மையார் இங்கிலாந்து சென்றார்.



ஆங்கிலேயர் அவரை யன்புடன் வரவேற்று, அரிய வுதவிகள் பல புரிந்தனர். அங்குள்ள வான்றேஜ் சகோதரிகள் இயக்கத்தைச் சேர்ந்த பெண்மணிகள் அவரைப் பலவிடங்கட்கு அழைத்துச் சென்று, தாங்கள் பெண்களுக்காகச் செய்து வந்த நற்செயல்களைக் காட்டினார்கள். அவர்களுடைய போதனை, சீரிய சேவை இவற்றைக் கண்ட அம்மையார் அகமலர முகமலர்ந்தனர்; கிறித்தவ பக்தர் புரிந்த கிரியைகளும் ஊழியமும் கண்டு மகிழ்ந்தார்; சிலர் பெயரளவில் கிறித்தவர்களாக விருப்பதைக் கண்டு, அவர்களைக் கடிந்தார். அவர் கிறித்தவ மதத்தைத் தாபித்த உண்மை ஊழியரான நாசரேத்தூர் அடிகளின் அன்புமிக்க உபதேசங்களிலும் மன்னுயிர்க்காகத் தன்னுயிரீந்த மாட்சியிலும், மெய்த்தொண்டிலும் பரவசமுற்ற அம்மையார், அவ்வடிகளின் அடியாராகி, அவரது திருச்சிலுவைக் கொடியின்கீழ் நின்று, உலக அறியாமை, அன்பின் குறைவு, கொடுஞ் செயல்கள் இவற்றோடு போராடி, மக்களிடையில் மெய்யான இறைவன் நீதி, அன்பு, தூய்மை நிறைந்த இராச்சியத்தை நிலை நிறுத்த உறுதிகொண்டிருக்கும் தெய்வீகப் போர்ச் சேவகரோடு தம்மையும் சேர்த்துக்கொண்டார். பின்னர் அவர் அமெரிக்கா சென்று, ஆண்டிருந்த சான்றோர் அன்பையும் பேருதவியையும் பெற்று, இந்தியாவுக்குத் திரும்பிப் போந்து தமது நிலையான வேலையைத் துவக்கினார்.

இராமா பாய் அம்மையார் மதம் மாறியதால் தம் இந்து நண்பர் பலரது நட்பை இழந்து அல்லற்பட்டார். எனினும், அவர் மனந்தளராது, தாம் முன்பு ஆரம்பித்த சாரதா சாதன் என்ற தர்ம ஸ்தாபனத்தைப் பூனாவில் நிலைப்படுத்தி, இந்தியாவின் பல்வேறு பாகங்களில் சொல்லொணாத் துயர்க் கடலுள் மூழ்கிக் கிடந்த இந்து விதவைகள், அனாதைப் பெண்கள் இன்னோரைச் சேர்த்து, அவர்கட்கு அன்னம் ஆடை முதலியன தந்து, நற்றுறையில் பழக்கிப் பல தொழில்களையும் குடும்ப சாத்திரங்களையும் கற்பித்து வந்தார். தமது ஆன்ம அனுபவம் மட்டற்ற மகிழ்ச்சி யளிக்கவே, முத்தி யாச்சிரமம் என்பதொன்றைக் கெட்கான் என்னும் இடத்தில் ஸ்தாபித்து, ஆயிரக் கணக்கான பெண்களையும் பிள்ளைகளையும் இறைவனது உண்மையான அன்பு தூய்மை முதலியவற்றைக் காணும்படி செய்தார். அவற்றோடு நில்லாது அக்காலத்தில் மத்திய மாகாணத்தில் நிகழ்ந்த கடும் பஞ்சத்தில் நலிந்தோரைத் தேடிக் கொணர்ந்து ஆதரித்து நல்வழிப்படுத்தினார். கூன், குருடு முதலான அங்கவீனர்களைப் படிப்பிக்கப் பல கல்விச் சாலைகளை ஸ்தாபித்தார். இங்ஙனம், ஆண்டவனுக்கும் அடியவர்க்கும் ஆருயிர்க் குழாத்துக்கும் தமது அன்பைக் கனியச் செய்த அப் பெரியார் தமது அறுபத்து மூன்றாம் வயதில் இறைவனடி சேர்ந்தார்.

# முயற்சியும் உடற் பயிற்சியும்.

## ஸ்ரீமான் லே சோமசுந்தரம் அவர்கள்.



பண்டைக் காலப் பலசாலிகளைப் பற்றி, உடற் பயிற்சியாளர்கள் அனைவரும் பொதுவாய்த் தங்கள் தங்கள் சொந்த அறிவினால் ஆராய்ந்து ஓர் உண்மைக் கொள்கையினைப் பின்பற்றி நடக்கக் கடமைப்பட் டிருக்கிறார்கள். மேல் நாட்டில் ஒருவர் 'அப்போலோ' தெய்வத்தின்

நூலறிவொடு நுண்ணறிவும் பெற்று விளங்கிய அம்மையார் பெண் மக்கள் நல்வழிப்படவும் உலக அறிவைப் பெறவும் மிக உழைத்தார். நற்றமிழ் நாட்டின்கண் கற்பிற் சிறந்திலங்கிய உத்தம மங்கையருள் இவர் ஒருவர்; சாரதா சாதன், முத்தியாச் சிரமம் இவற்றில் மடமங்கையரைக் கூட்டி யணைத்து, அவ் விடங்களை மாதர் விரும்பி வதியும் மணக்கோட்ட மாக்கினார்; அவண் கூடிய பெண்களுக்குச் சிறந்த அற நெறியை நன்கு விளக்கினார்; பசிப்பிணியால் நலிந்த பாமரரை யுண்பித்தார்; நாட்டின் பல நலன்களினின்றும் விலக்கப்பட்டுச் சுதந்திரமிழந்து மழை முகங் காணாப் பயிர் போன்று வாடியிருந்த எண்ணிறந்த விதவையரான மடமங்கையரது துயரைப் போக்கினார்; அன்னோரைக் கற்பு நலத்தில் ஒப்புயர்வற்றுத் திகழ்ந்த ஆதிரை போன்ற அரு மங்கையராக்கினார்; பல நகரங்களிற் சென்று பசிப்பிணியால் வாடிய சிசுக்களைக் கூட்டி நாடோறும் அன்னமளித்து, வயிறார உணவு பெறாத மற்றையோரையும் தேற்றித் திருப்தி செய்தார்; இழிந்த ஆடவர் வலையில் சிக்கி, இம்மைப் புகழும் மறுமையின்பமும் இழந்து நின்ற பொது மகளிர் பலரைத் தமது ஞானோபதேசத்தால் உயரிய நிலையில் நிறுத்தினார்; மறுமை யுணரும் மாசிலா அறிவை அன்னோர்க்கு உணர்த்தினார். சுருங்கக் கூறமிடத்து, முன்னர்ச் சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கிய தவமாது மணிமேகலை போன்று, அம்மையார் தமது ஆச்சிரமத்தை மாதர் இனிதுறையும் மன்றமாக்கி, பசியும் பிணியும் பகையும் நீக்கி வசியும் வளமும் சுரக்கும் மாசிலா மடமாக்கினார். புறவிருளையும் அகவிருளையும் போக்கித் தம் தாய் நாட்டுச் சோதரிகட்கு உயிராய் விளங்கிய இவ் வுத்தம அம்மையாரைப் போன்ற சிறந்த மெல்லியலார் வேறொருவரை இந்தியத் தாய் என்று பெறுவள்?



கோவிலை வணங்கலாம். மற்றொருவர் 'ஹெர்குலீஸ்' ஆலயத்தையும் வழிபடலாம். பின்னொருவர் நவீன வீரர்களான 'சாண்டோ'வையாவது, 'ஆர்தர் சாக்ஸனை'யாவது போற்றியிருக்கலாம். அது போலவே நம் நாட்டிலும் பலத்தில் மிக்காரைப் போற்றிப் புகழ்ந்து பின் தொடரலாம். ஒருவருடைய கொள்கை எதுவாயிருப்பினும், தற்கால உடற் பயிற்சி மாணாக்கன் தான் போற்றும் பெரியாரின் பலத்தினை எட்டிப் பிடிக்க, தான் அனுஷ்டிக்க வேண்டிய ஏதேனும் சிறந்த முறைகளைப்பற்றி நல்ல அறிவு படைத்திருக்க வேண்டியது அவசியம்.

பண்டைக்கால மக்கள் கடவுளை தங்களுக்குத் தேக பலத்தையும் அழகையும் கொடுத்ததாகச் சொல்லிக்கொண்டதை ஓர் பயிற்சியாளர் ஒப்புக்கொள்வதா யிருந்தாலும், அவர் சென்ற பரம்பரையில் தோன்றின பலிஷ்ட மக்களிடம் வரும்போது, அவர்களுடைய தேக பலத்திற்குக் காரணமாயிருந்த விஷயங்களைத் தன் பகுத்தறிவுக்குப் பொருந்தும்படி அங்கீகரித்து அம் முறைகளைப் பின்பற்ற வேண்டியிருக்கின்றன.

அவைகளை இன்னமும் கடவுளின் அமைப்பு என்று அவர் பேரில் பழி போடுதல் கூடாது. இயற்கையிலேயே பிறப்பின் அமைப்புடன் சிலருக்குச் சிலவித விசேட மனோபலமும், தேக பலமும் பொருந்தியிருத்தல் உண்டு. இதனை யாரும மறுக்க முடியாதுதான். இயற்கை, தன் சொந்தமான சில விநோத முறைகளால் அச் சக்திகளைப் பெருக்கத் தூண்டுகிறது. ஆயினும் மிக்கான தேக பலத்திற்குக் காரணம் அத்தகைய தூண்டுதல் என்று நினைத்து வாளாவிருத்தல் சரியன்று.

பிறப்பின் அநுகூலம் இவ் விஷயத்திற்குத் தகுந்த காரணம் என்பதை ருசுப்படுத்தப் பலமான அநேக உதாரணங்க ளிருக்கின்றன. அதனை மறுக்க முடியாதென்பதும் உண்மை. சில குடும்பத்தில் பிறந்தவர்கள் எல்லாருமே பரம்பரை பரம்பரையாக இயற்கையிலேயே மகா பலிஷ்டர்களாக இருந்து வந்திருப்பதைக் கண்டிருக்கிறோம். அதிலிருந்து பலவான்களுக்குப் பிறந்தவர்கள் தான் பெயர்போன பலவான்களாக இருந்தார்கள் என்பதைக் காட்டவும் உதாரணங்கள் கிடைக்கும்.

ஆயினும் ஒரே குடும்பத்தில் தோன்றின குழந்தைகளுள், ஒரு குழந்தைக்கும் மற்றொரு குழந்தைக்கும் தேக ஆக்கத்தில் ஏராளமான வித்தியாசங்கள் தோன்றுவதுமுண்டு. அவ்வப் பிறப்புகள் சம்பந்தமான காலம், இடம், நிலைமை, வளர்ப்பு முதலியவைகள் ஒன்றும் விசேட வித்தியாச மில்லாதிருந்த விடத்தும்,

ஒரு குழந்தைக்கு தேகக் கூறுகள் வித்தியாசப்பட்டிருப்பதைக் காண்கின்றோம். இவைகளின் தன்மைகளைப் பற்றி விவரிக்கற் பொருட்டு எடுத்துச் சொல்லுதல் அவசியமாகிறது.


அநேக பலசாலிகள் தொத்தல்களாகவே பிறந்திருக்கின்றனர். ஆகையினால் பெரிய தேகசக்தி பெற்றோர்களிடமிருந்தே, தேக பலம் ஒருவருக்குக் கிடைக்கத்தக்கது என்ற எண்ணம் தூர விலக்குதற்குரியது. ஏனெனில் பிறவியால் தொத்தலாயிருந்தவர்கள், வலிமை உலகில், புகழின் கற்களின்மேல் தங்கள் பெயர்களைச் செதுக்கிச்சென்ற மகத்தான பலிஷ்டர்களைப் பற்றி மக்கள் நன்கறிந்திருக்கின்றனர். அதனை விளக்க மறுக்க முடியாத எண்ணிறந்த பிரமாணங்கள் உண்டு.

இதனை மிகத் தெளிவுபடுத்த "இயுஜன் சாண்டோ" என்னும் பெரியாரே தக்க சாட்சியாகும். உலகத்தில் எக் காலத்திற்கும் அவருடைய மகா உன்னதமான தேக சக்தியும், அதி சுந்தர தேக அமைப்பும், சம்பூரணம் பெற்ற மகத்தான மனித உடலுக்கு ஒரு மாதிரியெனக் கொள்ளத் தக்கது என்பதை யாரும் மறுக்க முடியாது. அவர் பையனாக இருந்தபோது வெகு பலவீனமுள்ளவராகவும், நோயுள்ளவராகவும், அவருடைய தேகக் கருவிகள் வளர்ச்சி குன்றியனவாகவும் இருந்தனவென்று பலர் பலமுறை எடுத்தெடுத்துக் கூறியிருக்கின்றனர். மானிட யாக்கையின் அற்புத ஆலயம் எனத் தகுந்த சம்பூரண தேகக் கட்டினை ஆக்கவும், சம நிலை வலிகொண்ட மனோ சக்தியினுக்கு இருப்பிடமாய்த் திகழ்ந்த உடலை வளர்க்கவும், போதிய அடிப்படையான பலத்தினை அடையவும், அவருடைய இயற்கை அமைப்புப் பெற்ற இளந் தேகம் இடந்தர முடியாதென்பதைத்தான் நம்பியிருந்ததாகப் பல சமயங்களில் அவரே வெளிப்படையாகக் கூறியிருக்கிறார். இதுபோலவே பிறவியில் தொத்தல்களாயிருந்து மகத்தான தேக பலம் பெற்றவர்கள் எண்ணிறந்தவர்கள் இருந்திருக்கிறார்கள்.

இத்தகைய அசாதாரண தேகவன்மை வந்தடைவதின் இரகசிய மென்ன? சாண்டோ என்னும் பெரியார் தன் நுண்ணறிவால் கண்டுபிடித்தொழுகிய முறைகளிலிருந்தே உண்மைகள் வெளி வருகின்றன. அம் முறைகள் தேக முயற்சி, அல்லது உழைப்பு, அல்லது கடின வேலை என்பதைப் பற்றியது. காரணம் எதுவாயிருப்பினும், சாஸ்திரியமான கஷ்டம் கலந்த உழைப்பு என்பதை ஐயமற நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

சாண்டோ என்னும் பெரியார் உடற் பயிற்சியினை மேற்கொண்டு, அவர் காலத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த முறைகளை





சாண்டோ லே. சோமசுந்தரம்.

யெல்லாம் அக்கறையோடு அநுஷ்டித்து, தேக சக்தியினையும் மனோ சக்தியினையும் விருத்தி செய்வதற்கான வழிகளைக் கையாண்டு, தன் கொள்கையைப் பூர்த்தியாக்கித் தான் சம்பூரண சுதந்திர புருடனுக்கு ஒரு மாதிரியெனக் கொண்டாடப்பட்ட காலம் வரையில் மகா கடினமான தேக உழைப்பில் ஈடுபட்டே யிருந்தார்.

நான், அவர் உழைத்தார் என்று சொல்லுவதை நீங்கள் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். "உழைத்தார்" என்ற பதத்தை நான் வேணுமென்றே உபயோகப்படுத்துகிறேன். ஏனென்றால் கடின உழைப்பினாலேயே ஒருவருடைய மனோபீஷ்டம் நிறைவேறும்.

மேற்கண்ட விதம் நான் கூறியதை நீங்கள் தப்பாக அர்த்தம் கொள்ளவேண்டாம். மிகுந்த சிரமத்தையும்—ஆயாசத்தையும் விளைக்கும உழைப்புத் தேவையில்லை. உழைப்பினால் ஆயாசம் உண்டாகக் கூடாது. உண்மையான உற்சாகமும் பிரியமும் இருந்தால் ஆயாசம் இருக்கவேண்டிய அவசியமில்லை. அது இருக்கவும் இருக்காது. ஜெயமடைவதற்கு ஆயாசம் தேவை என்று சொல்லுவது விஷயத்தை மிகைபடக் கூறுவதாகும்.

உற்சாக மில்லாமல்—விஷய முணராமல்—சரியாய்த் தெரிந்து கொள்ளாமல்—தினமும் தவறாமல் ஒழுங்காகத் தேகத்தால் உழைக்கும் தொழிலாளி ஒருவனுக்கு நல்ல தேகக் கட்டும் பலமும் அமைவதில்லை. அத்தகைய தேக உழைப்பில் செய்யப்படும் முயற்சி ஒரே மாதிரியில் இயந்திரப் பாங்காகி அது தனக்குரிய இலட்சணங்களை இழந்துவிடுகிறது. ஆனால், பலவிருத்திக்கென்று செய்யப்படும் விடா முயற்சி அளவிற் குட்படுத்தப்படுகிறது; அதனுடைய அநுஷ்டான முறைகளும் பலவகை யாக்கப்படுகின்றன; இவையாவும் ருசி யளிப்பனவாயும் புதுமையினைக் காட்டக்கூடியன வாயு மிருக்கின்றன.

உற்சாகம் சம்பந்தப்பட்ட வரையில்கூட, பயிற்சியாளன் தான் பலம்பெற வேண்டுமென்று கொண்டுள்ள மனோ உறுதிக்குக் குறைவு ஏற்படுவதில்லை.

தேக பலத்தினைப் பெறக் கொள்ளும் ஆர்வத்தினையும், கடின வேலை செய்யத் தீர்மானிக்கும் மன உறுதியையும், தன் உடலில் மிஞ்சி நிற்கும் ஒரு அணுப் பலத்தையும் உதவியாகக் கொண்டு அதனை முன்னிறுத்தி வேலை செய்யவேண்டுமென்று கொள்ளும் உணர்ச்சியையும் ஒருவன் விருத்தி செய்யவேண்டியது அவசியம். இத்தகைய குணங்கள் யாவும் ஒரு ஆவேசம் போல அவனை ஆட்கொள்ளும் வரையில் அவன் தக்க முறையில் உழைக்கவேண்டும்.

# ஒரு வீரப் பெண்மணியின் தேச பக்தி.

திரு. கே. வேங்கடராவ் அவர்கள்.

நாடு பிளவுபட்டால் அன்னியனொருவன் தனது ஆதிக்கத்தைப் புகுத்தவும் நிலைநிறுத்தவும் வெகு சௌகரியமாய்விடும். பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரான்சு தேசத்தில் கட்சிப் பிளவுகள் வலுத்து நின்ற காலத்தில் அந் நாட்டரசன் விண்ணுலகடையவே, அவருடைய குமாரனை இளவரசன் பட்டத்திற்கு வருவதை ஓர் கட்சியார் எதிர்த்தனர். அன்னியனொருவனுக்கு அரசுரிமையை வழங்கவும் பிரயத்தனப்பட்டனர். அன்னியனுக் குதவி கொடுத்துத் தம் தாய் நாட்டை அவனுக்கு அடிமைப்படுத்துவது தமக்கே இழிவாகும்; இது தேச பக்தி

---

அரைகுறையான நடவடிக்கைகளும், தற்செயலான சம்பவங்களுக்கு உட்படுதலும், வரையறையற்ற முரட்டு முறைகளும் கூடாது. நிதானமாக மேலும் மேலும் விழிப்போடு முயற்சி கலந்த உழைப்பினால் மேற்செல்ல வேண்டும்.

இயற்கையாகவே ஒரு மனிதன் மற்றொரு மனிதனைவிட அதிகமான முயற்சியினை உபயோகித்தல் கூடும். விசேட தேக சக்தியினை உபயோகித்தலிலும் ஒரு மனிதனைவிட மற்றொரு மனிதன் அதிகமான களைப்படைதல் உண்டு. மக்கள் வாழ்க்கையிலும் உழைப்பிலும் சம்பந்தப்பட்ட நிலைமைகள் பெரிதும் வித்தியாசப்படுகின்றன. என்னதான் இருந்து வந்தாலும் உண்மையான உழைப்பும் கடினமான வேலையும் விடா முயற்சியும் இல்லாமல் ஒன்றும் முடியாது.

தங்களுடைய விடா முயற்சியின் காரணமாக பெயர்போன தேக பலத்தை யடைந்த மற்ற பலிஷ்டர்களின் வாழ்க்கைச் சரிதங்களைச் சமயம் நேர்ந்தபோதெல்லாம் எழுதுவேன்.

உழைப்பு மனிதனை ஆக்குவது
கவலை மனிதனை அழிப்பது.

---



யாகாது; இதன் பயனாக பின்னாளில் மாளாத தொல்லைகள் நிகழும் என்னும் விஷயங்களைப்பற்றி அவர்கள் சிந்திக்கவேயில்லை. இவ்வாறு தம் தாய் நாட்டை அன்னியனுக் கடிமைப்படுத்தவே போர்புரியவும் மார் தட்டி முன் வந்த வீரர்களின் கட்சிக்கு பர்க்கண்டியர்கள் என்று பெயர்.

இங்கிலாந்து தேசத்துப் படைகள் பிரான்சு தேசத்திற்கு வரலாயின. பர்க்கண்டியர்களின் உதவியைக்கொண்டு பிரான்ஸை அடிமைப்படுத்தத் தீவிரப்போர் முயற்சிகள் நடைபெற்றன. பிரான்ஸின் பெரும் பாகத்தை ஆங்கிலேயர்கள் கைப்பற்றிக்கொண்டதும் இளவரசன் தன் நாட்டின் நிலைமையை அகக்கண்ணால் கவனித்தான். "என்னே மோசம்! நம் நாட்டவர்களே பிற நாட்டவர்களுக்கு உதவி புரிகின்றனரே! பர்க்கண்டியர்களின் உதவி யன்னியில் ஆங்கிலேயர்கள் பிரான்ஸில் காலடி வைக்க முடியுமா? ஐயோ! என் தேசத்தின் மானத்தைக் காக்க என்னால் முடியவில்லையே! நாட்டின் பெரும் பாகம் அன்னியர்க் கடிமை யாயிற்றே! தோல்விமேல் தோல்வி யுண்டாகவே நமது வீரர்களுக்குத் தைரியமும், நம்பிக்கையும், ஊக்கமும் அகலப்போகின்றதே! என் செய்வேன்! நாடு அடிமையானால் நாமும் வீராவோமா? என் வம்சமும் இத்துடன் நிர்மூலமாய்விடுமே!" என்று நினைக்க நினைக்க இளவரசனுக்கு மாளாத் துயரங் குடிகொண்டது. படைகளோ ஊக்கங் குன்றி, வீரம் வறண்டு, தைரியம் விட்டு இவன் பேச்சைக் கேட்கவில்லை. இளவரசனும் தைரியம் விட்டான். இவனுடைய படைகளும், "ஐயோ! அந்த ஆங்கிலேயரை வெல்ல முடியாது! அப்பப்பா! போர் வேண்டாம்" என்று மூலையிற் பதுங்கினர். இளவரசனின் நெஞ்சம் படபடத்தது; துடிதுடித்தது. என் செய்வான் பாவம்! எல்லா நம்பிக்கையு மிழந்து பரிதவித்தான்.

திடீரென்று வானம் இடித்தது; அரசியல் வானம் மின்னிற்று. இளவரசன் முன்னே ஓர் இளஞ் சிறுமி வந்து நின்றாள். இளவரசரைக் கண்டதும் "அரசே! அஞ்சாதே! நான் ஒருத்தி, இந்த ஆங்கிலேயரை நாட்டை விட்டு ஒரு நொடியில் விரட்டியடிக்கிறேன். நான் யார் தெரியுமா? அன்பின் தாயகமும் கடவுள் மைந்தனுமாகிய இயேசுநாதரின் தூதுவள். தாய் நாட்டை அடிமைப் படுத்தும் சிறுமையைக் கண்டு நாதர் சகிக்கவில்லை. இந்த தேசத் துரோகிகளாகிய பர்க்கண்டியர்களின் பாதகச் செயல்களைக் கண்டு இயேசுநாதர் மனப் புண்ணடைந்தார்; என்னை யழைத்து "உடனே நீ போய் பிரான்ஸைக் காப்பாற்றி வருக" வென்று ஆக்ஞாபித்திருக்கிறார். என் வினையை இதோ முடித்துக் காட்டுகிறேன். உன்னிடமுள்ள படையைக் கொடு; உனக்காக நான் போர் புரிந்து

வெற்றி தருகிறேன். இது சத்யம்!" என்று கர்ஜிக்கவே இளவரசன் பார்த்தான். எந்த பதிலும் சொல்லக் கூட வில்லை.

அப்போது ஓர் தூதன் வந்து "அரசே! விரோதிகள் ஆர்லியன்ஸ் கோட்டையை முற்றுகை போட்டு விட்டனர். அந்தக் கோட்டை போனால் தென் பிரான்சு முழுமையும் போச்சு!" என்று அறிவிக்கவே, இளவரசனின் கண்களில் பளபளவென்று நீர் பெருகியது. எதிரே வீர மாதைக் கண்டான். உடனே சிரித்தான். "இள நங்கையே! எதிரிகள் வலியரானவர். நாட்டின் வடபாகம் ஏற்கனவே அவர்களுக்கு அடிமையாய் விட்டது. தென் பாகத்தின் உயிர் நாடியைக் கையிற் பிடித்துள்ளார்கள். என் வீரர்களோ நடைப் பிணமாயினர். பெண்ணே! உன்னால் என்ன முடியும்?" என்று அவனது சிரிப்பு கூறிற்று. வீர மாது பார்த்தாள். வீரப் பொலிவுடன் அரசனைப் பார்த்து "அரசே! இவ்வுலகைக் காக்கும் வீர மாதே உன் முன் நிற்பதாக அறிந்துகொள். என்னால் முடியாதது முண்டோ? போனது போகட்டும். கடைசி முறை யென்றெண்ணி என்னுடன் படையை யேவு! நாளைய தினம் உனக்கு வெற்றியென அறிவிக்கிறேன்" என்று போட்ட சங்கத் தொனி அரசனைத் தட்டி யெழுப்பிற்று. தனது படையை மாதின் பின் அனுப்பினான்.

வீர மாதோ படையைப் பார்த்து, "சோதரரே! அஞ்ச வேண்டாம். இதோ நான் உங்கள் முன் செல்லுகிறேன். எதிரிகளை என் கை வாளால் உங்கள் கண்ணெதிரில் வெட்டி வீழ்த்துகிறேன். உலகமே புரண்டு வந்தாலும் என் சக்தியை வெல்ல முடியாது. கடவுள் மைந்தனாகிய இயேசுவின் ஆக்ஞையின்பேரில் உங்கள் நாட்டின் மானத்தைக் காக்க வந்தவள் நான். நான் வீரர்க்கே தெய்வம். தேச பக்தர்களுக்குத் துணையாக நிற்பவள் நானே! இதோ பாருங்கள். உங்கள் எதிரிகள் என்னைப் பார்த்ததும் ஓநாயைக்கண்ட ஆட்டு மந்தையைப்போல் பறந்தோட வேண்டும். அவர்களை விரட்டி விட்டு, தேசத் துரோகிகளாகிய பர்கண்டியர்களை நிர்மூலமாக்குகிறேன். குழந்தைகளே! வாருங்கள் வாழ்ந்தால் சுதந்தர நாட்டில் வாழுங்கள். இன்றேல் வீர சுவர்க்கம் பெற அருகதை யடையுங்கள். புறங்காட்டி யோடுவோர் பேதையரன்றோ? அடிமைகள் நாயினுங் கடையரன்றோ? இத்தகி வாழ்ந்திட நாம் ஒருப்படுவதும் ஆண்மைத்தனமாகுமா? வீரமாகுமா? தேசத்தைக் காட்டிக்கொடுக்கும் பாதகரை கடவுள் மன்னிப்பாரா? தேச மென்பது நம்மை யீன்ற தாயன்றோ? தாயின் மானம் போகும்போது நாம் கைகட்டி மௌனம் சாதிப்பதும் நீதியோ? தாயைக் காக்க உயிரிழக்கவும் தயாரென முன் வரலன்றோ உண்மைத் தியாகம்! உண்மை வீரம்!



உண்மை ஆண்மை! இப்பேர்ப்பட்ட நெருக்கடியில் தேசத்தின் மானங் காக்கும் மானமுள்ள மக்களின் பெயர் உலக சரித்திரத்தில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படும். உங்கள் ஆன்மாவை தற்கால உலகமும், பிற்கால உலகமும் போற்றி வணங்கும். தேசத்தைக் கைவிட்டால் உங்களைவிட பேடிகள் உலகிலில்லை யென்று உலகுளோர் சிரிப்பர்; தேவர்கள் சபிப்பர். மக்காள்! எவ்வழி பின்பற்றுவீர்கள்? வீரமும், ஆண்மையுங் கொண்டு தியாகம் செய்யப் போகிறீர்களா? அல்லது அச்சமும், பேடிமையுங் கொண்டு நரகில் விழத் துணிவீர்களா? சொல்லுங்கள். நீங்கள் என் பின்னோடு வாராவிட்டாலும் நான் ஒருவளே போர்க்களம் சென்று வெற்றி கொணர்கிறேன்" என்று கேட்கவே படை வீரர்களுக்கு வீரவுணர்ச்சி பிறந்தது. அவர்களுடைய நரம்புகளிலோடும ரத்தம் கொதித்தது. பெண்மணி சொன்ன ஒவ்வோர் வார்த்தையும் அவர்களின் ஆவியுள் புகுந்தது. திக்பிரமை கொண்டனர். என்றுங் காணு வீரத் துடிப்பு அவர்கள் முகத்தில் இப்போது காணப்பட்டது. வீரத் தெய்வமே அவர்களது மனதில் புகுந்தாள். தேச வெறி அவர்களின் ரத்தத்தில் கலந்தது. காலனே யாயினும் அவனையும் வெட்டி வீழ்த்தும் மகா சக்தி அவர்களிடம் திரு நடனமாடினது. சோர்வுற்ற வீரர் மகா சக்தி பெற்றனர்.

புத்துயிர் பெற்ற வீரர் வீர வாழ்வு வாழக் கிளம்பினர். "உலக அன்னையே நம் முன் நிற்கையில் அச்சமேன்? போர் புரிவோம். சுதந்திரம் அல்லது வீர சுவர்க்கம் பெறுவோம்" என்று குதூகலத்துடன் ஆர்ப்பரித்தனர். எல்லோரும் ஒரு மனிதனைப் போல் போருக் கெழுந்தனர். வீரத் துடிப்புடன் போர்க் களஞ் சேர்ந்தனர். நாலாயிரம் வீரரை உடனிருத்திச் சென்ற வீரப் பெண், கையில் வாளும் கொடியுமேந்தி வீரமா சக்தி யன்னையைப் போல் பகைவரைக் கொளுத்தச் சென்றாள். அவளுடைய வாளுக்கிரையானோர் பல பேர்; அவள் தன் வீரப் பார்வையைக் கண்டு நடுநடுங்கி மெய்சோர்ந்தோர் அனேகர்; "ஓர் பெண்ணே ஆண்மைகொண்டால் ஆண்மையை எதிர்க்க நம்மாலியலுமோ" என்று பகைவர் சோர்ந்து வீழ்ந்தனர். முற்றுகை யிடப்பட்ட ஆர்லியன்ஸ் கோட்டையை வீர மாதும் வீரப் படையும் அணுகினர். வீர சக்தி படைத்த சேனையைக் கண்டு ஆங்கிலேயர் வெருண்டோடினர். கோட்டை மீட்கப்பட்டது. வெற்றியே அணியாகக் கொண்டு தோல்வியை என்றுங் கண்டிராத ஆங்கிலேயர் என்றழைக்கப்பட்டவர்கள் ஒரு இளஞ் சிறுமியின் முன் பதறி யோடினர். இச்செய்தி பிரான்சு உலகெங்கும் காட்டுத் தீ போல் பரவியது. நம்பிக்கையையும்

தைரியத்தையும் இழந்து மெலிந்து வாடின பிரெஞ்சுக்காரர் வீரத் தோடெழுந்தனர். "நம்மைப் பிடித்த பிசாசுகள் தொலைந்தன" என்னும் கொடி தாங்கி நாட்டைக் காக்க முன் வந்தனர்.

ஆர்லியன்ஸ் கோட்டையை விடுவித்து, நாட்டின் தென் பிரதேசத்தையுங் காத்து, எதிரிகளை விரட்டியடித்து நாட்டினர்க்கோர் புத்துயிரும், புத்துணர்வு மளித்த வீர நங்கையின் முயற்சியால் இளவரசனுக்கு ரீமன் என்னும் நகரத்தில் முடிசூட்டப்பட்டது. அடிமையான வட பிரதேசத்தை விடுவிக்க வீரக்கன்னி படை திரட்டினாள். வீர முயற்சிகள் செய்தாள். திடீரென்று அவள் தேசத் துரோகிகளாகிய பர்க்கண்டியர்களின் கையில் அகப்பட்டுக்கொண்டாள். தங்கள் நாட்டைக் காத்த தெய்வத்தை அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? விழுங்க வந்த ஆங்கிலேயரிடம் ஓர் விலை பெற்று விற்றுவிட்டார்கள். தங்களை ஆடுகள்போல் ஓடவைத்த நங்கையைக் கண்டு சிரித்தனர். நிராயுதபாணியாய் நிற்கும் வீர நங்கையைக் கண்டு இவர்கள் "ஓ! இவள் ஓர் சூன்யக்காரி! உலகைக் கெடுக்க வந்த பாதகி! இவளை உயிருடன் விடலாகாது. சுட்டெறித்துவிடுவோம்" என்றனர். அப்போது வீரப் பெண், "அன்னியர்களே! நீங்கள் என் தாய் நாட்டை அடிமைப்படுத்த முயற்சித்தீர்கள். எங்கள் தேசத்தைக் காட்டிக் கொடுக்கும் ஓர் கட்சியினரைக் கைவசம் போட்டுக்கொண்டீர்கள். என் நாட்டினர் தளர்வுற்ற சமயத்தில் என்னுள் வீரத் துடிப்பு மேலிட்டது. இந்நெருக்கடியினின்று நாட்டின் மானத்தைக் காப்பதே என் வாழ்வினையென்று என் ஆவி கூவியது. உடனே எழுந்தேன். தெய்வீக அருள் தபற்றேன். தெய்வீக சக்தியே உங்களை வென்றது. நான் வென்றதில்ல, நான் மந்திரவாதியல்ல; பேய் பிசாசல்ல; தேச பக்தி விறைந்த பைத்தியகாரி. நான் எங்கிருந்தும் புதிதாக வந்துவிடவில்லை. என் வரலாறு வேண்டுமா? நான் பிறந்து வளர்ந்தது டாம்ரம் என்னும் குக்கிராமம். என் தகப்பனார் ஓர் ஏழை விவசாயி. இயேசுநாதரே என் வழிபடுந் தெய்வம். நாட்டினர் சீர் கெட்டு நாடும் அன்னியர் கையிற்படும் விஷயம் என் காதுக் கெட்டியதும் "ஆர்க் மரபிலுதித்த ஜோன் என்னும் பெண்ணே, நாட்டைக் காக்க வீரமுடன் விரைந்து செல்" என்று என் ஆவி கூவியது. உடனே வந்தேன். என் வினை முடித்தேன்" என்று தன் வீர உரைகளை முடிக்கவே, ஆங்கில வீரர்கள் இவளைக் கட்டி துணிகளால் சுற்றி நெருப்பிட வந்தனர். வீரப் பொறுமையுடன் சகித்த ஜோன் கூறுகிறாள்:—"ஆங்கிலேயர்களே கேளுங்கள்! என்னைத் தீயிலிட்டெறித்தாலும் பயமில்லை: நெருக்கடியில் தேசத்தைக் காத்து வெற்றியடைந்தேன். அதுவே போதுமானது. தேசமே தெய்வமெனக் கருதிய என் ஆவியை அன்பின் நாயகமாகிய இயேசு கூவியழைக்கிறார். தீயிடுங்கள்! இக்கட்டையைப் பொசுக்கிச் சாம்பலாக்குங்கள். என் ஆவியோ தேச பக்தர்களைத் தட்டியெழுப்பிவரும்!" என்று கர்ஜித்தாள். ஆங்கிலேயரும் நெருப்பிட்டு அவ் வீர மங்கையின் தேகத்தை அக்கினிக்கு அர்ப்பித்தனர்.

அப் பெண் நல்லாளின் ஆவியோ மேலெழுந்தது. "பிரெஞ்சுக்காரரே! உலகத்தாரே! வீர நினைவு கொண்டு வாழுங்கள்! தேசத்தைக் காத்தலே சீரிய பணியாகும். அடிமைத் தனத்தை எந்நாளும் வரவேற்க ஒருப்படாதீர்கள்! தாய் நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கும், தாயைக் காட்டிக் கொடுப்பதற்கும் வித்தியாசமில்லை. நாட்டுப் பணியே தெய்வப் பணியாகும். நாட்டுப் பணியாற்றுவோர் அனைவர்க்கும் அருளளிப்பேன்" என்று அம்மாதின் ஆவி உலகிற்கு அறிவிக்கிறது. பிரெஞ்சுக்காரர் இன்றைக்கும் நாளைக்கும் இம் மாதை தெய்வமென்றே கொண்டாடுகிறார்கள். உலக சரித்திரமும் இவளுடைய வீரத்தைப் புகழ்ந்து பேசுகின்றது. உலகுளோர் இவளின் வரலாற்றை வியந்துரைக்கின்றனர். ஜோன் ஆப் ஆர்க் என்னும் பெயரைக் கேட்டவளவில் நெஞ்சில் வீரத் துடிப்பு படபடக்கிறதன்றோ? வீரர் வாழ்க! வீரத் தொண்டர் வாழ்க! வீரங்கொண்டு உலகும் தழைக்க!

# ஹரித்துவார குருகுலம்.

ரா. நாராயணசுவாமி, ஆசிரியர், "பாரதி."

பண்டைக்காலத்தில் நமது தாய் நாடாம் பாரதகண்டத்தில் குருகுலத்தில் வெகு சிறப்புடன் மாணவர்கள் கல்வி போதிக்கப்பட்டு வந்தார்கள். அந்நாட்களில் நான்கு ஆச்சிரமங்களின்படி நடந்துவந்தார்கள். இப்பொழுது இந்த அநுஷ்டானங்கள் பெயரளவில்மட்டு மிருக்கின்றன. ஆற்றோரங்களிலோ, மலைச் சோலைகளிலோ, மலை அடிவாரங்களிலோ, அல்லது சூரியோதய அஸ்தமன நேரங்களில் அழகிய மனோரம்மியக் காட்சிகளை அநுபவிக்கக்கூடிய ஏகாந்த இடங்களிலோ, மரம், செடி, கொடி, இலைகளால் வீடுகள் அமைத்து ஆச்சிரமம்

ஏற்படுத்துவார்கள். தன் காரியத்தை ஒவ்வொருவரும் ஒரு வழியில் உழைத்து முடிப்பதற்கு ஆச்சிரமம் என்று பெயர். ஆச்சிரமம் என்பதற்கு இளைப்பாறுமிடம், சங்கம், கூட்டம், முனிவர்கள் வசிக்குமிடம் என்று அர்த்தம். குருக்களும் சிஷ்யர்களாகிய மாணவர்களும் பரஸ்பர அன்புடன் சேர்ந்து ஒரே ஒரு குடும்பம்போன்று வாழ்ந்து வந்ததினால் அதற்கு குருகுலம் என்று பெயருண்டாகியது. முற்காலத்தில் நமது இந்தியாவின் பிரகாசத்திற்குக் குருகுலங்களே முழு முதற் காரணமென்று தைரியமாய்க் கூறலாம். நமது நாடெங்கும் குருகுலங்கள் பரவியிருந்ததால் மக்கள் இங்கு சந்தோஷமாய்க் கல்வி கற்று வந்தார்கள்; மாணவர்களும் குருபக்தி கொண்டு ஒழுகினார்கள்; மாணவர்களை ஆச்சார்யர்களும் புத்திரர்கள் போல் நேசித்து வந்தார்கள். தற்காலக் கல்விச்சாலைகள் போன்று படிப்புக்காகக் கூலி வாங்குவதும், ஊணுக்காகவும் உறைவிடத்திற்காகவும் கட்டணங்கள் பெறுவதும் குருகுலங்களில் இடையவே கிடையாது. மாணவர்களுக்குப் பிரியமுடன் கல்வி போதித்து அவர்களைச் சகல கலா வல்லவர்களாக்குவதே குருநாதரின் முதற் கடமையாகும். குருகுலங்களை நாட்டு மக்களும், மன்னர்களும் ஆதரித்துவந்ததால் உணவு விஷயத்தைப்பற்றிக் கவலையே கிடையாது. ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் தங்கள் குமாரர்களைக் குருகுலங்களுக்கு அனுப்பி 24 வயதுவரை அங்கு தங்கச் செய்து சன்மார்க்கர்களாக்குவிப்பது அக்காலத்தின் நியதி. ஜாதி பேதமற்று அந்தஸ்து பேதமற்று மாணவர்கள் அங்கு வாழ்ந்ததைப் பற்றிப் பற்பல கதைகளிருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பயிலும் பிரமாண்டமான குருகுலங்கள் அக் காலத்தில் இருந்தன. அந்த அமைதியான, அழகான ஆத்ம ஞான மிக்க அரிய காலம் சென்றுவிட்டது. தற்காலக் கல்வி நிலையங்கள் சிறைக்கூடங்களே. தற்கால ஆசிரியர்கள் காவற்காரர்களே. எங்கோ சிற்சில நல்லாசிரியர்க ளிருப்பினும் அவர்களுக்கு நாட்டில் ஆதரவு கிடையாது. நமது நாட்டின் எல்லா வகைச் சீர்கேட்டிற்கும் தற்காலக் கல்வியும் ஒரு முக்கிய காரணம்.

சென்ற காலத்தையும் மத்திய காலத்தையும் விட்டுவிட்டு நிகழ் காலத்தை மட்டும் கவனிப்போமாக. இப்பொழுது எங்கோ 1, 2, 3 குருகுலங்கள் காலத்திற்கேற்றவாறு அமைந்திருக்கின்றன. வங்காள ராஜதானியில் கல்கத்தாவிலிருந்து 99 மைல் தூரமுள்ள போல்பூர் என்ற இடத்திற்குச் சமீபத்தில் அகில உலக சமாதானத்திற்காகவும், இந்தியாவின் ஆத்ம ஞான ஒளியை உலகமெங்கும் பரப்புதற்காகவும் கீழ்நாட்டுக் கலைக்ஞானங்களை மேல்நாட்டார் அறிவதற்காகவும் மேல்நாட்டுக் கலைகளைக் கீழ்நாட்டார் அறிவதற்காகவும் கலை ஆராய்ச்சிகளின் மூலம் ஒரு நாட்டார் இனியொரு



நாட்டாரை நேசிப்பதற்காகவும் ஆசியாக் கண்டத்தின் ஆஸ்தானக் கவி என்று பெயர்பெற்ற பேரறிஞர் ரவீந்திரநாத் தாகூர் அவர்களால் சமாதான வாசஸ்தல மென்று பொருள்படும் சாந்திநிகேதனத்தை உலகறியும். இக்கலாசாலையில் கல்விப் பயிற்சி பெறுவது ஒரு பெரும் பாக்கியமாகும். இந்த ஸ்தாபனத்தைப்பற்றி விரைவில் எழுத எமக்கு அளவற்ற ஆவல். "பாரதி" சிறிய பத்திரிகை. என் செய்வோம்! குஜராத்திலே ஆமதாபாத் நகரத்திலே சபர்மதி நதியோரத்திலே சத்தியாக்கிரஹ ஆச்சிரமமிருக்கிறது. இதனை ஸ்தாபித்தவர் மஹாத்மா காந்தி அடிகள். அஹிம்ஸா தர்மத்தைப் பயிலவும், பகைவரையும் சகோதரராகக் கருதி நேசிக்கவும், தன்னடக்கம் பெறவும், நமது நாட்டாரின் அடிமைத்தனச் சிந்தையை அகற்றவும், சுயமுயற்சியாலேயே நமது தேசத்தார்கள் சுயராஜ்யம் அடைவதற்கான காரியங்களைச் செய்யவும் இந்த ஆச்சிரமம் ஏற்பட்டிருக்கிறது. சுவாமி தயானந்தரது அருமைச் சீடரான மஹாத்மா முன்ஷிராம் என்று பெயர்கொண்ட சுவாமி சிரத்தானந்தரால் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னால் ஹிமயமலை அடிவாரத்தில் கங்காநதிக் கரையில் ஹரித்துவாரத்திற்கு 5 மைல் தூரத்திலுள்ள ஒரு கானகத்தில் நிற்சப்தமான இடத்தில் ஒரு குருகுலம் நிறுவப்பட்டிருக்கிறது. இதன் நோக்க மென்னவெனில் பண்டைக்கால பிர்மாச்சாரியத்தை வளர்க்கவும், மறுபடியும் நமது பூர்வீக நாகரீகத்தை உண்டாக்கவும், ஒழுங்கான சன்மார்க்க வேத போதனையால் பண்டைக்கால பரத கண்டத்தின் பொக்கிஷமாகிய ஆத்ம ஞானம் முதலிய கலைகளை வளர்க்கவுமேயாம்.

## ஹரித்துவார குருகுலம்

லாகூரிலிருக்கும் தயானந்த ஆங்கிலோ வேதிக் காலேஜ் (D. A. V. College) பஞ்சாபிலே ஒரு சிறந்த ஸ்தாபனம். இருப்பினும் அதன் நிர்வாகிகள் அக்கலாசாலையின் பூர்வ கொள்கைகளை அனுசரிக்காதது கண்டு 1902-ம் வருஷத்தில் சுவாமி சிரத்தானந்தரால் ஹரித்துவாரத்தில் ஏற்படுத்தப்பெற்ற இக் குருகுலம் இன்று எவ்வளவோ விருத்தியாகி விளங்குகிறது.

வேதங்களையும், சமஸ்கிருத பாஷையையும் அதன் இலக்கியத்தையும், இங்கிலீஷையும் அதன் இலக்கியத்தையும், ஹிந்தி பாஷையையும், இங்கிலீஷையும் அதன் இலக்கியத்தையும், ஹிந்தி பாஷையின் மூலமாகத் தற்காலப் படிப்புகளையும், பிர்மாச்சாரிகளது கடமைகளையும், பிராணாயாமம், தேகப் பயிற்சி முதலிய அப்பியாசங்களையும், சில வழிகளில் தொழிற் கல்வியையும், உத்தியோகக் கல்வியையும் புகட்டுவதே இக்குருகுலத்தின் திட்டங்களாகும்.

ஒழுக்கமே கல்வியின் உயிராயிருக்கவேண்டும். "மனிதர்களை உண்டாக்குகிற கல்வியே நமக்கு வேண்டும்" என்று சுவாமி விவேகானந்தர் கூறியிருக்கிறார். தினந்தோறும் வேற்றுமை யின்றிக் கலந்து உறவாடுவதால், மாணவர்கள் ஆசிரியர்களின் அருங் குணங்களைக் கண்டறிந்து பழகி, ஆசிரியர்களைப்போலவே ஆகிவிடுகிறார்கள். மாணவர்களோடு சேர்ந்து ஒரு குடும்பம்போன்று வாழ்வதால் ஆசிரியர்கள் மாணவர்களின் குற்றங் குறைகளைத் தெரிந்து அவைகளைத் திருத்திச் சரிசெய்து மாணவர்களை அபிவிருத்தி செய்கிறார்கள்.

## இக்கலாசாலை மாணவர்களின் சிறப்பு

இக்கலாசாலையிலிருந்து படித்து வெளியேறிய அனேக மாணவர்கள் பற்பல நல்ல விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்து எழுதியிருக்கிறார்கள். இக் குருகுல ஆசிரிய கூட்டத்தைச் சேர்ந்த பண்டித சதாவலிகார் என்னும் பிரசித்தி பெற்ற பண்டிதர் வேதங்களைப் பற்றி எழுதியிருக்கிறார். குருகுலத்தைச் சேர்ந்த பண்டித இந்திர வித்தியாபதி உபநிடதத்தைப்பற்றி உயரிய புஸ்தகமொன்று வெளியிட்டிருக்கிறார். பண்டித விஸ்வநாத வித்யாலங்கார் நல்ல நல்ல புஸ்தகங்களை எழுதியிருக்கிறார். பண்டித சந்திரமணி ஒரு மேலான அகராதியைத் தொகுத்திருக்கிறார். டாக்டர் பிராணநாத் வித்யாலங்கார் தத்துவ சாஸ்திரிப் பட்டம் (Ph.D ) பெற்று லண்டன் இந்தியா ஆபீஸின் புஸ்தகசாலையிலிருக்கிறார். சட்ட வித்வான் (L.L.D.) என்ற பட்டமும் பெற்றிருக்கிறார். உதவித் தலைவர் பண்டித தேவசர்மா என்பாரும் சில மேலான நூற்கள் வரைந்திருக்கிறார். பண்டித தர்மதத்த சித்தாந்தலங்கார் சில நூற்களை வெளியிட்டிருக்கிறார். பண்டித நந்த் கிஸ்சோரி வித்யாலங்காரும் தலைமை ஆசிரியர் ராம தேவ நும் இன்னும் அநேகம் குருகுலப் பட்டதாரிகளும் பல துறைகளில் ஆராய்ச்சி செய்து எழுதியிருக்கிறார்கள். குருகுலத்தின் பட்டதாரிகள் ஹிந்தி பாஷையின் அபிவிருத்திக்காக உழைக்கிறது மட்டுமின்றி, அவர்களில் எழுவரில் ஒருவர் சிறந்த நூலாசிரியராகவும் விளங்குகிறார். குருகுலம் அநேகம் பிரசங்கிகளையும் உண்டாக்கியிருக்கிறது. தென்னாப்பிரிக்கா, பிஜி, மலேயா முதலிய அயல்நாடுகளில் நம்மவர்களுக்காக இப்பட்டதாரிகளில் சிலர் தொண்டாற்றிக்கொண்டிருப்பது போற்றத்தக்கது. ஒத்துழையாமை வேகமாயிருந்த காலத்தில் மற்றக் கலாசாலை மாணவர்களெல்லாம் பாரத மாதாவின் அன்பான அவசியமான அழைப்புக்குச் செவிடாயும் ஊமையாயு மிருந்தபொழுது, குருகுலத்திலிருந்து அநேக வித்தியார்த்திகள் வெளியேறிச் சிறைக்கும் சென்றார்கள். அதன் அதிபர் சுவாமி சிரத்தானந்தரும் தேசிய இயக்கத்திற்காகப் பெரிதும் பாடுபட்டார். ஜாதிகளை விட்டு மாறிக்



கலப்பு மணம் செய்துகொண்டவர்களில் பலரிருக்கிறார்கள். சமூக சீர்திருத்தங்களுக்காக இக்குருகுலத்திலிருந்து புறப்பட்டவர்கள் எவ்வளவோ அதிகமாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் மூலமாய்ப் பலவிடங்களில் சிறிய குருகுலங்கள் ஏற்பட்டிருக்கின்றன—ஏற்படுகின்றன. கல்வி, மதப் பிரச்சாரம், தீண்டாமை விலக்கு, ஆச்சார சீர்திருத்தங்கள், பத்திரிகை நடத்துதல், தேசியத் தொண்டு முதலியவைகளில் இவர்கள் பிரவேசித்திருக்கிறார்கள், பிரவேசிக்கிறார்கள். எப்படியேனும் குறைந்தது ஒருவழியில் தாய் நாட்டுத் தொண்டிற்காகத் தங்களுடைய உடல், உடமை, உயிர் மூன்றையும் அர்ப்பணம் செய்யும் இக்குருகுலத்தின் பட்டதாரிகளின் தொகை 100-க்கு 70 பேர் என்றால், இக்குருகுலத்தின் பெருமையே பெருமை. உலாவச் சென்ற பிர்மாச்சாரிகள் தங்கள் கைகளிலிருந்த ஹாக்கிக் கம்புகளால் ஒரு சிறு புலியை–சிறுத்தையை அடித்துக் கொன்றார்களென்றால், மாணவர்களின் தைரியத்தைப் பாருங்கள்! இடத்தைக் கவனியுங்கள்! பலத்தை நோக்குங்கள்!

## இடம்

ஹிமாலய மலை அடிவாரத்தில் இந்துக்களுக்குப் புண்ணிய க்ஷேத்திரமாகிய ஹரித்துவாரத்திற்கு 5 மைலுக்கு அப்பால் காங்கிரி என்ற கிராமத்தருகிற் புண்ணிய நதியென்று இந்துக்களால் கொண்டாடப்பெறும் கங்கா நதியின் இடதுபக்கத்துக் கரையில் ஒரு மைதானத்தில் குருகுலத்தின் கட்டிடங்கள் அமைந்திருக்கின்றன. பரோபகாரத்தையே ஆபரணமாகக் கொண்ட முன்ஷி அமான் சிங் என்ற தர்மப் பிரபு 30 ஆயிரம் ரூ விலையுள்ள கங்கேரி கிராமத்தையும் மற்றும் தனது ஆஸ்தி முற்றிலும் குருகுலத்திற்கு இனமாக அளித்துவிட்டார். இந்த இடத்தின் விஸ்தீரணம் சுமார் 700 ஏக்கர் என்று கேள்வி. ஷை இனம் செய்த கொடையாளரும் அங்கேயே ஒரு குடிசையில் வசிக்கிறாராம். சீதோஷ்ண நிலையோ அங்கு நன்றாயிருக்கிறது. அநேக இயற்கை வளங்களும், வனப்புகளும், இயற்கை விநோதங்களும் கொண்ட இவ்விடத்தில் இயற்கை அன்னை சதா தாண்டவமாடிக்கொண்டிருக்கிறாள் என்று சொல்லவும் வேண்டுமோ? அவ்விநோதக் காட்சிகளோடும் அவ்வியற்கை மாட்சிகளோடும் கலந்து இன்புற்று வாழும் தபோதனர்கள் வசிக்கும் இடம்போன்ற இக் குருகுலம் வித்தியார்த்திகளுக்குச் சர்வ கலாசாலையாகவும் தவக்கூடமாகவும் அமைந்திருக்கிறது. கங்கா நதி தீரத்திலிருக்கிற விவரிக்க முடியாத இயற்கை அழகுகளும், அலங்காரங்களும், கங்கையிலிருந்து வீசும் அமிர்தத்திற்கொப்பான தூய மெல்லிய இளங்காற்றும் மாணவர்களின் தேகத்திற்குச் சுகத்தையும், வன்மையையும் கொடுத்து, மனதிற்கு அமைதியையும், நல்லெண்ணங்களையும்,


ஏகாக்ர சித்தத்தையும் உண்டாக்கித் தியானத்தில் ஆழ்ந்துபோகும்படி செய்யும். நமது பண்டைப் பெரியோர்கள் ஹிமாசலத்திலே தங்கள் வாழ்வின் கடைசிப் பாகத்தைக் கழிக்க விரும்பினார்கள். 1924-ம் வருஷத்தில் ஏற்பட்ட கங்கையின் பிரவாகத்தால் பல கட்டிடங்கள் அழிந்தன. குருகுலத்திற்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. மறுபடியும் குருகுலம் புதிய பிறப்புப் பிறந்திருக்கிறது. இப்பொழுது அங்கு நல்ல இடங்களில் நல்ல நல்ல கட்டிடங்கள் கட்டியிருக்கிறார்கள். 1927-ம் வருஷத்தில் குருகுலத்தின் வெள்ளி விழா விமரிசையுடன் கொண்டாடப்பட்டது.

## வரவு செலவு

பாஞ்சாலத்தில் இக்குருகுலத்திற்கு நல்ல செல்வாக்கிருக்கிறது. பஞ்சாப் ஆரியப் பிரதிநிதி சபைக்கு காங்கேரி குருகுலம் முதுகெலும்பு போன்றிருக்கிறது. ஆண்டுதோறும் அநேக செல்வச் சீமான்கள் கொடைகள் கொடுத்து உதவுகிறார்கள். ஸ்ரீஜக் சேத் ஜம்னாலால் பஜாஜ் அவர்கள் இதற்கு 30 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார். சேத் ரகுமால் என்பவர் ஒரு லட்சம் ரூபாய் பள்ளிக்கூட அபிவிருத்திக்காகக் கொடுத்திருக்கிறார். மாணவர்கள் கொடுக்கும் கட்டணங்களின் மூலமுமாகவும் வரவு வருகிறது. ஆண்டுதோறும் குருகுலத்திற்கு $1\frac{3}{4}$ லட்சம் ரூபாய் செலவு ஏற்படுகிறது.

## போதனை

இந்தியாவில் உயர்தரப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலப் பாஷையின் மூலமாகவே போதிக்கிறார்கள். அயல் பாஷையின் மூலம் போதிப்பவைகளை மாணவர்கள் செவ்வையாய் அறிந்துகொள்ளமுடியவில்லை. அவர்கள் நினைப்புகள் நன்கு வளர்ச்சியடைகிறதில்லை. ஒரு விஷயத்தை மேலாகவே அறிகிறார்கள். படித்தவர்களுக்கும் இங்கிலீஷ் படித்தவர்களுக்கும் மத்தியில் பெரிய வித்தியாசமிருக்கிறது. ரசாயன சாஸ்திரம், பூகோள சாஸ்திரம் விவசாயம், வைத்தியம், தேச சரித்திரம், தர்க்கம், சித்திரம், வேத சாஸ்திரம், மனோ சாஸ்திரம், உயர் கணிதம், தேச சிக்கன சாஸ்திரம், மேல்நாட்டுத் தத்துவ சாஸ்திரம் முதலியவைகளும் ஹிந்தி பாஷையின் மூலமாகவே போதிக்கப்படுகிறது. ஆரியப் பாஷையாகிய ஹிந்தியில் போதிப்பதை மாணவர்கள் இலகுவாய் அறிவதற்கு ஏதுவாயிருக்கிறது. பற்பல பாடப் புஸ்தகங்கள் குருகுலத்திலேயே தயாரிக்கப்படுகின்றன. ஆங்கிலம் ஆறாவது வகுப்பிலிருந்து ஆரம்பிக்கப்படுகிறது. இங்கிலீஷை இங்கு இரண்டாவது பாஷையாக வைத்திருக்கிறார்கள்.






ஸ்ரீ ஆச்சார்ய ராம் தேவாஜி (தலைமை ஆசிரியர்.)

குருகுல கங்கேஸ்ரி புஷ்கரணி.





குருகுல மாணவர்கள் ஹாக்கி என்னும் விளையாட்டுக் குருந் தடியால்
புலியை அடித்துக் கொன்றுவிட்ட காக்ஷி.



குருகுல கல்லூரி புத்தகசாலை.




குருகுல கல்லூரி சைவ கலாசாலையின் பட்டதாரிகளான
பண்டித இந்திரரும் பண்டித ஹரிச்சந்திரரும்.




சில குருகுலப் பட்டதாரிகளுக்கு இடையில் ஸ்ரீ சுவாமி சித்பவானந்தா அவர்கள் வீற்றிருத்தல்.



புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பெற்ற மாணவர்கள்.



ஒருகுலப் பேராசிரியர்கள்.



தாமஸ் ஆல்வா எடிசன்



திருமலைச்சக்கு கௌடர்



## கலாசாலைகளும் பள்ளிக்கூடங்களும்.

முதலாவது இக் குருகுலம் 4 வகுப்புக்களோடும் 53 மாணவர்களோடும் ஆரம்பிக்கப் பெற்றது. 5-வது வருடக் கடைசியில் 10 வகுப்புகள் உண்டாயின. காலேஜில் 4 வகுப்புகளும் பள்ளியில் 10 வகுப்புகளுமாக இப்பொழுது 14 வகுப்புகளிருக்கின்றன.

குருகுலத்தை ஒரு சரியான சர்வகலாசாலை என்றே சொல்லல் வேண்டும். வேதசாஸ்திரக் கல்லூரி, கலா கல்லூரி, ஆயுர்வேத மஹா வித்தியாலயம் ஆகிய மூன்று கல்லூரிகளிருக்கின்றன. ஒவ்வொரு கல்லூரியும் ஒரு தலைவரால் கவனிக்கப்படுகிறது. வைத்தியக் கல்லூரியில் ஆயுர்வேத வைத்தியம் போதிப்பதோடு, மேல் நாட்டு வைத்திய சாஸ்திரமும் போதிக்கிறார்கள். மேல் நாட்டு, கீழ்நாட்டு வைத்திய சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்று மிக்கப் புகழ் வாய்ந்த கல்கத்தா கவிராஜ் கணநாதசேன் அவர்களின் திட்டத்தின்படி இது நடைபெறுகிறது. வேதசாஸ்திரக் கல்லூரி சமஸ்கிருதத்தில் ஆழ்ந்து போதிப்பதோடு பற்பல மதங்களின் தாரதம்மியங்களையும் கற்பிக்கிறது. இப்பொழுது வைத்தியக் கல்லூரிக்குத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன், B. Sc., M. B., B. S., கலாக் கல்லூரிக்குத் தலைவர் வாகீஸ்வர வித்யாலங்கார்; வேதசாஸ்திரக் கல்லூரித் தலைவர் தேவசர்மா. குருகுல முழுவதற்கும் தலைவர் ஆச்சார்ய P. ராமதேவர்.

## நிர்வாகம்

சிந்து, பலுச்சிஸ்தானம், பஞ்சாப் முதலிய இடங்களிலுள்ள ஆர்யசமாஜிகளின் பிரதிநிதி சபையான ஆர்யப் பிரதிநிதி சபையின் நிர்வாகக் கூட்டத்தாரால் குருகுலம் நிர்வகிக்கப்படுகிறது. இச் சபையின் நிர்வாக சபையார் குருகுல நிர்வாக சபையின்படி குருகுலத்தை நிர்வகிப்பதற்கும் மேல் பார்ப்பதற்கும் ஒரு கவர்னரை ஏற்படுத்துகிறார்கள். கல்வி சம்பந்தமாக விஷயங்கள் ஆச்சார்யாரால் கவனிக்கப்படுகிறது.

## மாணவர்களைச் சேர்ப்பது

ஆச்சார்யாரால் தெரிந்தெடுக்கப்பட்ட பிறகு வித்தியார்த்திகள் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். எல்லா பிர்மாச்சாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் முன்னால் வைத்துப் புதிய மாணவர்களைக் குருகுலத்தில் சேர்க்கும் சடங்கு செய்யப்படுகிறது.

## தினசரிக் கால அட்டவணை

காலை 4 மணிக்கு எழுந்திருக்க வேண்டும். மிகவும் சிறுவர்கள் 5 மணிக்கு எழுந்திருப்பார்கள். எழுந்திருந்தவுடன் எல்லாரும் காட்டிற்குப் போய்ச் சீக்கிரத்தில் திரும்புவார்கள். அரை மணி நேரம் டம்பெல்ஸ் முதலிய தேகாப்பியாசங்களைச் செய்கிறார்கள். பெரியவர்கள் சிறிது தூரம் ஓடுகிறார்கள். 5 முதல் 5½ மணி வரையிலும் கங்கா நதியில் அல்லது குளிப்பு அறையில் ஸ்நானம் செய்வார்கள். அடுத்தது காலைப் பூசை; சந்தியாவந்தனத்தையும், பிரார்த்தனையையும் ஒவ்வொருவரும் மௌனமாகவும், அக்னிஹோத்திரத்தைக் கூட்டங்களுடனும் செய்ய வேண்டும். எல்லாம் நடைபெற்ற பிறகு சிறிது சிற்றுண்டி கொடுக்கப்படுகிறது. 8-45 மணிக்கு காலை ஆகாரம், ஆகாரம் சாதாரணமாயிருந்தபோதிலும் சத்தானது. 9-45 மணிக்குக் குருகுலத்தில் வகுப்புகள் ஆரம்பமாகிறது. அரை மணி நேரம் அவகாசம்; அப்பொழுது பால் அல்லது ஏதோ சிற்றுண்டி கொடுக்கப்படுகிறது. 4-15 மணிக்குப் பள்ளி முடிவாகிறது. 4-15 மணியிலிருந்து 4-45 மணிவரையிலும் மாணவர்கள் அவர்கள் இஷ்டம்போல் இருக்கலாம். 4-45 மணியிலிருந்து 5-45 மணிவரை காற் பந்து, கிரிக்கெட், ஹாக்கி இன்னும் இந்திய விளையாட்டுகளும் விளையாடுகிறார்கள். 5-30 முதல் 6 மணிவரை மறுபடியும் ஆற்றில் குளிப்பு; 6 மணி முதல் 6-30 மணிவரை சந்தியாவந்தனமும் அக்னிஹோத்திரமும் காலையில் போற் செய்யப்படுகிறது. கொஞ்ச நேரத்திற்குப் பிறகு சாப்பாடு; ஒரு மணி நேரம் படிப்பு; 9 மணிக்குப் படுக்கை. கல்லூரி மாணவர்கள் மட்டும் இரவு 10 மணிவரை வாசிக்கலாம்.

வெயிற் காலத்தில் அட்டவணை மாறும். காலை 6-15 மணி முதல் 10-50 மணிவரை வகுப்பு. பிறகு மத்தியானச் சாப்பாடு; அப்பால் ஓய்வு. 2-45 மணி முதல் 5-15 மணி வரையில் வகுப்பு. அதிக உஷ்ணகாலமாயிருந்தால், இரண்டொரு மணி வேலை குறைகிறது.

### சன்மார்க்கப் பயிற்சி

இக் கலாசாலையில் பயிலும் மாணவர்கள் ஒழுக்கத்தை உயிரினும் சிறந்ததாகக் கருதி வாழ்கிறார்கள். தன் மதிப்பு, சுயமுயற்சி, கௌரவம், பூததயை, சந்தோஷம், பிரார்த்தனை, பக்தி, தேசாபிமானம், பாஷாபிமானம், தொண்டில் ஆசை, அஞ்சாமை, சகிப்புத்தன்மை, அன்பு முதலிய அநேக அரும் நற்குணங்கள் மாணவர்களுக்கு உண்டாகுமாறு இக் குருகுலம் உதவி செய்கிறது.

### நானாவித சௌகரியங்கள்

குருகுலத்தில் பழம், காய் கறித் தோட்டங்களும், தாவர ஆராய்ச்சித் தோட்டமும், பூந்தோட்டமும் உண்டு. நல்ல புஸ்தகசாலையும், வாசகசாலையும், வைத்தியசாலையும் இருக்கின்றன. சாஸ்திரீய ஆராய்ச்சிசாலைகளும் அமைந்திருக்கின்றன. மாணவ சங்கங்களும், ஆசிரிய சங்கங்களும், தர்க்க சபைகளும் இருக்கின்றன. குருகுலத்திற்காகப் பத்திரிகையும் நடத்துகிறார்கள். குருகுலத்திலிருந்து பிரசுரங்களும் செய்கிறார்கள். இன்னும் இங்கு எத்தனையோ வசதிகளை உண்டாக்கியிருக்கிறார்கள்.



### பெரியாரின் அபிப்பிராயங்கள்

மகாத்மா காந்தி அடிகள், பாபு அரவிந்தகோஷ், சர். அஷூடாஸ் முகர்ஜி, கனந்தங்கிய ஸ்ரீநிவாச சாஸ்திரியார், மேஜர் பாசு, சர். கோர், பாபு பகவன்தாஸ், கவீந்திரர் ரவீந்திரநாத தாகூர், பண்டித மதன்மோஹன மாளவியா, பண்டித பிஷன் நாராயணன் தார். கனம் பாபு கங்கா பிரசாத் வர்மா முதலிய இன்னும் அநேகம் பெரியார்களும் அறிஞர்களும் குருகுலத்திற்கு வந்து பார்த்து, குருகுலத்தை மெச்சி மெச்சிப் போற்றி போற்றிப் போயிருக்கிறார்கள். இவர்கள்மட்டுமா? இப்பொழுது பிரிட்டிஷ் சர்க்காரின் முதன் மந்திரியாயிருக்கும் மிஸ்டர் மாக்டொனால்ட், மே. த. கவர்னர் ஜெனரல் லார்ட் செம்ஸ்போர்ட், அவருடைய மனைவியார், ஐக்கிய மாகாண கவர்னர் சர். ஜேம்ஸ் மெஸ்டன், இங்கிலாந்தின் சிறந்த கல்விமான் சர். சாட்லர், லார்டு ஐலிங்டன், சர். பிரிடரிக் மாரிசன், பாரிஸ் சர்வ கலாசாலை ஆசிரியர் பால், லண்டன் சிக்கனக் கல்லூரித் தலைவர் சிட்னிவெப் முதலிய இன்னும் எத்தனையோ அயல் நாட்டு அறிஞர்கள் இதனை வெகுவாகச் சிலாகித்திருக்கிறார்கள். மிஸ்டர் மைரன் பெல்ப்ஸ் என்ற அமெரிக்க மேதாவி ஒருவர் குருகுலத்தில் வந்து 2மீ தங்கிக் குருகுலத்தை வானளவு தூக்கிச் சிலாகித்துப் பத்திரிகைகளுக்கும் கட்டுரைகள் எழுதியிருப்பதை வாசித்தால், அடிமைக் கல்வி கற்கும் மாணவர்களும் அதைப் போதிக்கும் ஆசிரியர்களும் உடனே தலைகுனிய வேண்டும்.

இந்தியாவின் பண்டை உயரிய நாகரீகத்தை உலகிற்கு இன்று காட்டிக்கொண்டிருக்கும் உயிருள்ள சின்னங்களில் இக்குருகுலமும் ஒன்று. இம்மாதிரியான குருகுலங்கள் நமது நாட்டில் கணக்கற்று உண்டாக வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம். இக் குருகுலம் வாழ்க! இதன் ஆசிரியர்களும் மாணவர்களும் வாழ்க வாழ்க!!

குருகுலத்தைப் பற்றி அதிகம் எழுத வேண்டியதிருக்கிறது. "பாரதி"யில் இடம் அதிகமாயில்லை. அடுத்த வருடம் ஒரு கட்டுரை இதைப்பற்றி எழுதுவோம். சுருக்கத்திற்காக மன்னிக்க வேண்டுகிறோம்.

# ஆசிரியக் குறிப்புகள்.

## அறிக்கை

ஒரு கிராமத்திலிருந்து "பாரதி"யை வெளியிடுவதால் எதிர்பாராத தாமதம் உண்டாகிறது. இப்பொழுது நவம்பர்—டிசம்பர், மீ'ங்களுக்குச் சேர்ந்தே வருகிறது. விஷயங்களும் வியாசங்களும் "பாரதி"க்கு மிக மிக அதிகமாய் வருகின்றன. "பாரதி" ஒரு சிறிய மாதப் பத்திரிகை யாகையால், எல்லா வியாசங்களையும் பல படங்களுடன் பிரசுரிக்க முடியவில்லை. விரைவில் எல்லாவித வசதிகளும் உண்டாக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். "கம்பரும் காந்தியும்" என்ற உயரிய கட்டுரையும் ஒரு சிறு கதையும் கம்போஸ் செய்யப்பட்டு இடமிடமின்மையால் எடுத்துவிட்டோம். அதிக சந்தாவில் உயர்தரத்தில் இதை நடத்த எமக்கு இஷ்டம். பணக் கஷ்டமான இக் காலத்தில் "பாரதி"யைப் பெரிதாக நடத்த முடியாதென்று அறிவித்துக்கொள்கிறோம்.

## சந்தாதாரர்களுக்கு

இந்த வருடம் எம்மை ஆதரித்த சந்தாதாரர்களுக்கு வந்தனங்கள் செலுத்துகிறோம். அடுதத வருட சந்தாவிற்காக முன் கூடியே எல்லா சந்தாதாரர்களும் சந்தாக்களை 1932-ம்வருப ஜனவரிமீ' 15உக்குள் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். வி. பி. பி. யில் அனுப்புவதாயிருந்தால் 6 அணு அனுவசியமாகச் செலவாகிறது. இந்த 6 அணு எமக்குச் சேருவதில்லை; தபால் இலாகாவிற்குப் போகிறது. அயல் நாட்டிலிருக்கும் சந்தாதாரர்கள் அனைவரும் தங்கள் சந்தாக்களை விரைவில் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். "பாரதி"யை 1932-ம் வருஷத்திற்கு வேண்டாதவர்கள் ஜனவரிமீ' 10-ம் தேதிக்குள் நமது ஆபீஸுக்குத் தெரிவித்துவிடுமாறு கேட்டுக்கொள்கிறோம். இல்லாவிடில் வி.பி.பி.-யில் "பாரதி" சந்தாதாரர்களுக்கு அனுப்பப்படும். ஒவ்வொரு சந்தாதாரரும் ஒவ்வொரு புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுத்து "பாரதி"யை வளர்க்குமாறு வேண்டுகிறோம்.

## "பாரதி"யின் 'ஆபீஸ் மாற்றம்

பற்பல வசதிகளை உத்தேசித்து "பாரதி"யின் காரியாலயத்தை மதுரைக்கு மாற்றப்போகிறோம். ஜனவரி முதல் "பாரதி" மதுரையிலிருந்து காலாகாலத்தில் வெளிவருமென நம்புகிறோம். அநேக சீர்திருத்தங்கள் இனிமேல் "பாரதி"யில் உண்டாகும். சந்தாத் தொகையை உத்தமபாளையம் விலாசத்திற்கே அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## வட்டமேஜை மகாநாடு

லண்டனில் கூடிய வட்டமேஜை மகா நாட்டால் இந்தியாவுக்கு சுயராஜ்யம் கிடைத்துவிடாதென்று நாம் முன்னரே 'பாரதி'யில் குறிப்பிட்டோம். மகாத்மா காந்தி அவர்கள் இங்கிலாந்திற்குச் சென்றதால், இந்தியாவின் நிலைமையை உலகத்தார்கள் நன்கு அறியச் சரியான சந்தர்ப்பம் ஏற்பட்டது. உலகத்தின் அனுதாபமும் இந்தியாவிற்குக் கிடைத்தது. சட்ட மறுப்பு இயக்கத்திற்கு இந்தியாவில் தகுந்த ஆதரவும் உண்டாகியிருக்கிறது. "எண்ணெய்ச் செலவு ஒழிய, பிள்ளை பிழைக்க வழியைக் காணோம்" என்ற பழமொழிபோல, 3 வட்டமேஜை மகாநாட்டிற்கும் 21 லட்சம் ரூபாய் இந்தியாவிற்குச் செலவைத் தவிர்த்து வேறென்ன நன்மை ஏற்பட்டிருக்கிறது. வட்ட மேஜையோ சதுர மேஜையோ எப்படியும் போகட்டும். பற்பல கமிட்டிகளும் அவைகளைப் பெற்ற வட்டமேஜை மகாநாடும் இனி ஒன்றும் செய்வதற்கில்லை. அதனுடைய ஆவேசம் அத்தனையும் அடங்கிவிட்டது.

## இந்தியா தயாராயிருக்கவேண்டும்

1922-ம் ஆண்டில் பார்டோலியில் ஆரம்பிக்கப்பட்ட சட்ட மறுப்பு இயக்கம் திடீரென்று நிறுத்தப்பட்டபோதிலும், 10 வருஷ காலமாகச் சரியான ஓய்வு பெற்று, நல்லுரமடைந்து தீவிர சக்தியுடன் 1931-ம் வருஷத்தில் நன்கு வேலைசெய்து, இந்தியச் சர்க்காரை ஸ்தம்பிக்கும்படி செய்து சிறந்த வெற்றியைப் பெற்றிருக்கிறது. இந்தியாவுக்கு அன்பை ஆயுதமாகக் கொண்ட சாத்விகச் சட்ட மறுப்பே விடுதலை அளிக்கப்போகிறது. மகாத்மா இங்கிலாந்து சென்றார்; வட்டமேஜை மகாநாட்டில் பேசினார்; வந்தார். இனிமேல் நாம் நமது கடமையைச் செய்ய வேண்டும். அஞ்சாமையைக் கைக்கொண்டு தியாகத்தைக் கடைப்பிடித்து சாத்விகமாய் முன்னணியில் நிற்கவேண்டிய காலம் வெகு வேகமாய் ஓடிக்கொண்டு வருகிறது. இச் சுதந்தரப் போராட்டத்தில் இந்தியர்கள் அதிகமாய் தியாகம் செய்ய முன் வரல்வேண்டும். மத வித்தியாசங்களையும் ஜாதி வித்தியாசங்களையும் நினைத்துக்கொண்டு பிரிவடையாது, இந்தியர்கள் அனைவரும் சகோதரர்களென்ற மேலான நோக்கத்துடன் ஒற்றுமையுடன் வேலை செய்தால், இந்தியா தனது அடிமைத்தனத்திலிருந்து உடனே விடுதலை அடைந்துவிடும். ஒரு வேலையும் செய்யாது இருந்துகொண்டு வேலை செய்பவர்மீது குற்றங்களைச் சுமத்துவதால் யாது பயன்? தலைவர்கள் செய்வார்களென்று எண்ணிக்கொண்

டிருக்காது, சொல்லிக்கொண்டிருக்காது ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கடமையைத் தாய்நாட்டிற்காகச் செய்யவேண்டிய காலம் இதுவே. சென்ற முறை தேசீயத்தில் ஈடுபட்டோம்; சிறை வாழ்வு கிட்டியது; மிகுந்த நஷ்டமடைந்தோம். எனினும் இந்தப் போராட்டத்தில் ஒதுங்கியிருப்போம் என்று எண்ணாதிருக்க வேண்டுகிறோம். ஒரு சங்கதிமட்டும் அவசியம் அறிவிக்காமலிருக்க முடியவில்லை. சென்ற தடவை சிறை சென்று வந்தவர்கள் இப்பொழுது ஒதுங்கியிருப்பது நியாயமில்லை. ஒதுங்கியிருந்தாலும் இந்திய சர்க்கார் தேடிப் பிடிப்பார்கள். நல்ல நடத்தைக்கு ஜாமீன் கேட்டால், இந்த தேசபக்தர்கள் என்ன செய்வார்கள்? தாங்கள் முன்னுக்கு வந்து முன்னணியில் நிற்காவிட்டாலும், முன்னே போய்க்கொண்டிருக்கும் வீரர்களைத் தடுக்காமலிருப்பார்களாக; வேண்டிய உதவிகள் தொண்டர்களுக்குச் செய்வார்களாக.

## திருமலைச் சக்கய கவுண்டரவர்கள்

கன்னட தேசத்திலிருந்து தமிழகத்திற்கு வந்து குடியிருப்பவர்களில் நெசவுத் தொழிலையே குலத் தொழிலாகக் கொண்ட தேவாங்கர்களும் விவசாயத்தையே தங்கள் சொந்தத் தொழிலாகக் கொண்ட ஒக்காலியர்களும் இரு பெரும் சமூகங்கள். மதுரை ஜில்லாவில் பெரியகுளம் தாலுகாவில் நிலம், நீர், மலை வளங்களால் சிறந்து விளங்கும் கம்பம் பள்ளத்தாக்கிற்கு செல்வத்தில் சிறந்து செல்வாக்கில் மிகுந்த ஒக்காலியர்கள் முதுகு எலும்பு போன்றிருக்கிறார்கள். கோம்பை ஜமீன் இவர்கள் வசமிருந்தது. இந்த ஜமீன் வருக்கத்தில் ஸ்ரீமான், க. திருமலை ஜக்கைய கவுண்டரவர்கள் உதித்து, சிறு வயதில் தான் கற்ற கல்வியுடன் தனது விடாமுயற்சியாலும் தீவிர உழைப்பாலும் தமிழில் சிறந்து, கவி பாடுவதிலும் நூற்கள் இயற்றுவதிலும் வல்லவராய் விளங்கினார். அவர் அநேக புஸ்தகங்களை இயற்றியிருக்கிறார். வசன நடை எழுதுவதிலும் சமர்த்தரே. அக் காலத்தில் பெயர் பெற்று விளங்கிய "லோகோபகாரி," "மஹா விகட தூதன்," சேலம் "தக்ஷிண தீபம்" முதலிய இன்னும் சில பத்திரிகைகளுக்கும் தொடர்ந்து வியாசங்கள் எழுதி வந்திருக்கிறார். சென்னை கிரந்தம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய பாஷைகளையும் அறியும் ஆற்றல் அவருக்குண்டு. சாதாரண வாழ்வும் உயர்தர நோக்கமுமே கொண்டவர். அவரது கடைசி வாழ்வை சதா ஆராய்ச்சியிலேயே செலவு செய்தார். அவர் 1—11—1917-ம் வருஷத்தில் காலஞ் சென்றார்.

பெருந் தொகையாளரான ஒக்காலிய சமூகம் வித்வமணி திருமலைச் சக்கையா அவர்களுக்கு உற்சாகம் கொடுத்து, உதவி செய்திருக்கும் பட்சத்தில், அவ்வறிஞருடைய உயரிய பேனா முனையிலிருந்து



அநேக நல்ல நூற்கள் வெளிவந்திருக்கும். ஒக்காலிய உலகத்தை விளக்க வந்த கவிதா ரத்னத்தை பிரகாசிக்கச் செய்திருக்க வேண்டியது ஒக்காலிய மக்களது கடமையாகும். இம்மாதிரியாக எத்தனையோ அறிஞர்களும், பண்டிதர்களும் கிராமங்களிலும், பட்டி தொட்டிகளிலும் காட்டு மலர்கள் போன்று அறிவாரற்று அனுபவிப்பாரற்று அப்படியே கிடக்கிறார்கள். அவர்கள் இன்று குடத்தினுள் விளக்குப் போன்று அடங்கிக் கிடக்கிறார்கள். உற்சாகித்து உதவி செய்யின் குன்றின்மேலிட்ட விளக்குப் போன்று நன்கு நாலா பக்கங்களிலும் பிரகாசிப்பார்கள். கிராமத்தார்கள் அறிவாளிகளுக்கும் பண்டிதர்களுக்கும் அதிகம் ஆதரவு அளிக்க வேண்டியது அவசியத்திலும் அவசியமென்பதை அறிவித்துக்கொள்கிறோம்.

## மாப்பிள்ளைக் கைதிகள் விடுதலை

வண்டியில் அடைபட்டு மூச்சுவிட முடியாமல் மாண்ட மாப்பிள்ளைகளைப் பற்றிய மலையாள ரெயில் சம்பவத்தைத் தமிழர்கள் ஒருவரும் மறந்திருக்க மாட்டார்கள். மலையாளக் கலகத்தில் அநேக ஆயிரக் கணக்கான மாப்பிள்ளைகளைக் கைதிகளாகப் பிடித்துச் சிறையில் போட்டுப் பட்சிகளையும் மிருகங்களையும் அடைத்து வைத்திருப்பதுபோன்று அவர்களை அலிப்புரம் ஜெயிலில் போட்டுவைத்திருந்தார்கள். அவர்கள் அடைந்த கஷ்டங்கள் கடவுளுக்குத்தான் நன்றாய்த் தெரியும். நூற்றுக்கணக்கான மாப்பிள்ளைகளை அந்தமானுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். அலிப்புரம் சிறையில் இவர்களுடன் நாம் சுமார் 20 நாட்கள் நெருங்கிப் பழக நேர்ந்தது. இவர்களது கலங்கமின்மையையும் நேர்குணத்தையும் நேரில் கண்டோம். இவர்களைப்பற்றி எழுத எமக்கு இஷ்டம்; இப்பொழுதிருக்கும் அச்சுச் சட்டம் இடம் கொடுக்காது. கொடிய குற்றம் செய்த சிலரைத் தவிர்த்து எல்லோரையும் விடுவித்து விட்டார்களென்று கேட்டுச் சந்தோஷிக்கிறோம், இப்படி இவர்களை விட்டுவிட்டால் மட்டும் காரியமில்லை. இவர்களுக்குப் பிழைப்பும் தேடிக் கொடுக்குமாறு சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறோம்.

இவ் வழக்கில் சம்பந்தப்பட்டுத் தண்டனையடைந்த ஸ்ரீமான் நாராயண மேனன் அவர்களை வேலூர் சிறையில் அடிக்கடி பார்க்கவும் அவரோடு பேசவும் பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. அவரும் அவசியம் விடுதலை பெறவேண்டும். அவர் விடுதலைக்காக முன்பு வாதாடிய ஸர். கிருஷ்ண நாயர் அவர்கள் இப்பொழுது சட்ட மந்திரியாக விருக்கிறார். அவருடைய விடுதலையை ஆத்திரத்துடன் கோளமும் முக்கியமாகத் தமிழ் நாடும் பொதுவாக இந்தியாவும் எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறது. அரசாங்கம் இதைக் கவனிக்குமாக.

## மெஸ்ஸர்ஸ். திர. ரா. அண்டு பிரதர் சன்ஸ்

மெஸ்ஸர்ஸ் திர. ரா. அண்டு பிரதர் சன்ஸ் என்ற குடும்பம் கோம்பையில் செல்வமும் செல்வாக்கும் பெற்ற ஒரு நல்ல குடும்பம். ஒழுங்கான முறையில் தருமம் செய்வதில் பெயர்பெற்ற குடும்பம். உத்தமபாளையத்திலிருந்து கோம்பை 3 மைல் தூரம். 'பாரதி'யின் சேவையையும் தியாகத்தையும் மேன்மையும் உள்ளபடி அறிந்து மெஸ்ஸர்ஸ் திர. ரா. அண்டு பிரதர் சன்ஸ் 'பாரதி'க்குப் போஷகதாரர்களாயிருந்து, உதவி செய்ய முன்வந்ததை—அதுவும் உலகமெங்கும் பண நெருக்கடியால் நசுக்கப்படும் பொழுது உற்சாகமளிக்க முன் வந்ததை நாம் மிக மிகப் போற்றுகிறோம். எமது அன்பார்ந்த அநேக வந்தனங்களை கனம் செட்டியாரவர்கள் குடும்பத்திற்குச் செலுத்துகிறோம். நாட்டுக்கு நானாவழிகளில் தொண்டாற்றும் நல்ல பத்திரிகைகளை ஆதரிப்பதுவும் தேச சேவையை ஒரு வழியில் செய்ததாகும். இன்னும் இதுபோன்ற பற்பல தருமங்கள் செய்யும்பொருட்டு கனம் திர. ரா அண்டு பிரதர் சன்ஸ் குடும்பத்தாருக்கு செல்வமும் சுகமும் தந்தருளுமாறு எல்லாம் வல்ல கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

## புத்த ஆலயத் திறப்பு விழா

சமத்துவத்தையும் சம தருமத்தையும் நிலை நாட்டிய புத்தபிரான் சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னரே தனது ஜீவகாருண்ய மதத்தின் தத்துவத்தை முதன் முதலாவது பிரசங்கம் செய்த இடம் காசிக்கு அருகிலுள்ள சாரநாத் என்னும் இடமே. சாக்கிய முனிவர் 5 சிஷ்யர்களை அடைந்த இடம் இவ்விடமே.

இந்த சாரநாத் சுமார் 800 வருடங்களாகப் பாழ்பட்டுக் கிடந்ததை மஹா போதி சங்கத்தார் டீர் மான் வனத்தில் ஸ்ரீ மூலகந்தகுடி விஹாரம் என்ற ஆலயத்தின் திறப்பு விழா நவம்பர் 11உ யன்று மகா வைபவத்துடன் நடைபெற்றது. சீனம், ஜப்பான், பர்மா, சிலோன், சையாம், இந்திய சீனம், இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய இடங்களிலிருந்து திருநாளுக்கு வந்து இத்தினத்தைச் சிறப்பித்தார்கள். அன்பு மதத்தை நிலைநாட்டிய புத்த பகவான் பெயரால் ஆசியாக் கண்டத்தவரெல்லாம் ஒன்று கூடினார்கள் என்று சந்தோஷமடைகிறோம். இந்த ஒற்றுமை இந்தியாவிலிருந்து புத்த தருமத்தின் பெயரால் பரவுமாயின் ஆசியாக் கண்டம் ஒன்றுபட்டுத் தனது இழந்து போன பண்டைப் பெருமையை கூடிய சீக்கிரத்தில் அடைந்தே தீரும். இந்த நற்காலமும் வெகு வேகமாய் வந்துகொண்டிருக்கிறது. இந்த விழாவிற்கு அநேக அறிஞர்கள் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருக்கிறார்கள்.



இன்னும் சாரநாத்தில் புத்தக் கலைகளையும், புத்த இலக்கியங்களையும் கற்றுக் கொடுப்பதற்காக சர்வ தேச புத்தக் கல்லூரியைச் சிறியதாய் ஸ்தாபித்திருக்கிறார்கள். இது புத்த சர்வ கலாசாலையாக வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம். அறிவு வளர்ச்சியின் மூலமாகவும் கலா வளர்ச்சியின் மூலமாகவும் உலக ஒற்றுமை உண்டாகும், செல்வச் செருக்கும் செல்வாக்குப் பெருக்கும் ஜாதி இறுமாப்பும் மதப் பைத்தியமும் உலகில் அடியோடு அழிந்து, அன்பும், அறமும் அறிவும், அருளும், ஆற்றலும், ஆர்வமும் சமதர்மமும் உண்டாகுமாறு உண்மைப் புத்த மதம் செய்யுமாக.

## தாமஸ் ஆல்வா எடிசன்

ஆராய்ச்சி அறிஞரான தாமஸ் ஆல்வா எடிசன் தனது 84-வது வயதில் சமீபத்தில் காலங் கடந்துவிட்டார் என்று மிக மிக வருந்துகிறோம். உலகமே ஒரு அரிய பெரியாரை இழந்து தவிக்கிறது. இவரது பிரிவால் ஏற்பட்ட நஷ்டத்தை இலகுவில் ஈடு செய்வது முடியாத காரியம். அமெரிக்காவில் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்து, வயிற்றின் பாட்டிற்காக ரெயில்வே ஸ்டேஷனில் சமாச்சாரப் பத்திரிகைகள் விற்கும் பையனாக உழன்று, தனது சாஸ்திர ஆராய்ச்சி ஆசையால் மெல்ல மெல்ல முன்னுக்கு வந்து, நாள் ஒன்றுக்கு 22 மணி நேரம் அபாரமாய் உழை உழையென்று உழைத்து, கிராமபோன், எடிசன் எபெக்ட் முதலிய 1000-க்கு மேற்பட்ட விஷயங்களைக் கண்டுபிடித்து உலகுக்கு எவ்வளவோ உபகரித்திருக்கிறார். பள்ளிக்கூடத்து உபாத்தியாயரால் "முட்டாள்" என்று தள்ளப்பட்டுத் தனது தாயாரண்டைக் கல்வி கற்று சுய முயற்சியால் உலகப் பிரசித்திபெற்ற—வெற்றி பெற்ற எடிசன் வாலிபர்களுக்கும், சுய முயற்சி செய்பவர்களுக்கும், ஆராய்ச்சிக்காரர்களுக்கும் இன்னும் ஒரு தூண்டுகோலாகவே இருக்கிறார். சாதாரண வாழ்வு வாழ்ந்து உலகத்தாருக்கு அநேக சாதனங்களைக் கண்டுபிடித்துதவிய எடிசன் நாமம் உலகம் உள்ளளவும் நிலைத்து நின்று பிரகாசிக்கும். அவரது ஆத்மா சாந்தி அடைவதாக!

## இந்தியாவுக்கு 5 வருஷத் திட்டம்

புதிய ஜீவனுடன் முன்னேறி ஓடிக்கொண்டிருக்கும் சோவியத் ருஷியா தேசம் 5 வருடத் திட்டமொன்று போட்டு அதை முடிக்க அபாரமாய் உழைத்துக்கொண்டிருக்கிறது. சைனா தேசமோ 10 வருடத் திட்டமொன்று கண்டு அதை நிறைவேற்ற வேலை செய்துகொண்டிருக்கிறது. அனேக நாடுகள் கடன் வாங்கித் தேசாபிவிருத்திக்கான அனேக காரியங்களைச் செய்துகொண்டிருக்கின்றன. இதையெல்லாம் கவனித்து ஸர். எம். விஸ்வேஸ்வரய்யா அவர்கள் இந்தியாவிற்கு 5

வருடத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கிறார். ஜனப் பெருக்கு அதிகரித்துக்கொண்டுவரு மிக்காலத்தில்—பண நெருக்கடி மிகுதியாக உண்டாகிவரு மிக்காலத்தில்—போட்டிகள் பெருத்துக்கொண்டிருக்கு மிக்காலத்தில் நமது தேசத்தின் செல்வத்தை நானாவழிகளில் அதிகமாய் வளர்க்கவேண்டுவது நமது கடமையாகும். நமக்குச் சுயாட்சி ஏற்படும்வரையில் நாம் இத்திட்டத்தை நிறைவேற்ற முடியாது. என்றாலும் நமது தேசாபிவிருத்திக்காக ஸர். விஸ்வேஸ்வரய்யா அவர்கள் கூறும் 5 வருடத் திட்டத்தை அனைவரும் ஆதரித்துக் கூடியவரையில் நிறைவேற்றிவைக்கவேண்டியது அவசியமாகும்.

## பெரியகுளம் தாலுகாவில் கதர் அபிவிருத்தி

"பாரதி" இத்தாலுகாவிலிருந்து வெளிவருவதால், இதைப்பற்றி எழுதவேண்டியிருக்கிறது. பெரியகுளம் தாலுகா எல்லா வளங்களும் கொண்டது. கதர் செலவிற்காகத்தான் இங்கு அனேக இடங்களிருக்கின்றன. வடுகபட்டி, கொடுவிலார்பட்டி, சில்லமரத்துப்பட்டி, ஜக்கம்பட்டி முதலிய ஊர்களில் அநேகம் தறிகள் இருக்கின்றன. இருப்பினும் சின்னமனூரில் பல பங்குகளாகக் கொண்டு ஒரு கதர் உற்பத்தி ஸ்தாபனம் "கதர் சங்கம்" என்று உண்டாகி வேலை செய்து கொண்டிருக்கிறது. பெரியகுளத்தில் பல பங்குகள் கொண்ட ஒரு லிமிடெட் கம்பெனி "நேரு இண்டஸ்டிரியல்ஸ்" என்ற பெயருடன் கதர் உற்பத்தி செய்துகொண்டிருக்கிறது. இந்த இரண்டு நல்ல ஸ்தாபனங்களையும் இத்தாலுகா வாசிகள் அதிகமாக ஆதரிக்க வேண்டுகிறோம். இக்கதர் சாலைகளை ஆதரிப்பதே இத்தாலுகாவின் தேசிய வளர்ச்சியைக் காட்டுவதாகும்.

## ஹிம்ஸை முறை நல்லதல்ல

அஹிம்ஸா முறை இந்திய நாடெங்கும் பரவிக்கொண்டு வரும் இப்பொழுது, எங்கோ திடீரென்று சிலர் இரத்த வெறிகொண்டு புரட்சி செய்வதை நாம் வெறுக்கிறோம்—மறுக்கிறோம். பலாத்கார இயக்கத்தால் எவ்வித பலனும் ஏற்படாது. அதனால் கெடுதியே உண்டாகும். சகலவிதமான விடுதலையையளிக்கும் அஹிம்ஸா முறையை மஹாத்மா காந்தி அடிகள் கண்டுபிடித்து அதனை உலகத்திற்கு உபதேசம் செய்துகொண்டிருக்கிறார். உலகமே போற்றி அதனை அதி சீக்கிரத்தில் வணக்கத்துடன் ஏற்றுக்கொள்ளப் போகிறது. இந்த அஹிம்ஸா தருமத்தின் மூலமாகத்தான் இந்தியா சுதந்திரம் அடையப் போகின்றது; உலகத்தில் அடிமைத்தனம், வேற்றுமை, பகைமை, துவேசம் முதலிய தீய குணங்கள் மடிந்து, அன்பும், சமத்துவமும் சுதந்திரமும் பெருகப் போகின்றது. பண்டைக் காலத்திலிருந்து அஹிம்ஸா தருமத்திற்கு இந்தியா பெயர்பெற்றது. ஆகையால் நாம்



அஹிம்ஸா நெறியைப் பின்பற்ற முன்வந்து எல்லா நலன்களையும் பெறுவோமாக.

## அடக்குமுறைகள்

வட்டமேஜையின் பயனாகத் தகுந்த சன்மானம் இந்தியாவிற்குக் கிடைத்துக்கொண்டிருக்கிறது. வட நாட்டில் அடக்குமுறைகள் அவசரச் சட்டங்களின் பெயரால் எழுந்து தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றன. சென்ற வருடத்தைக் காட்டிலும் இனிமேல் அடக்குமுறை 10 பாகத்திற்கு அதிகமாயும் கொடூரமாயும் இருக்கும். பல ஆயிரக் கணக்கானவர்கள் அடக்குமுறைக்கு ஆளாக வேண்டியிருக்கும். அவசரச் சட்டத்தின்படி ஸ்ரீமான் புருஷோத்தமதாஸ் தாண்டன் ஒரு வருடம் கடுங்காவல் தண்டனையை அடைந்திருக்கிறார். பண்டித மாளவியா அவர்களின் புத்திரர் கிருஷ்ணகாந்த மாளவியா 6 மாதம் கடுங்காவலும் ரூ 100 அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறார். எல்லைப்புர காந்தியான அப்துல் காபூர்கானும், இந்தியாவின் முடிசூடா மன்னரான இளஞ் சிங்கம் ஜவஹர்லாலும், திரு. ஷேர்வானி அவர்களும் இன்னும் பலரும் ஐக்கிய மாகாணத்திலும் வங்காளத்திலும் தண்டனைக்கு ஆளாகியிருக்கிறார்கள். சொத்துக்களும் பறிமுதல் செய்யப்படுகின்றன. புதிய புதிய அவசர அடக்குமுறைச் சட்டங்கள் உண்டாகிக் கொண்டிருக்கின்றன. இந்தியா சர்க்கார் இன்னும் எவ்வளவோ கடுமையான முறைகளைக் கைக்கொண்டு பரீக்ஷிக்கப் போகின்றார்கள். வட இந்தியாவிலிருந்து அடக்குமுறைகள் தென்னாட்டிலும் பாய்ந்திருக்கின்றன. திருநெல்வேலி ஜில்லா விவசாயிகள்—தொழிலாளிகள் மகா நாட்டில் தலைமை வகித்த திரு. வேதரத்னம் பிள்ளை அவர்களையும் ஷை மகா நாட்டைத் திறந்துவைத்த அன்பர் தோழர் அய்யாமுத்து அவர்களையும் இன்னும் சிலரையும் சர்க்கார் கைது செய்திருக்கிறார்கள்.

கோர்ட்டுகளில் விசாரிக்கப்பட்டு எத்தனையோ பேர் தண்டிக்கப்படப் போகிறார்கள். அவசரச் சட்டங்களாலும், ஆள் தூக்கிச் சட்டங்களாலும், பாதுகாப்புச் சட்டங்களாலும் எத்தனையோ யுவர்கள், அரிய தேசபக்தர்கள், அறிஞர்கள், பெண்மணிகள் கணக்கின்றிச் சிறைக்குள் தள்ளப்படப் போகின்றார்கள். பற்பல கிராமத்து ஜனங்களைப் பயமுறுத்தப் போகிறார்கள். இங்கு விவரிக்க முடியாத எத்தனையோ விதக் கஷ்டங்களை இந்தியா அடையப் போகிறது. எத்தனையோ பேர் தியாகமின்றி, இந்தியாவிற்கு விடுதலை கிடைத்துவிட மாட்டாது. எவ்வளவு சீக்கிரத்தில் பிரமாண்டமான கஷ்டங்கள் வருகிறதோ, அவ்வளவு அதி சீக்கிரத்தில் நற்காலம் வரும் என்பது உலக வழக்கு. அப்படிப்பட்ட பொன் போன்ற சுதந்திர, சுபதினம் விரைவில் வந்துகொண்டிருக்கிறது.

## சுதேசியம்

நமது நாட்டார்கள் நம் தேசத்தில் செய்த சாமான்களையே வாங்கி உபயோகிக்குமாறு வேண்டுகிறோம். அயல் நாட்டுப் பொருள்கள் மூலம் பல கோடிப்பணம் இந்தியாவிலிருந்து வெளியே அயல் நாடுகளுக்குப் போகிறது. இதனால் நாட்டில் கைத்தொழில்களும் விருத்தி அடைவதில்லை. கைத்தொழில் வகுப்பார்களுக்குக் கஷ்டங்களுக்குமேல் கஷ்டங்கள் உண்டாகின்றன; வறுமை வளர்கின்றது. மேரி மகாராணியார் கிறிஸ்துமஸ் திருநாளுக்காக ஒரு பெரிய கடையில் லண்டனில் சாமான்கள் வாங்கிக்கொண்டு வந்து அச் சாமான்களை அரண்மனையில் பரீட்சை செய்த பொழுது இரு சாமான்கள் நீங்கலாக மற்றவைகளெல்லாம் அயல் நாட்டுப் பொருள்களென்று கண்டு, அவைகளை அரசியார் திருப்பி அனுப்பி விட்டாராம். இங்கிலாந்தில் சுதேசியம் எவ்வாறு வளர்ந்துகொண்டு வருகிறது? நமது நாட்டார் இதனைக் கவனிக்க வேண்டும். நமது இந்தியாவில் சுதேசியத்தை வளர்க்குமாறு நாம் சுதேசி விரதத்தைக் கைக்கொள்ள வேண்டும். இந்தியாவில் பிறந்த அனைவரும் இதனை அனுசரிக்க வேண்டும்.

## கவீந்திரர் தாகூரது 70-வது வருடப் பூர்த்தி விழா

கவிச் சக்கிரவர்த்தி ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் 70-வது வருடப் பூர்த்தி வைபவத்தை மிக்க விமரிசையுடன் கல்கத்தாவில் கொண்டாட ஏற்பாடு செய்து அக் கொண்டாட்டத்துடன் அயல் நாட்டு உள் நாட்டுச் சாமான்களின் காட்சி சாலை ஒன்று வைக்கும் பொருட்டு ஏடன் கார்டன்ஸ் (Eden Gardens) என்னும் சிங்காரத் தோட்டத்தை உபயோகிக்க வங்காளச் சர்க்காரிடம் உத்திரவு கேட்டார்கள். ஆனால் வங்காள அரசாங்கம் ஒரு மாதத்திற்கு மேலாக இந்த விஷயத்தை யோசித்துக் கடைசியில் அனுமதிக்க முடியாதென்று அறிவித்து விட்டார்களாம். ஆண்டுதோறும் நாய் காட்சிகள் அத் தோட்டத்தில் நடைபெறுகின்றன. ஐரோப்பியர்கள் பலவகை ஆட்டங்களுக்கும் அதை உபயோகப்படுத்துகிறார்கள். உலகம் போற்றும் ஒரு இந்தியப் புலவர் பெருமானுக்கு மரியாதை செய்ய இடங் கொடுக்காததற்காக மிகமிக வருந்துகிறோம். இவ்வாறு ஒரு பண்டித மணிக்கு அகௌரவம் செய்த வங்காளச் சர்க்காரைப்பற்றி என்ன எண்ணுவது?

தாகூர் 70-வது ஆண்டு பூர்த்திக் கொண்டாட்டச் சபையார் நல்ல நல்ல திட்டங்களிட்டுக் கொண்டாட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவருடைய ஞாபகச் சின்னமாக ஒரு புஸ்தகத்தைத்



தொகுத்து வெளியிடப் போகிறார்கள். நாமகளும் பூமகளும் பூரணமாய் ஆசீர்வதித்து அருளியிருக்கும் தாகூரவர்களுக்கு நல்ல சுகமும் நீண்ட ஆயுளும் தந்தருளுமாறு கடவுளைப் பிரார்த்திக்கிறோம். அவரது வேலையான அகில உலக ஒற்றுமை விரைவில் வளர்வதாக! அதனால் உலகத்திற்கு அபார நன்மை உண்டாவதாக!!

## வாலிபர் சங்கங்கள்

ஒவ்வொரு நாட்டின் சரிதங்களைத் திறந்து பார்த்தால் அந் நாட்டின் அபிவிருத்திக்குக் காரணம் வாலிபர்கள் வாலிபர்கள் என்றே அறியலாகும். இப்பொழுது நமது தாய்நாடு அடிமைப்பட்டு அல்லலடைந்து கொண்டிருக்கிறது. காங்கிரஸ் மஹாசபையே இந்தியாவின் விடுதலையை ஸ்தாபிக்கப் போகிறது; வாலிபர் சங்கம் ஒவ்வொரு ஊரிலும் ஏற்பட்டால் அவ் வூரின் அபிவிருத்தியை அதிகமாக நாடி உழைக்கும். கிராமந்தோறும் வாலிபர் சங்கம் ஏற்படுத்தி வேலை செய்தால், கிராமங்களில் எவ்வளவோ நன்மைகள் ஏற்படும். அநேக கிராமங்களில் வாலிப சங்கங்களைத் திறக்குமாறு பல விடங்களிலுள்ள எமது நண்பர்களுக்கு எழுதியிருக்கிறோம்; எழுதிக்கொண்டிருக்கிறோம். இதன் பயனாகச் சில விடங்களில் வாலிபர் சபைகள் உண்டாகிக்கொண்டிருக்கின்றனவென்று அறிகிறோம். நமது நாடெங்கும் வாலிபர் சபைகள் ஏற்படல் வேண்டுமென விரும்புகிறோம். வாலிபர் சங்கங்களை ஸ்தாபித்து, வாலிபர்களுடன் நெருங்கிப் பழகிய அனுபவம் எமக்கு அதிகம். கிராமச் சீர்திருத்த வேலைகளுக்கு வாலிபர்களின்றி முடியவே முடியாது. நாட்டார் இதனை அவசியம் கவனிக்க வேண்டும்.

## சோவியத் ருஷியா

சோவியத் ருஷியாவைப்பற்றி அதன் எதிரிகள் விஷமப் பிரச்சாரம் செய்துகொண்டிருந்த போதிலும், அதன் அபிவிருத்தியைப்பற்றி உண்மைகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அங்கு சென்று பார்த்து வந்த அநேகம் பெரியார்கள் ருஷியாவின் விவசாயம், கைத்தொழில், கல்வி முதலியவைகளின் அபிவிருத்தியைப்பற்றிப் போற்றிப் பல பத்திரிகைகளுக்கு எழுதியிருக்கிறார்கள். நாமும் அவைகளில் சிலவற்றை பார்க்க நேர்ந்தது. அறிஞரான பெர்னார்டுஷா முதலியவர்கள் ருஷியாவை மிகமிக வியந்து கூறியிருக்கிறார்கள். ருஷியாவின் முன்னேற்றத்தை உலகம் விழிப்புடன் கவனித்துக்கொண்டிருக்கிறது.

# ஆராய்ச்சி மேடை.

## கிறிஸ்துகுல ஆச்சிரமம்.

தொகுத்தவர்:— டாக்டர் சவரிராயன் ஏசுதாசன், F.R.C.S (Edin)

வெளியிட்டவர்:— கிறிஸ்துகுல ஆச்சிரமம், திருப்பத்தூர், வட ஆற்காடு ஜில்லா.

விலை:—அணா 6.

இந்திய சுதேசிக் கிறிஸ்தவ சங்கத்துடன் இணைக்கப்பட்டு இந்தக் கிறிஸ்துகுல ஆச்சிரமம் திருப்பத்தூரில் நன்கு வேலைசெய்து வருகிறது. அன்றியும் ஆச்சிரமத்தின் சுற்றுப் பக்கங்களிலுள்ள கிராம ஜனங்களுக்குக் கல்வி வசதிகளும் வைத்திய வசதிகளும் கொடுக்கப்படுகின்றன. இங்கிலாந்து தேசத்தில் உயர்தர வைத்தியப் பட்டம் பெற்று இங்கு வந்து, பொதுநலத் தொண்டிற்கே தனது வாழ்வை அர்ப்பணம் செய்திருக்கும் டாக்டர் சவரிராயன் ஏசுதாசன் அவர்களுடையவும், சேவையில் ஆசை மிகுந்து இந்தியாவை அபிமானத் தாய்நாடாக மதித்து இந்தியர்களை நேசித்துவரும் டாக்டர் பேடன் அவர்களுடையவும் தியாகமும் தொண்டும் இந்த ஆச்சிரமத்தின் ஒவ்வொரு வேலையிலும் மணக்கிறது. திருப்பத்தூர் கிறிஸ்து குல ஆச்சிரமத்திற்குச் சென்று பார்த்தால், அன்பு மதத்தை நிலைநாட்டிய ஏசுகிறிஸ்து நாதரது பக்தர்களின் அன்பின் பெருக்கு வடிந்தோடுவதை, தியாக உணர்வு தாண்டவமாடுவதை, தொண்டின் பெருமை பிரகாசிப்பதைக் காணலாம். இந்த ஆச்சிரமவாசிகள் கிராமச் சீர்திருத்த வேலைகளையும் சுற்றுப் பக்கங்களிலுள்ள கிராமங்களில் சந்தோஷத்துடன் செய்கிறார்கள். இவ்வாச்ரம வாசிகளின் அருமையான ஊழியத்தைப் போற்றுகிறோம். இன்னும் இவர்கள் தேச சேவையிலும் ஈடுபட்டிருப்பதை அறிந்து மிக மகிழ்கிறோம். துண்டுப் பிரசுரங்களின் மூலமாகவும் புஸ்தக வெளியீடுகளின் மூலமாகவும் நல்ல வேலை செய்துவருகிறார்கள்.

கிறிஸ்து குல ஆச்சிரமத்தைப் பற்றி இந்தப் புஸ்தகம் சில படங்களுடன் நன்கு விவரிக்கப்பட்டிருக்கிறது. நல்ல எழுத்தால் நேர்த்தியான காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த ஆசிரமத்தைப்பற்றி அதிகமாய் அறிய விரும்புகிறவர்கள் இந்த நூலை வாங்கிப் படிப்பார்களாக. தமிழ் மக்களனைவரும் இந்த அன்பகத்தைப்பற்றி அறிந்து அதிகமாக ஆதரிப்பது அவசியம். இந்த ஆச்சிரமம் ஓங்கிப் பரவி வளருமாறு அருளும்படி ஈஸ்வரனைப் பிரார்த்திக்கிறோம்.

"சுவாமி".

---



பெயர்:—"ஐக்கிய பண்டகசாலை இயக்கம்."

ஆசிரியர்:—ஸ்ரீமான் இ. எஸ். சுந்தா பி.ஏ., பி.எல்., எப்.ஏ.யு.

கிடைக்குமிடம்:—மணி புஸ்தகசாலை, 12, குட்ஷெட் தெரு, மதுரை.

விலை:—அணா 4.

இதன் ஆசிரியர் கல்வித் துறையிலும், ஐக்கிய இயக்கத் துறையிலும் பல ஸ்தாபனங்களில் அங்கம் பெற்ற வழக்கறிஞராகும். ஸ்வீடன் தேசத்துப் பிரபல ஐக்கிய முறையாளராகிய ஆண்டர்ஸ் ஆர்ன் என்பார் எழுதிய "Co-operative Ideals and Problems" என்னும் புத்தகத்தின் சாராம்சத்தை, தமிழ் மக்களின் உபயோகத்தைக் கருதி இப்புத்தக வடிவில் தமிழில் எழுதி வெளியிட்ட ஆசிரியரின் முயற்சி பெரிதும் பாராட்டற்பாலதாகும். சில வருடங்களாகவே தமிழ் நாட்டில் ஐக்கிய இயக்கம் பரவ ஆரம்பித்திருக்கிறது. இவ் வியக்கத் தோற்றத்திற்கு நமக்கு மேல்நாட்டார்களே வழிகாட்டிகளாவர். அந்நாட்டினர் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் ஐக்கிய இயக்கத்தைக் கண்டு பெரும் பயன் எய்தி வருகின்றனர். தற்கால நிலையில் தமிழர்கள் இவ் வியக்கத்தினைப்பற்றி அறியவேண்டியவை பலவுள. எனவே இவ்வியக்க சம்பந்தமாய் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள பல நூல்களும் தமிழில் வரவேண்டுவது அவசியம். பிரஸ்தாப நூலில் ஐக்கிய பண்டகசாலை சம்பந்தமான பல அரிய உண்மைகள் எளிய நடையில் சுமார் 60 பக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. ஐக்கிய இயக்கத்தில் அபிமானம் படைத்த தமிழர் அனைவரும் இதைப் படிக்கவேண்டுவ தவசியம். ஆசிரியர் இத்துறைபற்றி மற்றும் பல நூல்களைத் தமிழகத்திற்கு எழுதி உதவுவாரென எதிர்பார்க்கிறோம்.

N. V.

---

பெயர்:—ஸ்ரீ அரவிந்த மஹரிஷி அருளிய அன்னை.

ஆசிரியர்:—ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்.

கிடைக்குமிடம்:—பாரத சக்தி நிலையம், புதுச்சேரி.

விலை:—அணா 4.

பகவான் ஸ்ரீ அரவிந்தரால் ஆங்கிலத்தில் முதல் நூலாக எழுதி வெளியிட்டுள்ள இச்சிறு நூலானது பல ஐரோப்பிய பாஷைகளிலும் தேச பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு உலக மக்களால் படித்து அறிவாலுயர்த்தப்பட்டு வருவதை யாவரும் அறிவர். வெளிநாட்டுக் கலைஞானிகளும், யோகிகளும், நம் நாட்டு யோகிகளும் மனதாரப் புகழ்ந்திருக்கின்றனர். அன்றியும் நம் நாட்டு வெளி

நாட்டு இராஜ தந்திரிகள்கூட மனதாரப் புகழ்ந்திருப்பதை நாம் அறிகிறோம். மொழிபெயர்ப்பு முழுவதும் பிழையின்றியும் தெளிவாகவும் செந்தமிழாலும் ஆக்கப்பட்டிருப்பது மொழி பெயர்த்த ஆசிரியரின் ஆழ்ந்த கலைத் திறத்தைக் காட்டுகிறது. எளிமையில் நூலியற்றும் ஆற்றலினும் மொழி பெயர்க்கும் ஆற்றல் அதிகப்பட்டதென்றே கற்றோர் கருதுவது வழக்கம். உரையாசிரியர் நூலாசிரியரினும் சிறந்தவரேயாவது அவசியமாகும். ஆகவே பாரதியாரின் ஆற்றலை மறுபடியும் மனதாரப் புகழ்வோமாக.

மனித வாழ்வில் கஷ்டங்களும் துன்பங்களும் நேரிடும்போது அவைகளை எப்படிக் கடப்பது என்ற வழி தெரியாது தவிப்பவர்களுக்கு நாம் ஒன்று கூறுவோம். சத்தியம், தருமம் என்பவைகளைக் கைவிடாது செல்லும் மார்க்கம் ஒன்றே அத்துன்ப இன்பங்களைக் கொலைத்து நன்மையை யுண்டாக்கும். அவ்வாறு உண்டாக்குவதை நன்கறியவேண்டின் இந்நூலைப் பாராயணம் செய்து வருதல் நலமாகும். கடவுள் அன்னை, மகேஸ்வரி, மஹா காளி, மஹா லட்சுமி, மஹா சரஸ்வதி, ஆனந்த சக்தி என்ற மொழிகளை ஆங்காங்கு உபயோகப்படுத்தியிருப்பது பரிபாஷைகளே யன்றி கேவலம் ஆராதனைத் தெய்வங்களன்று. சகலமும் சேர்ந்து சக்தி, சக்தி, சக்தி என்று அறிக. சக்தியே உலகம், சக்தியே அண்ட பிண்ட சராசரங்கள்.

B A.

---

கதர் தினுசுகள்.

கிடைக்குமிடம்:—ராட்டைச் சங்கம், சின்னமனூர்.

பெரியகுளம் தாலுகாவின் முக்கிய கிராமங்களில் சின்னமனூரும் ஒன்று. தேசிய உணர்ச்சி மிக்கவர்கள் ஒன்று சேர்ந்து ஏற்படுத்திய கதர்சாலையிலிருந்து உற்பத்திசெய்த கதர் தினுசுகள் நமது பார்வைக்காக வந்தன நன்றாயும் அழுத்தமாயுமிருக்கிறது. இத்தாலுகா வாசிகளும் முக்கியமாகக் கம்பம் பள்ளத்தாக்கிலுள்ளவர்களும் இந்த ஸ்தாபனத்தை உற்சாகிக்கவேண்டியது அத்யாவஸ்யம். சின்னமனூர் வாசிகள் அனைவரும் சொந்த ஊர் அபிமானம் கொண்டு இதில் உற்பத்தியாகும் கதரை அணிய வேண்டுகிறோம். பேச்சளவில் தேசாபிமானம் காட்டமுடியாது. சிறிதேனும் தியாகம் செய்யவேண்டும். தியாகிகளின் தொண்டு இத்தகைய தினுசுகளில் பிரகாசிக்கிறது.

'சுவாமி'.

Edited and Published by R. NARAYANASWAMI.
Printed at ANANDA PRESS, Uthamapalayam, Madura Dt., S. India.

# தமிழ் நாட்டின் தேசிய கவி

அன்னை பாரதியின் அருந் தொண்டர்

# சுப்ரமண்ய பாரதியார்

வாழ்க்கை வரலாறு கவிதா விலாசம் தேசாபிமானம்
முதலியவற்றைப் பற்றிய

## அரிய ஆராய்ச்சி நூல்

திரு. சுத்தானந்த பாரதியாரால்
இனிய எளிய ஆவேச நடையில் எழுதப்பெற்றது.

இது பரியந்தம் இம் முறையில் பாரதியாரைப் பற்றிய நூலொன்றும் வெளி வந்ததில்லை.

இதில் பாரதியாரைப் பிணித்திருந்த ஆசா, பாச, வாழ்க்கை வரலாறு ஆகிய அவஸ்யமான. ஆனால் இது பரியந்தம் அச் சேறாத புதிய பல விஷயங்களையும், அவர்தம் கவிதையின் போக்கையும், நூல்களின் கருத்தையும், நடையின் சிறப்பையும் தெளிவாக எடுத்துக் காட்டப்படுகிறது. இந் நன்னூல் 1932 ஜனவரியில் வெளிவருகிறது.

பாரதியாரின் நாட்டுப் பாட்டில் வேட்கையுள்ளோரும்
பாரதியாரின் காதல் பாட்டில் வேட்கையுள்ளோரும்
பாரதியாரின் வீரப் பாட்டில் வேட்கையுள்ளோரும்
பாரதியாரின் வாழ்த்துப் பாட்டில் வேட்கையுள்ளோரும்
பாரதியாரின் வுணக்கப் பாட்டில் வேட்கையுள்ளோரும்
பாரதியாரின் வேலைப் பாட்டில் வேட்கையுள்ளோரும்
பர்ரதியாரின் வேட்கைப் பாட்டில் வேட்கையுள்ளோரும்

இந் நூலை வாசித்து உண்மைகளை அறிய வேண்டுகிறோம்.

நேர்த்தியான கடிதம்; அழகான அச்சு; உறுதியான பைண்ட்;

**200** பக்கங்களுக்கு மேல் கூடிய நூல்

விலை ரூ 1. தபால் செலவு வேறு.

"பாரதி" ஆலயம், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

## "பாரதி"யின் பம்பாய் ஏஜண்ட்.

# K. S. Naganathan,
## C/o. The Madura Knitting Co.,
## 47, Chackla Street,
# Bombay 3.

## "இந்திய மித்திரன்"

வாரமிருமுறை வரும் சிறந்த தேசியப் பத்திரிகை.

ஆசிரியர்: B. வேணுகோபாலன் அவர்கள்.

மலேயா நாட்டிலே தமிழ்ப் பத்திரிகைகளில் தேசியத்தையே
பிரதானமாகக் கொண்டு வெளிவருவது எது?
தொழிலாளர்களுக்குத் தொண்டுறையுழைப்பது எது?
திக்கற்ற இந்தியக் கூலிகளுக்குச் சிறந்த வழிகளை
எடுத்துக் காட்டி, மோசக்காரர்களின்
படு மோசத்திற் காளாகாது தப்புவிப்பது எது?
ஆயிரக் கணக்கான சந்தாதாரர்களைப் பெற்று எண்
டிசை வர்த்தமானங்களையும் கொண்டு வீரமுடன் தீரமாக
உலாவி வருவது எது? "இந்திய மித்திரன்" ஒன்றேயாகும்.

வருட சந்தா: மலேயாவுக்கு வெள்ளி 4/-
இந்தியா, பர்மா, சிலோனுக்கு ,, 5/-

விலாசம்: மானேஜர், "இந்திய மித்திரன்,"
87, பெல்பீல்ட் தெரு, ஈப்போ., F. M. S.

## 1931-ம் வருட "பாரதி" அனுபந்தம்.

"பாரதி"யைப்பற்றி அறிய இதனிலும் வேறு வழியில்லை.

100 பக்கங்கொண்டது. கட்டுரை, கட்டுரையாளர், நோக்கங்கள், சிறப்புரைகள், மதிப்புரைகள் ஆகிய இவற்றுடன் "பாரதி"யின் ஆரம்ப காலமுதல் இது பரியந்தம் வந்துள்ள சுவைதரும் சிறந்த பாக்களனைத்தையும் ஒருங்கே பெற்றிலங்குகின்றது.

விலை அணு 4. இந்தியா அல்லது இலங்கை ஸ்டாம்பு அனுப்பவும்.
வெளி நாட்டார் போஸ்டல் கூப்பன் அனுப்பவேண்டும்.

# "பாரதி"

## ஒரு தேசிய மாதப் பத்திரிகை.

மூன்றும் ஆண்டு நடைபெறுகிறது.

சுதந்திரம் பொங்கி சமத்
வம் ததும்பி சகோதரத்
வம் ஜ்வலித்து குறைந்த
சந்தாவிலே நிறைந்த
விஷயங்களால் உயர்ந்த
மாஸிகையாய் மதபேத
மற்று ஜாதி பேதமற்றுக்

கட்சி பேதமற்று இந்திய
ரனைவரும் பாரத மாதா
வின் மக்களென்ற
மேலான கொள்கையுடன்
தேசாபிவிருத்தியை
முக்கிய முதல்நோக்க
மாகக் கொண்டு

தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசீய மணங் கமழும் மாஸிகை
**"பாரதி" ஒன்றே யாகும்.**
உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள்.
உங்கள் நண்பர்களுக்கும் இதனைப்பற்றி
அறிமுகம் செய்து சந்தாதாரர்களாய்ச்
சேர்த்துக் கொடுங்கள்.

### சந்தா விபரம்.

உள் நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ 2—0—0
வெளி நாடுகளுக்கு ,, ரூ 2—8—0
அல்லது 4 ஷில்லிங்

தனிப் பிரதி விலை அணு 3. அயல் நாடு அணு 4.

மாதிரிப் பிரதி வேண்டுவோர் 3 அணு ஸ்டாம்பு அனுப்பவும்.
ஏஜெண்டுகளாக விரும்புவோர் எழுதவும்.

பொறுப்பாளர்,
"பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

## "கலா நிலயம்"

இது ஓர் இலக்கிய வாரப் பத்திரிகை.

கலையுணர்வும், கலா ஞானமும் பெறுவதற்கு இது ஒரு நல்ல கருவி யென்றால் மிகையாகாது. இதில் இலக்கிய வளர்ச்சிக்குரிய கட்டுரைகளே மலிந்து வருகின்றன. கம்ப ராமாயணம், தமிழ்ப் பாடம், அகப்பொருள் வரலாறு, செந்தமிழ் நாவல், ஆங்கிலப் புலவர்களாகிய கார்லைல், ரஸ்கின், எமர்ஸன் முதலியோரின் கட்டுரை மொழிபெயர்ப்புகள், மற்றும் பல விஷயங்கள் அவ்வப்போது வெளிவரும்.

சந்தா விபரம்.

சந்தா உள்நாட்டிற்கு ரூ 7—8—0, வெளிநாட்டிற்கு ரூ 9—0—0. தனிப்பிரதி அணா 3 ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:— மானேஜர்,
11, வெள்ளாளர்தெரு, புரசைபாக்கம், சென்னை.

## ஸ்ரீ அரவிந்தர் அருளிய அன்னை.

சுத்தானந்த பாரதியார் மொழிபெயர்ப்பு.

யோகசக்தி பெறுவதற்கு அரியதுணை.

வானரசை உலகில் நாட்ட அரவிந்தர் கொண்டிருக்கும் சக்தியை விளக்குவது. விலை அணா 4.

விலாசம்:
பாரத சக்தி நிலயம், புதுச்சேரி.

"பாரதி"யின் பம்பாய் ஏஜண்ட்.

**S. R. SUBRAMANIAN,**
**"SOBAN BHUVAN," BLOCK NO. 3**
**MANCHERJI JOSHI ROAD,**
**PARSI COLONY, DADAR,**
**BOMBAY NO. 14.**

வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!!

பாரத நாட்டின் வீரப் புதல்வி

## ஜான்ஸி மஹா ராணி

லக்ஷ்மீ பாய் சரித்திரம்.

60 பக்கம் கொண்ட பிரதி ஒன்றுக்கு

**விலை அணா 2 தான்.**

வேண்டுவோர் தபாற் செலவுக்கும் சேர்த்து இரண்டரை அணா ஸ்டாம்பு அனுப்பி வைக்கவும். 10-க்கு மேற்பட்ட பிரதிகளை வாங்குவோர் தபாற் செலவு அனுப்ப வேண்டியதில்லை. வியாபாரிகளுக்குத் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

"பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

மதுரை வக்கீல் ஸ்ரீமான் இ. எஸ். சுந்தா, பி. ஏ., பி. எல்., இயற்றிய

## பொருளாதார முக்கிய நூல்கள்.

1. அமெரிக்காவில் மதுவிலக்கு ... ... 0—8—0
2. இந்தியப் பருத்தி நெசவுத் தொழில் ... 0—4—0
3. ஐக்கிய பண்டகசாலை இயக்கம் ... 0—4—0

மதுவிலக்கு, சுதேசிப் பிரச்சாரம், தேச முன்னேற்றம் ஆகியவைகட்கு அவசியமான புஸ்தகங்கள்.

எல்லாத் தமிழ் மக்களும் அறியும்படி எளிய தமிழ் நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன.

கிடைக்குமிடம்:- மணி புத்தகசாலை, 12, கூட்ஷெட் தெரு, மதுரை

# 1930-ம் வருட
# "பாரதி" வால்யம்.

இதில் இந்திய தேசாபிமானிகளின் படங்களும் பெரியோரின் படங்களும், அவர்தம் விரிவான சரிதைகளும் அடங்கியுளது. இவையன்றி, சிறந்த ஆசிரியர்களாலும், பிரபல நியாயவாதிகளாலும் அறிவு தருவதாய் ஆனந்தம் நல்குவதாய் செல்வம் ஈவதாய் நவம் நவமாக எழுதப்பெற்ற அற்புதமான வியாசங்களை 800 பக்கங்களில் கொண்டதாயிருக்கின்றது. பத்திரிகையின் விஷயப் போக்குக்கும் அச்சுக்கும் ஏற்ற விதமாக நேர்த்தியான காலிகோவினால், அழகாகவும் உறுதியாகவும் பைண்ட் செய்யப்பெற்று, தங்க மசியில் காலிகோவில் அச்சிடப்பட்டிருக்கிறது.

பிரதி 1-க்கு விலை ரூ. 2—8—0

வால்யம் வாங்குவோர்க்குப் பாரதி அனுபர்தம் ஒன்று இனாமாக அனுப்பிவைக்கப்படும்.

தபாற் செலவு பிரத்தியேகம்.

வெளி நாட்டிலுள்ளோர் தபாற் செலவுக்கும் சேர்த்து 6 ஷில்லின் போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டும்.

## விளம்பர விகிதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாரதி பேரேடில் கட்டம் 1-க்கு | | | | ரூ. | 1—0—0 |
| சாதாரண பக்கம் 1-க்கு | | | மாதம் 1-க்கு | ரூ. | 10—0—0 |
| ,, | ,, | ½-க்கு | ,, | ,, | 5—8—0 |
| ,, | ,, | ¼-க்கு | ,, | ,, | 3—0—0 |
| கவர் | ,, | 3 ல் | ,, | ,, | 15—0—0 |
| ,, | ,, | 4 ல் | ,, | ,, | 20—0—0 |

விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன்பணம் அனுப்ப வேண்டும்.

நீண்ட கால விளம்பரஞ் செய்வோர் எழுதவும்.



நேர்த்திக்கும் உறுதிக்கும் உத்தரவாதம்.

இங்கு

பிரிண்டிங், ரூலிங், பைண்டிங் ஆகிய எல்லாவித வேலைகளும் விரும்பிய வண்ணம் குறித்த காலத்தில் செய்து தரப்படுகிறது.

வெளியூர் ஆர்டர்களை உடனுக்குடன் கவனிக்கப்படும்.

பரீக்ஷார்த்தமாகவேனும் உங்கள் ஆர்டர்களை ஒரு முறை கொடுத்துப் பாருங்கள்.

வியாபாரிகளுக்கு வேண்டியவை யாவும் இங்கு தயாரிக்கப்படுகிறது.

ஆனந்தா பிரஸ், உத்தமபாளையம்.

# "லோகோபகாரி"

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினால் லோகோபகாரிக்குச் சந்தாதாரராய்ச் சேருங்கள். உலகத்துச் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளி வருகிறது. முப்பத்தேழாவது ஆண்டு நடக்கிறது.

பத்திராதிபர்: பரலி— சு. நெல்லையப்ப பிள்ளை,
லோகோபகாரி பத்திரிகாலயம்,
சிந்தாத்ரிப்பேட்டை, சென்னை.

வருஷ சந்தா ரூபாய் நான்கு.

## நகரங்கள்தோறும்
## "பாரதி"-க்கு ஏஜெண்டுகள்
# தேவை.

மற்ற விபரங்களுக்கு எழுதவும்.

## தமிழபிமானிகளுக்குச் சிறந்த விருந்து!

## 1. திருவாசகம்.

(உண்மை ஞான விளக்க உரையுடன்.)

'மனங் கரைந்து மலங் கெடுக்கும் வாசகம்' எனப் புலவர் புகழும் தமிழ் மறையின் பெருமையை உணராதார் தமிழுலகில் ஒருவருமே இரார். சைவ சமயகுரவர் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசகர் தமிழ் மக்களுக்கு வழங்கியுள்ள திருவாசகம் என்னும் அரிய பெரிய நூலைத் தமிழராய்ப் பிறந்தோர் ஒவ்வொருவரும் ஆவலுடன் பிழையறப் படித்துப் பயன் பெற வேண்டும். இந் நூலின் உரையாசிரியராகிய ஸ்ரீலஸ்ரீ ஈ. சுந்தர மாணிக்க யோகியார் அவர்கள் தமது முதிர்ந்த ஆன்மஞான அனுபவத்தினால் இந் நூலை வெறும் பக்தி நூல் அன்றெனவும், பிரம்ம சாதனைகள் நிரம்பிய ஆன்மஞானக் களஞ்சியம் எனவும் ஐயந்திரிபறத் தெளிந்து தாம் சென்னையில் நிறுவியுள்ள பிரம்ம வித்யா சங்கத்தின் உபயோகத்திற்காக இந் நூலுக்குச் சிறந்த உரை இயற்றி யிருக்கின்றார்கள். இது டெம்மி யளவில் 115 பாரத்தில் அமைந்திருக்கின்றது; உயர்ந்த பளபளப்பான தாளில் அழகாய் அச்சிடப் பெற்றுளது; சிறந்த காலிகோ பைண்டு செய்யப்பெற்றது.

விலை ரூபா 10—0—0. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

## 2. ஔவைக் குறள்.

(உரையுடன்.)

இந் நூல் வரகவிகளில் சிறந்த ஔவையார் அருளிய ஆன்ம ஞான நூல். இது திருக்குறளைப்போல் பண்டிதர்களும், பாவலர்களும் உரையெழுதக் கூடியதன்று. இது ஆத்மஞான சாதனைகளைப் புகட்டும் நூல், ஆன்மஞான இன்பத்தை அவாவி அம் மெய்ச் சுகத்தில் ஈடுபடும் மெய்யன்பர்களுக்கே இது பெரிதும் பயன் அளிக்கும். ஸ்ரீலஸ்ரீ ஈ. சுந்தரமாணிக்க யோகியார் அவர்கள் தமது சிறந்த ஆன்மஞான அனுபவத்தினால் இந் நூலுக்குச் சிறந்த உரை யெழுதி யிருக்கின்றார்கள். இதுவும் உயர்ந்த காலிகோ பைண்டு செய்யப்பெற்றுள்ளது.

விலை ரூபா 1—8—0. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

பிரதிகள் கிடைக்கும் இடம்: வே. ஜ. முருகேச முதலியார்,

15, முத்து முதலி தெரு, புரசைபாக்கம்,

வேப்பேரி, சென்னை.

# T. C. P. A. ஏலச் சாக்கு விற்பனைக் கம்பெனி Ltd., கோம்பை.

1913-ம் வருஷத்திய இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.

பங்கு 1-க்கு ரூ 3 வீதம் 900,000 பங்குகளின் பேரில்
2,700 000 ரூ மூலதனம்.

1. ஏல விவசாயிகளைத் தவிர வேறு எவரையும் பங்காளிகளாக ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

2. ஏல விவசாயிகளின் ஐக்கியத்தையும் லாபத்தையும் பிரதானமாகக் கொண்டு பிரஸ்தாபக் கம்பெனி ஸ்தாபிக்கப் பெற்று, ஏலச் சாக்குகளைக் கொள்முதல் செய்தும் கம்பெனி மெம்பர்களிடம் கன்செயின்மெண்டில் சாக்குகளைச் சேர்த்தும் லண்டன், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய அந்நிய தேசங்களுக்கனுப்பிவைத்தும் பாம்பை, கல்கத்தா, காாச்சி. டில்லி, கான்பூர், அம்ரிட்ஸார், விருதுநகர் முதலிய துறைமுகங்களில் சொந்தக் கடைகளை நிர்மாணித்தும் விற்றுமுதல் செய்து வருவதோடு சக்கர், முல்டான், லாகூர், அலகாபாத், ஆக்ரா, ஆதரிஸ், சென்னை முதலிய இடங்களில் விற்பனை ஏஜண்டுகளைக் கொண்டும் விற்றுமுதல் செய்து வரப்படுகிறது.

3. நல்ல விலைக்கு விற்க விரும்பும் ஏல விவசாயிகளும், நல்ல ஏலச் சரக்கை வாங்க விரும்பும் வியாபாரிகளும் இக் கம்பெனியை ஆதரித்துத் தக்க லாபத்தையும் மிக்கப் புகழையும் அடையும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

உ. ம. சே. முகையித்தீன்பிள்ளை ராவுத்தர்,
மானேஜிங் டைரெக்டர்,
**T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி,**
**(லிமிடெட்)**
**கோம்பை, மதுரை ஜில்லா.**

தேயிலை!　　　　தேயிலை!!　　　　தேயிலை!!!

நன்கு மதிக்கப்பெற்று வரும்
கைலாச நாடு தேயிலையை விற்பனை செய்ய

## நகரங்கள்தோறும் ஏஜண்டுகள் தேவை.

இந்தியாவின் அபிவிருத்தியை விரும்பினால்
சுதேசக் கைத்தொழிலை ஆதரியுங்கள்.

இந்தியர் முதல்!　　இந்தியர் உழைப்பு!!　　இந்தியர் கைத்தொழில்!!!

நிறத்திற்கும் மணத்திற்கும் குணத்திற்கும் உருசிக்கும்
உத்திரவாதம்.

பலவகை வளமிகுந்த திருவாங்கூரைச் சேர்ந்த மேற்குத் தொடர்ச்சி மலையில் தேர்ந்தெடுத்த செழிப்பான நல்ல நிலத்தில் தேவகோட்டை லெ அரு. ராம. ராமநாதன் செட்டியா ரவர்களால் **கைலாச நாடு தேயிலைத் தோட்டம்** உண்டாக்கப்பட் டிருக்கிறது. இதிலிருந்து உண்டாகும் தேயிலையின் உயர்வைப் பற்றித் தமிழ் நாட்டாருக்கும் அயல் நாட்டாருக்கும் நன்கு தெரியும். ஐரோப்பியத் தோட்டக்காரர்களால் தயாரிக்கப்பட்ட தேயிலையை உபயோகப் படுத்தின இந்தியரனேகர் இப்பொழுது சுதேசப் பற்றுலும் உயர்வாலும் **கைலாச நாடு எஸ்டேட்டின்** தேயிலையை உபயோகப் படுத்த முன்வந்திருக்கிறார்கள்.

நமது நாட்டில் **கைலாச நாடு தேயிலை** எங்கும் எப்பொழுதும் எவருக்கும் கிடைக்கும் வழிகளைச் செய்ய முயன்று கொண்டிருக்கிறோம். ஆகையால் கீழ்கண்ட விடங்களுக்கும் இன்னும் எல்லா முக்கிய பட்டிணங்களிலும் ஊக்கமுள்ள ஏஜண்டுகள் தேவை. நல்ல கமிஷன் கொடுக்கப்படும். வேண்டும் ஏஜண்டுகள் அடியிற்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பம் செய்து கொள்வார்களாக.

| | | | |
|---|---|---|---|
| மதுரை | சேலம் | காரைக்குடி | திருப்பத்தூர் |
| திருச்சி | வேலூர் | ஈரோடு | மேலூர் |
| திருநெல்வேலி | தூத்துக்குடி | ராமநாதபுரம் | ஜோலார்பேட் |
| தஞ்சாவூர் | திண்டுக்கல் | சிவகங்கை | கும்பகோணம் |
| கடலூர் | வாணியம்பாடி | தே[illegible]ண்டி | நாகபட்டணம் |

மாதிரிகளுக்கும் மற்ற விஷய[illegible]க்கும் மானேஜருக்கு எழுதுக

**V. சா[illegible]யா பிள்ளை,**

**மானேஜர், கைலாச நாடு எஸ்டேட்,**

**தேவாரம் P. O., (மதுரை ஜில்லா).**